உத்தம
கிறிஸ்தவன்
DAVID

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உத்தம கிறிஸ்தவன்

ஜி. கிறிஸ்தியான் உவைஸ்

பிரசுரிப்பவர்:

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்

158, புரசவாக்கம் ஹைரோடு

மதராஸ்.7

Translated and printed in Tamil by kind permission and assistance of the author

மொழி பெயர்த்தவர் :

D. ASIRVATHAM

TAMIL BAPTIST CHURCH

MADRAS-23

பொருளடக்கம்

அதிகாரம் பக்கம்

1. இரட்சிப்பில் தேவன் செய்கிற காரியம் ... 1
2. இரட்சிப்பில் நீ செய்யவேண்டிய காரியம் ... 9
3. உன் இரட்சிப்பின் நிச்சயம் ... 19
4. தேவனோடுள்ள உன் ஐக்கியம் ... 35
5. தேவனுடைய பிள்ளைகளோடு உன் ஐக்கியம் ... 47
6. உன் ஆவிக்குரிய ஆகாரம் ... 57
7. உன் ஆவிக்குரிய ஆகாரம் (தொடர்ச்சி) ... 67
8. பிறருக்கு முன்பாக உன் பகிரங்க சாட்சி... 73
9. ஆத்தும ஆதாயம் செய்வதில் உன் உத்திரவாதம் ... 87
10. உலகத்தோடு உன் உறவு ... 99
11. உன் உள்ளான சகாயம் ... 111
12. உன் தொழுகை ... 121
13. உன் உக்கிரான ஊழியம் ... 131
14. படுகுழிக்கு விலகுதல் ... 139

அத்தியாயம் 1.

இரட்சிப்பில் தேவன் செய்கிற காரியம்

தேவனோடுள்ள நம் சம்பந்தத்தை நாம் யோசிக்கும் பொழுது முதலாவது நம் யாவருக்கும் எதிர்படுவது பாவமே. சிலர் பாவமுண்டு என்று ஒப்புக்கொள்ளா விட்டாலும், ஓர் அளவிலாகிலும், பாவ உணர்ச்சி எல்லா மனிதருக்குமுண்டு. ஒருவன் ஜெபிக்கும்பொழு தாவது, அல்லது, சகாயத்தைத் தேவனிடத்தில் நாடும் பொழுதாவது, அவனுக்குள் உள்ளான பாவ உணர்ச்சி உடனே எழும்ப ஆரம்பிக்கிறது. பாவத்தால் நிறைந் திருக்கிற ஒருவன் எப்படி தேவ பிரசன்னத்தைப் பெறக் கூடும்? பரிசுத்தக் கடவுளோடு இப்படிப்பட்ட ஒருவன் எப்படி ஐக்கியமாகக்கூடும்? தேவனை நாடும் உள்ளத் திலே எழும்புகின்ற முதற்கேள்விகள் இவையாகும்.

இவ்விதமான பாவ உணர்ச்சி ஒருவன் குழந்தைப் பருவத்தே பயிற்றுவிக்கப்பட்டதின் பயனுமல்ல, அல் லது வேதத்தை அறிந்து வாசித்ததினாலுண்டானதுமல்ல, இவ்விதமான உள்ளான பாவ உணர்ச்சி அஞ்ஞான நாடுகளிலுள்ள 'மக்களுக்குங்கூட அவர்கள் தேவனைக் கிட்டிச் சேர விரும்பும் பொழுது உண்டாகிறது. அஞ் ஞானிகளுடைய மார்க்கமானது இடைவிடாது பாவ சாந்தியை அடைய முயற்சித்துத் தேவனுடைய வெறுப் பைத் தணிக்க முயல்கிற தன்மையுடையது. சர்வ லோகம் எங்குமுள்ள அஞ்ஞானிகளுடைய பலிபீட மானது மிருகங்களின் அல்லது மனுஷர்களின் இரத்தத் தால் கறைப்பட்டிருக்கிறது; ஏனெனில், பாவ உணர்ச்சி சர்வலோகம் எங்குமுள்ள மனிதவர்க்கத்திலுமுண்டு.

கிறிஸ்தவ சத்தியமும், வேதமுமின்றி அந்தகாரத்திலிருக்கிற அஞ்ஞானிகளைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் சொல்வதாவது, "அவர்களுடைய மனசாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லை என்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும் நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்." ரோமர் 2: 15.

நீயும்கூட ஏதோ ஒரு காலத்தில் பாவத்தை முகமுகமாய்ச் சந்திக்க நேரிடும். உன் இரட்சிப்பைக் குறித்தும் தேவனோடு ஒப்புரவாகுதலைக் குறித்தும் யோசிக்கும் பொழுது பாவமானது உனக்கும் தேவனுக்கும் நடுவே நிற்பதான கடக்கக்கூடாத அரண்போலிருக்கிறது. நீ பாவம் செய்திருக்கிறாய் என்று உன் மனச்சாட்சி உனக்குச் சொல்லுகிறது. பாவத்தை உணர்த்துகிற தேவ ஆவியும் நீ பாவம் செய்திருக்கிறாய் என்று சொல்லுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாய் வேதாகமம் நீ பாவம் செய்திருக்கிறாய் என்று அறை கூறுகிறது. "எல்லோரும் பாவம் செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்" என்றும், (ரோ. 3:23) "நீதிமானிலலை; ஒருவனாகிலும் இல்லை" என்றும், (ரோமர் 3: 10) "நாமெல்லோரும் ஆடுகளைப் போல வழிதப்பித்திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்" என்றும், (ஏசா. 53: 6). நம்முடைய பாவங்களைக் குறித்து வேதாகமம் மொத்தமாகவும், குறிப்பாகவும், எதிர்வாதம் செய்ய முடியாவண்ணம் சாட்சியிடுகிறது. நாம் பாவம் செய்திருக்கிறோம். நாம் பாவிகள். இதை வாசிக்கிறவனே, நீயும், மனுஷ வர்க்கம் அனைத்தும் பாவத்திற்குட்பட்டவர்கள்.

இப்பாவ உணர்ச்சிக்கு மேலாக மனித உள்ளத்திலே தேவநீதி, பரிசுத்தம் இவைகளைப்பற்றிய உணர்ச்சியும் எழும்புகின்றது. தேவன் பரிசுத்தமும், நீதியுமுள்ளவராயிருக்கிறார். தேவன் நீதியுள்ளவராயிருப்பதினால் தேவன் பாவத்தைப் பார்க்கவோ, அல்லது சகிக்கவோ கூடாதவர். அப்படிக் கூடுமானால், அவர் தேவனல்ல. பாவத்திலே கண்சாடையாயிருப்பது கடவுளின் சுபாவமுமல்ல. இதை நாமனைவரும் உணருகிறோம். நீதிமன்றத்திலேயிருக்கிற ஒரு நல்ல நீதிபதி எல்லா தப்புச் செயல்களையும் தண்டிக்கவேண்டும். அவன் அவ்விதம் செய்யாது போனால் தன் பதவியிலிருந்து புறம்பாக்கப்படுவானே. நீதிபதி நீதி செய்யவேண்டும். அவன் நியாய தண்டனையை அப்புறப்படுத்தக்கூடாதே. எந்தக் குற்றவாளியையும் மன்னித்து விடுதலை செய்யத் துணியான். நியாய ஆசனத்திலே நியாயாதிபதியாக அமர்ந்திருக்கும் அவன் சட்டத்தைப் பற்றிய நம்முடைய மேலான எண்ணத்திற்கிசையக் குற்றவாளியைத் தப்பவிட்டான். நீதிபதி தன் உள்ளத்திலே குற்றவாளியைத் தண்டனைக்குத் தப்புவிக்க விரும்பலாம், ஆயினும் எந்தச் சமயத்திலும் அவன் அப்படிச் செய்யக் கூடாதே. குற்றவாளியைக் குறித்து பரிதபித்து, மனதுருகி, இரக்கம் பாராட்ட எண்ணினாலும் நீதி அவனைத் தடுக்குமே. இதுவே பாவமான மனித வர்க்கத்திற்கும், நீதிபதியாகிய கடவுளுக்குமுரிய காரியம். தெய்வீக நீதியோ மனிதப் பாவ பழியைக் குறித்து கண்சாடையாயிராது.

மனிதர் பாவிகளாயிருந்தாலும் கடவுள் அவர்களைச் சிநேகிக்கிறார் என்பது திண்ணம். தேவ அன்பு என்பது

வேதாகமத்தில் ஒரு பிரதான பொருளாயிருக்கிறது. முழு மானிட வர்க்கத்தையே கடவுள் சிநேகிக்கிறார். நீ மனிதனாயிருப்பதினாலேயே தேவன் உன்னில் கிருபையாய் அன்புகூருகிறார். அவர் அன்பைச் சம்பாதிக்க நீ ஒன்றும் செலுத்தத் தேவையில்லை. முழு உலகிலே நீ ஒன்றுமில்லாதிருந்தாலும், எல்லா மானிட அன்பும் வற்றிப் போனாலும், அல்லது உன்னைவிட்டு நீங்கிப் போனாலும், தேவன் உன்னை சிநேகிக்கிறார் என்ற உண்மையிலே நீ அமைதிகொள்ளலாம்.

நண்பா! உண்மையாகவே நீ இதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று வேதாகமம் சொல்லுகிறது (யோ. 3: 16). "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5: 8) "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்" (எரே. 31: 3). "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்" (சங். 27:10). இயேசு கிறிஸ்து சொன்ன கெட்ட குமாரனின் உவமையிலே பாவிகளின் மேலுள்ள தேவ அன்பு அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது (லூக். 15ம் அதி). மகன் தந்தையைப் பிரிந்து தூரம் போய், பாவப் படுகுழியிலே வீழ்ந்திருந்தாலும், அவனில் அப்பன் அன்பு கூர்ந்து, ஆனந்தக் கண்ணீர் ஒழுக மன்னித்து முத்தமிட்டானே.

கடவுளோ இதற்கெல்லாம் மேம்பாடான கிருபை மிகுந்தவர். இரக்கமும், அன்பும் எப்பொழுதும் இசைந்

திருக்கும். இவைகளை ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாது. அன்பு தேவனில் வாசம் பண்ணுவதுபோலவே, இரக்கமும் மட்டற்ற நித்தியமாய்த் தேவனில் இருக்கிறது. சங்கீதக்காரன் சொல்லுகிறபடி "அவர் கிருபை என்றென்றுமுள்ளது." இரக்கம் எப்பொழுதும் தண்டனையையல்ல, மன்னிப்பையே விரும்புகிறது. கிருபை எப்பொழுதும் கருணை பாராட்டி, தண்டனையை விலக்கி மன்னிப்பருளி, குற்றவாளியை ஆக்கினைக்குத் தப்புவிக்கப் பரிந்து பேசுகிறது.

தேவன் நீதியும் இரக்கமுமுள்ளவர்; பாவியினிடத்திலே இதை அவர் எப்படிக் காண்பிக்கமுடியும்? நீதி நம் பாவம் தண்டிக்கப்பட வேண்டுமென்கிறது. என்றாலும் தேவ அன்பு பாவியின் மன்னிப்புக்காக மன்றாடுகிறது. இது எப்படியாகும்? ஒரே வேளையில் கடவுள் பாவியை எப்படி தண்டிக்கவும், மன்னிக்கவும் கூடும்? தண்டனையும் மன்னிப்புமாகிய இவ்வித காரியமாகிய நம் இரட்சிப்பைக் கடவுள் எப்படி ஒரே வேளையில் நிறைவேற்றக்கூடும்?

தேவனுக்குத் துதியுண்டாவதாக. கடவுளின் மற்றோர் தன்மை ஞானமே. தம் அளவிட முடியாத ஞானம் அன்பினால் ஆளப்பட்டு இப்பெரிய சிக்கலான நம் இரட்சிப்பிற்குச் சிலுவையே நிவாரணமாயிற்று. தேவன் சிலுவையிலே தம் நேச குமாரனையே பாவிகளுக்காக மரிக்கச் செய்து, அவர்கள் பாவத்திற்கான தண்டனையை முற்றுமாய்ச் செலுத்தி, இவ்விதமாய் நம்மனைவருக்கும் இரட்சிப்பின் வழியை உண்டாக்கினார். சிலுவையிலே நீதி பூரணமாய்ச் செலுத்தப்பட்டு, பாவம் முழுவது

மாய்த் தண்டிக்கப்பட்டது. கிறிஸ்து நித்தியமானவரான திருலே, தெய்வீக நீதியின்படி நம் பாவங்களுக்குரிய நித்தியமான தண்டனையைச் சிலுவை மீதே செலுத்தித் தீர்த்தார். பாவம் கண்சாடையாய் விடப்படாமல் தண் டிக்கப்பட்டாயிற்று. "கர்த்தரோ நம்மெல்லோருடைய அக்கிரமங்களையும் அவர்மேல் விழப் பண்ணினர்" (ஏசா. 53: 6). "கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக் காக மரித்தார்" (1 கொ. 15: 3). "கிறிஸ்துவும் அநீதி யுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களி னிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்" (1 பேதுரு 3: 18). "அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங் களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" (1 பேதுரு 2: 24). அவர் மரித்தபோது சொன்ன சில வார்த்தைகளில் ஒன்று "முடிந்தது" என்பதே. இதன் அர்த்தம் என்ன? மனுஷ பாவத்திற்காகப் பிராயச்சித்த பலி முடிந்தது என்பது பொருள். நீதி செலுத்தப்பட்டு, விலைக் கிரயமும் செலுத் தப்பட்டதால், பாவிக்கு இரக்கம் கிடைக்கக்கூடும்.

இவ்வாருக நாம் பார்ப்பது சிலுவையில் தானே தேவ நீதியும் இரக்கமும் காட்டப்பட்டது. தேவ பரிசுத் தத்திற்கு ஏற்கப் பாவத்திற்குரிய தண்டனையும், அவரின் இரக்கத்திற்கிசைய மனிதனுக்குப் பாவ மன்னிப்பும் திருப்தி செய்யப்பட்டாயிற்று. "அது தேவ பலமும், தேவ ஞானமுமாயிருக்கிறதென்று" (1 கொரி. 1: 24) பவுலார் சொன்னது ஆச்சரியமன்று. மட்டுக் கடங்கா தேவஞானம் மட்டுமே இவ்வித ஆச்சரியமும், பூரணமு மான இரட்சிப்பின் ஒழுங்கைச் செய்யக்கூடும். சிலு வையே நம் இரட்சிப்பிற்கு நிவாரணம். சிலுவை மட்டுமே உன் தேவையையும், என் தேவையையும்

அளிக்கக்கூடியது. சிலுவையில் மாத்திரமே நீ பாவ மன்னிப்பைப் பெறக்கூடும். சிலுவையில் மட்டுமே பரிசுத்த கடவுள் நம் போன்ற பாவ தோஷிகளுக்கு மன்னிப்பை அருளி மகிழக்கூடும். இது பற்றியே பவுலாரும் ஆனந்தப் பரவசமடைந்து "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" என்று முழக்கமிடுகின்றார்.

இரட்சிப்பில் கடவுள் செய்த காரியம் சிலுவையே. அது முற்றும் கடவுளின் வேலை. நாம் அதனோடு ஒன்றும் சேர்க்கத் தேவையில்லை. நீதியும் அன்புமயமான கடவுள், பாவ தோஷியான மனுகுலத்திற்குத் தம் கருணையால் நீதியான இரட்சிப்பின் மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இரட்சிப்பு கடவுள் தம் ஞானத்தாலும், அன்பாலும், கருணையாலும் சம்பாதித்த சிரேஷ்டமான வேலைப்பாடாகும்.

அத்தியாயம் 2.

இரட்சிப்பில் நீ செய்யவேண்டிய காரியம்

கிறிஸ்துவானவர் நமக்காக மரித்து நமது பாவத்தைத் தீர்த்துவிட்டதுண்டானால் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படுவார்களோ? நாம் இரட்சிக்கப்பட ஏதாகிலும் ஒன்று செய்ய வேண்டாமா? ஆம், வேதாகமம் சொல்லுகிறபடி, "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்பதே கேள்வி. சுவிசேஷத்தை அறிந்தாலும், அறியாவிட்டாலும் பாவ உணர்வடைகிற எல்லா உள்ளமும் இக்கேள்வியைக் கேட்கும். கடவுளின் இரட்சிப்பையும், கூட்டுறவையும் நாடுகிற எந்த உள்ளமும் இயற்கையாக முதலாவது "இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கும். கடவுள் ஏற்கனவே தங்கள் இரட்சிப்பின் வேலையை முடித்து வைத்திருக்கிறதை அநேகர் அறியாது, கண்மூடிகளாய்த் தாங்கள் ஏதாகிலும் ஒன்று செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினுல் அலைக்கழிக்கப்படுவது அவர்கள் துரதிர்ஷ்டமே. எனினும், இக்கேள்வியானது, நியாயமாயும், இயற்கையாயும் உண்மையாயும், தவிர்க்கமுடியாததாயுமிருக்கிறது.

கிறிஸ்துநாதர் கிருபையாய் மரித்ததினுல் மனிதர் யாவரும் மொத்தயாய் இரட்சிக்கப்படமாட்டார்கள். ஆனுல் தனி ஆளாய்ச் செய்ய வேண்டிய காரியமுமுண்டு. நாம் செய்ய வேண்டிய காரியமோ எளிதாயும், சிறியதாயுமாமிருக்கிறது என்பதைத் திட்டமாய் மனதில் வை. கிறிஸ்துவானவர் நமக்காகச் சிலவையிலே செய்தவைகளை எளிதான நம்பிக்கையினுல் ஏற்

றுக்கொள்வதுதான் நாம் செய்யவேண்டிய காரியம். கிறிஸ்துவானவர் நமது நிமித்தம் செய்தவைகளை நாம் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, நம்பி, ஒப்புக்கொள்வது தான் நம் கடமை.

உன் விஷயத்திலோ இரட்சிப்பு மிக எளியது. அது விசுவாசம்தான். “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” என்று திருவசனம் கூறுகிறது (எபே. 2: 8). பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலைக்காரன் பவுலையும், சீலாவையும் நோக்கி “ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று வினவிய பொழுது, பிரதான அப்போஸ்தலன் நம்பிக்கையற்ற அவனுக்குச் சுருங்கச் சொல்லி விளக்கியதாவது, “இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்” என்பதே (அப். 16: 31). ஆம், இரட்சிப்பு உன் பக்கமாய்ச் சொன்னால் அது விசுவாசம் மாத்திரமே. ஒரு குழந்தையைப்போல் எளிதாய் நம்புவதே அவ்விசுவாசம். இதற்கு மேலாக வேறெந்தத் தேவையும், செய்கையும் வேண்டியதில்லை.

ஒரு வேளை உன் உள்ளத்திலோ வேறொரு கேள்வி எழும்பலாம். விசுவாசம் என்றால் என்ன? என்பதுதான். விசுவாசம் இன்னதென கிரகித்துக் கொள்ளவும் கடவுள் மேல் விசுவாசம் வைக்கவும் கஷ்டமாகத் தெரியலாம், என்றாலும் அது எளிதான காரியம்தான்.

விசுவாசம் முதலாவது, ஞானமும் அறிவுமுடையதாயிருக்கிறது. சாதாரண உலக பிரகாரமான விசுவாசத்திலும் இது உண்மையே. நீ ஒன்றும் அறியாத ஒரு காரியத்தை நம்பமாட்டாய். எந்தக் காரியத்தைக் குறித்து

நாம் கேள்விப்பட்டோமோ அல்லது கற்ருேமோ அதற்குப் பிரதிபலனுக நாம் அதை நம்புகிருேம். நீ ஒரு காரியத்தைக் குறித்துக் கேள்விப்படும்பொழுது நீ அதை நம்புவாய் அல்லது நம்பமாட்டாய். சிலுவையைப் பற்றியும், சிலுவையிலே கிறிஸ்து செய்ததைப் பற்றியும் அறிகிற அறிவும், ஞானமும் இரட்சிப்புக்குரிய விசுவாசத்திற்குத் தேவை. கிறிஸ்து தன் பாவங்களுக்காக ஒரே தரம் மரித்து, தன் பாவமனைத்தையும் தீர்த்து விட்டார் என்றும், தான் அதை ஏற்றுக்கொள்வதல்லாமல் வேருென்றும் செய்ய வேண்டியதில்லை என்றும் ஒரு ஆத்துமா கேள்விப்பட்டு அதைத் தனக்குள்ளே பற்றிக்கொள்ளுமட்டும், இரட்சிப்புக்கேதுவான விசுவாசம் அந்த ஆத்துமாவுக்குள் இன்னும் பிறக்கவில்லை.

கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார் என்றும், இரட்சிப்பு முற்றுப்பெற்ற வேலைப்பாடென்றும், கிறிஸ்து அதைத் தனக்காகவே செய்தார் என்றும், இம் மாட்சிமையான சுவிசேஷ சத்தியத்தை, எந்த ஆத்துமா கேள்விப்பட்டு அதைத் தனக்குள்ளே உண்மையாய்ப் பற்றிக்கொள்ளுமோ, அந்த ஆத்துமாவுக்குள் விசுவாசமாகிய வித்து இருக்கிறது. ஒரு முறை பற்றிக்கொண்டால் விசுவாசம் நன்ருய் ஆரம்பித்துவிட்டது. விசுவாசம் வந்த இரவை நான் ஒருபோதும் மறக்க முடியாது. தேவனுடைய மனுஷர் ஒருவர் நீண்டநேரமாக சிலுவையையும், இரட்சிப்படையும்படி அழைக்கிற கிறிஸ்துவின் அழைப்பையும் காண்பித்தபொழுது நான் என் பாவத்தையும் என் அபாத்திரத் தன்மையுமே கண்டேன். அவர் ஜெபித்தார். நானும் ஜெபிக்க முயற்சித்தேன். ஆனல் நான் அன்று மாலை கூட்டத்தை விட்டபொழுது,

நிர்ப்பந்தமும், ஆவிக்குரிய அந்தகாரமும் என்னை மூடின. எப்படியும் நான் என் வீடு சேர்ந்து, என் படு கையருகில் முழந்தாளில் நின்றபோது இயேசு கிறிஸ்து என் எல்லா பாவங்களுக்குரிய தண்டனையை நிச்சய மாகவே செலுத்தித் தீர்த்துவிட்டார் என்னும் உண்மை என் உள்ளத்தில் திடீரென உதயமாயிற்று. கிறிஸ்து எனக்காக, என் பாவங்களுக்காகப் பிராயச்சித்த ப யாகவே மரித்தார் என்றும் தெய்வீக இரட்சிப்பின் ஒழுங்கை முதல் முதல் நான் அறிந்துகொள்ளவே, விசு வாசம் என்னில் உதயமாயிற்று. கல்வாரிச் சிலுவையிலே கிறிஸ்து செய்து முடித்தது இன்னதென்பதை அப் பொழுது அறிந்துகொண்டேன். இவ்வித அறிவு விசு வாசத்தின் ஆரம்பமாகும்.

தீர்மானத்தோடுகூடிய விசுவாசமே விசுவாசம். சிலுவையின் வேலைப்பாட்டினாலுண்டான மகிமையான சத்தியம் உள்ளத்தைக் கவர்ந்துக்கொள்ளும்பொழுது ஒரு தீர்மானம் செய்யப்பட வேண்டியது அவசியம். அதாவது, பாவத்தைவிட்டு மனந்திரும்புவதும், கிறிஸ் துவை ஏற்றுக்கொள்வதும் என்பதே. இரட்சிப்பைப் பற்றிய அறிவு உள்ளத்தைக் கவரும் பொழுது இவ்வித மான விசுவாசம் தீர்மானிக்கப்படவேண்டும். கிறிஸ்தவ குடும்பங்களிலே வளர்க்கப்பட்ட அநேகர் வாழ்நாளெல் லாம் சுவிசேஷ போதனையைப் பெற்றிருந்தும், கிறிஸ் துவை ஏற்றுக்கொள்ள இன்னமும் தீர்மானஞ் செய்ய வில்லை.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தீர்மானிப்பது, பாவத்தைவிட்டு மனந்திரும்பத் தீர்மானம் செய்வதோடு

சேர்ந்திருக்கிறது. ஆவிக்குரிய சத்தியத்தை ஓரளவு அறிந்திருக்கிற யாவரும், கிறிஸ்துவின் பின் செல்வதென்றால் பாவத்தை விட்டுவிட வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள். இதை அறியாதோர் இன்னமும் விசுவாச அறிவுக்குள் வரவில்லை. அநேகர் தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்ப மனமற்று கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாவண்ணம் தடுக்கப்படுகின்றனர். தீர்மானம் செய்யப்படவேண்டும். கிறிஸ்து சிலுவைமீது எனக்காகச் செய்ததை நான் இப்பொழுது அறிந்துகொண்டதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருக்குப் பின் செல்ல மனஸ்தாபப்பட்டுப் பாவங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும் என்று நான் தீர்மானிக்க வேண்டும். சிலர், இரட்சிப்பு என்றால் என்ன? கிறிஸ்துவை ஏற்றுக்கொள்து என்றால் என்ன? என்கிற சத்தியமெல்லாவற்றையும் முழுவதுமாய் அறிந்திருந்தும் தங்கள் பாவங்களிலே செல்லவும், கிறிஸ்துவைத் தள்ளிவிடவும் தீர்மானிப்பது எத்தனை பரிதாபமான காரியம். விசுவாசம் தீர்மானத்தையுடையது. இப்படிப்பட்டவர்களுக்கு உண்மையான விசுவாசமில்லை. விசுவாசம் மனமும், சித்தமுடையதாயிருக்கிறது. கிறிஸ்து எனக்காக மரித்ததினால் எனக்கும் என் இரட்சிப்பிற்கும் இடையே நிற்பது என் சுய சித்தம்தான். கிறிஸ்து என் பாவ பழியை எல்லாம் சிலுவையிலே தீர்த்துப் போட்ட காட்சியை நான் காணும்போது என் தீர்மானம்தான் என்ன?

இரண்டொரு உதாரணங்களைக் கவனிப்போம். நீ மரணத்திற்கேதுவாய் வியாதிப்பட்டிருக்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். உனக்கிருக்கும் பிணியைத்

தீர்க்கத் தக்கதான வைத்தியனை உன் இனத்தார் அறிவார்கள். அந்த வைத்தியன் உன் படுக்கையண்டையில் வருகிறார். அவர் உன் வியாதியைக் கண்டுபிடித்து அதற்கான மருந்தை எழுதியிருக்கிறார். அவர் எழுதிய மருந்து அதிக விலையேறப்பெற்றது. ஆயினும் உன் இனத்தவர் அதிக கஷ்டத்தோடு அதை வாங்கி வைத்திருக்கின்றனர். அம்மருந்து உன் படுக்கையினண்டையில்தான் இருக்கிறது. அதனால் நீ வியாதியினின்று விடுதலை யடைந்தாயோ? இல்லவே இல்லை. நீயோ அதை உட்கொள்ள மறுத்தால் சாவாய், ஆனால் நீ அதை உட்கொண்டாலோ பிழைப்பாய். இரட்சிப்பும் இதைப் போன்றதே. நீ நன்மையடைய வேண்டுமானால் கிறிஸ்து உனக்காகச் செய்ததை நீ இப்பொழுதே ஏற்றுக்கொள்ளமாட்டாயா?

நீ ஆகாய விமானத்தில் இங்கிலாந்து தேசம் போக வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். உன் அனுமதிச் சீட்டை விலைகொடுத்து வாங்கினாய். அது உன் கையிலுண்டு. நீ விமான நிலையத்தில் விமானத்தைக் கண்டு 'அந்த விமானத்தை நான் நம்புகிறேன்' என்று சொல்லி அதை மிகவும் அதிகமாய்ப் புகழ்ந்து பேசுகிறாய். இவ்விதமான அறிவும், நம்பிக்கையும் உன்னைக் கடல் தாண்டி அக்கரைப்படுத்துமோ? இல்லவே இல்லை. நீ விமானத்தைப்பற்றிச் சொன்ன உன் விசுவாசத்தின்படியே, உன் காலின் முதல் அடியை எடுத்து விமானத்தில் வைத்து நீ அதனுள் நுழைந்தால் அன்றி, அது உன்னை அக்கரை சேர்க்காதே. கிறிஸ்துவும் இப்படியே இரட்சிப்பின் விமானமாயிருக்கிறார். இது தவறாத விமானம். இப்பொழுதே நீ உன் விசுவாசமாகிய முதல்

அடியை எடுத்து வைத்துக் கிறிஸ்துவாகிய விமானத்தில் நுழையமாட்டாயா?

நீ உன் தீர்மானத்தைச் செய்திருக்கிருயா? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாயா? உன் பாவங்களை விட்டு மனந்திரும்பி உண்மையாகவே அவரைப் பின்பற்ற உன் உள்ளத்தில் தீர்மானித்தாயா? இல்லையேல், இதை இப்பொழுதே தீர்மானிக்கமாட்டாயா? கிறிஸ்துவை நீ என்ன செய்யப் போகிருய்? அவர் உனக்காகவே மரித்து, பூரணமும், இலவசமுமான மன்னிப்பை அருளப் பரிந்து மன்ருடுகிருர். நீ செவி சாய்க்க மாட்டாயா? கிறிஸ்துவைப் பற்றிய உன் விருப்பத்திற்கும், உன் அறிவுக்கும் பதில் என்ன?

இவ்விதமான தீர்மானத்தைச் செய்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இது தீர்மானங்களிலெல்லாம் விசேஷித்தது. ஏனெனில் நீ அவைகளை நித்தியத்திற்கு என்று தீர்மானித்திருக்கிருய். நீ அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றி, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பாவங்களை விட்டு மனந்திரும்பினுல் உன் இரட்சிப்பு நித்தியத்திற்கென்று, முத்திரையிடப்பட்டாயிற்று.

விசுவாசம் வேதாகமங்களின் வாக்குத்தத்தங்களை நம்புகிறதாயிருக்கிறது. திருவசனம் கூறுகிறதாவது, "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோ. 1:12) 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்

பொழுது இரட்சிக்கப்படுவாய்'' (அப். 16: 31). கிறிஸ்து தாமே திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைகளைக் கேள், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை'' (யோ. 6: 37). "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத். 11: 28). "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான்'' (யோ. 3: 15).

தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்வாரா? கிறிஸ்து தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவாரா? இதிலே நம் இரட்சிப்பு சார்ந்திருக்கிறது. இதன் பேரில்தான் நமது விசுவாசம் கட்டப்பட்டிருக்கிறது. விசுவாசம் தேவனுடைய வார்த்தையையும் வேதாகமத்தையும் நம்பும். தேவனுடைய வார்த்தையை நீ நம்பி சார்ந்துகொள்ளாதுபோனால், வேறொன்றையும் நம்ப வழியில்லை. ஆனால் அவர் வார்த்தை உறுதியானால், நமது இரட்சிப்பு பத்திரப்பட்டிருக்கும்.

விசுவாசம் இரட்சிப்பின் ஒரே நம்பிக்கையாகச் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையே அண்டிக்கொள்வதாயிருக்கிறது. நீ சிலுவையின் ஆவிக்குரிய எல்லா முக்கியமான காரியங்களையும் அறியக்கூடாதவனாயிருக்கலாம். அல்லது பிராயச்சித்த பலியின் எல்லா வேத சாஸ்திர விளக்கங்களையும் நீ அறியாதிருக்கலாம்; ஆனால் கிறிஸ்து உன் பாவத்திற்குப் பரிகாரம் செய்ததால் இதுவே உன் இரட்சிப்பின் நம்பிக்கை என்பதை அறிந்திருக்கக்கூடுமே. சிலுவையிலறையுண்ட இரட்சகரையே உன் எளிதான விசுவாசத்தால் அண்டிக்கொள்.

"பிளவுண்ட மலையே! புகலிடம் தாருமே" என்று
லுவையிலே தஞ்சம் புகுந்துகொள்ளும் விசுவாசம் தான்
ரட்சிப்புக்குரிய விசுவாசம். ஒரு கிறிஸ்தவர் தன்
ரட்சிப்பைப் பற்றிய கடும் சந்தேகங்களையும், கஷ்டங்
ளையும் என்னை நம்பி என்னிடம் அவற்றைச் சொன்
ர். நான் அவருக்குக் கூறிய பதிலாவது: "மறுமுறை
ப்பொழுதாவது சந்தேகங்கள் உமக்குள் எழும்போது,
பின்வருமாறு உமக்குள் சொல்லும்" என்றேன்.
கிறிஸ்து நாதரே, நீரே என் இரட்சிப்பின் ஒரே நம்
க்கை. நான் உம்மிலும், உம் சிலுவையிலும் மட்டுமே
ம்பிக்கை வைப்பேன். எது நேரிட்டாலும், நான் நரக
தாளமே செல்ல நேரிட்டாலும், உம்மிலே தஞ்சம்
குந்து, உம்மையே சார்ந்து அங்கும் செல்லுவேன்"
ன்பதே. நீயும் சோதிக்கப்படும்பொழுது இப்படியே
சய்.

அத்தியாயம் 3.

உன் இரட்சிப்பின் நிச்சயம்

இரட்சிப்பைப் பற்றிய நிச்சயத்தை நாம் அடைய டியுமா?

சில மதாபிமானிகள் சொல்வது, ஒருவன் தான் ரித்து, தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக ற்கும் மட்டும் நித்திய ஜீவனையுடையவனுவானே இல்லை யா, என்று தான் அறிவது கூடாத காரியம் என்கிறார் ள். தங்கள் இரட்சிப்பின் நிச்சயத்தையுடையவர்கள் தைப்பற்றிச் சாட்சி கூறும்பொழுது, இப்படிப்பட்ட றிஸ்தவர்கள் பிரமித்து நிற்கின்றனர். அல்லது அவர்களை கழ்கின்றனர். மெய்யாய் இவர்கள் உண்மை கிறிஸ்தவர் ள்தான். ஆனுலோ இவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயம் ல்லை. இந்த ஜீவியத்தில் இரட்சிப்பின் நிச்சயத்தைத் ங்கள் பெற்று அனுபவிப்பது கூடாத காரியம் என்பதே வர்களின் எண்ணமாகும்.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றி நடப்பதன் முடிவு ரலோகமோ, பாதாளமோ என்று நிச்சயமில்லாது வாழ் ட்களை யெல்லாம் கழிப்பது பயனற்ற ஜீவியமாகும். றிஸ்துநாதர் என்னை நோக்கி, என்னைப் பின்பற்றி வா, ன்னை நம்பு என்றெல்லாம் சொல்லியும் நித்திய தியைப் பற்றி ஒரு நிச்சயத்தையும் தராது போனல் வர் என் இரட்சகராயிருக்க முடியாது.

இதுதான் புதிய ஏற்பாட்டின் போதனையோ? யேசு கிறிஸ்துவின் சீஷர் தாங்கள் மரிக்குமளவும்

இரட்சிக்கப்படுவோமோ, அல்லது கைவிடப் ப
வோமோ என்ற நிச்சயமின்றி அந்தகாரத்திலே தடவி
கொண்டு அலேந்தார்களா? நல்ல கடவுள் கிறிஸ்துவி
அருளுவது இதுதானு? வேதாகமம் நமக்கருளும் ந
வாக்குகள் இவைதானு? இதுதான் நல்ல கிறிஸ்தவ ஜீ
யத்தின் பங்கா? கிறிஸ்துவைப் பின்பற்றி வர நா
அழைக்கும் மற்ற ஜனங்களுக்கு முன் நாம் வைக்கு
நம்பிக்கை இதுதானு? நம்பிக்கையற்ற மக்களுக்கு மு
நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தின் நற்செய்தி இதுதானு
சுவிசேஷத்தின் செய்தி இப்படியா நிச்சயமற்று சந்தே
கத்திற்கேதுவானதாயிருக்கும்?

இரட்சிப்பைப் பற்றிய நிச்சயத்தை நாம் அடைய
முடியும். ஒரு விசுவாசி தனக்கு நித்திய ஜீவனுண்டு
என்று அறிந்து கொள்வது அவனுக்குக் கிடைக்கக்
கூடிய சிலாக்கியம். அப்போஸ்தலனுகிய யோவான்
தன் முதலாம் நிருபத்தில் சொல்வதாவது; “உங்களுக்கு
நித்திய ஜிவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ
குமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிரு
கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்”
(1 யோ. 5: 13). யோவான் விசுவாசிகளுக்கு இ
நிருபத்தை எழுதியபோது அவர்களுக்கு நித்திய ஜீவன்
உண்டு என்பதை அவர்கள் அறிய வேண்டுமென்ற
நோக்கத்தை வற்புறுத்தியிருக்கிருர். நிச்சயமாகவே விசு
வாசிகளுக்குக் கிடைக்கக்கூடிய இரட்சிப்பின் நிச்ச
யத்தைச் சிலர் மறுத்து, யோவான் இந்நிருபத்தை
வீணே எழுதினர் என்பது, இந்நிருபத்தை எழுதும்படி
யோவானே ஏவி நடத்தின பரிசுத்த ஆவிக்கே விரோத
மானது. ஒரு கிறிஸ்தவன் தான் இரட்சிக்கப்பட்டான்

ன்பதை அறிவது துணிகரம் என்று யாராகிலும் சொன்னால், "தேவனை நம்புவது துணிகரமா? அல்லது வரை நம்பாமற்போவது துணிகரமா?" என்று கேட் கிறோம்.

தங்கள் நம்பிக்கையைத் தமது பேரிலே வைக்கிற வருக்கும் இம்மையிலேயே நித்திய ஜீவனை அளிப்ப கக் கிறிஸ்துநாதர் வாக்குக் கொடுத்திருக்கிறார். கிறிஸ் வை விசுவாசித்தபின் உனக்கு நித்திய ஜீவன் உண்டு ன்பதை நம்பாமற் போவது அவரைப் பொய்யராக்கு றது.

அப்படியானால் நித்திய ஜீவன் உண்டு என்று படி ஒருவன் அறியலாம்? இந்நிச்சயத்திற்கு மூன்று தாரங்கள் உண்டு.

1. உன் ஜீவியத்திலுண்டான மாறுதல்.

2. தேவனுடைய வார்த்தையின் சாட்சி.

3. உள்ளான பரிசுத்த ஆவியின் சாட்சி. பவுல் ப்போஸ்தலனின் சாட்சியாவது, "ஒருவன் கிறிஸ்து க்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழை வைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின" ன்பதே (11 கொ. 5: 17). முதலாவது, ஒரு ஆத்துமா ண்மையான இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவை அண்டி ருகையில் அவன் வாழ்க்கையிலே தெய்வீக மாறுதல் ந்பவிக்கிறது. கிறிஸ்துவின் புதிய தன்மை அவ்வுள்ளத் ற்கு அருளப்படுகிறது. இப்புதிய தன்மையிலிருந்து யற்கையாகவே உள்ளத்திலே புதிய ஆசைகள், புதிய் ருப்பங்கள், புதிய அன்பு, புதிய பகைமை ஏற்படு

கிறது. முன்பு விரும்பின தீமைகள் இப்பொழுது வெறு பாகிறன்றன. முன்பு பகைத்த நன்மையான காரிய களில் இப்பொழுது அன்புகூருகிறுன். அவன் உ ளான நிலே முற்றுமாய் மாற்றப்பட்டிருக்கிறது. அவ தன் உள்ளான நிலேயில் மாற்றம் அடைந்ததுமட்டுமல் பிறர் காண வெளியிலும் மாற்றம் காணப்படுகிறது அவன் முழு சுபாவமே மாற்றப்படும். அவன் பேச்சு சம்பாஷணே, உச்சரிப்பு ஆகிய இவைகளிலும் மாறுதல் இருக்கலாம.

நான் குணப்பட்ட பின்னர் என் இரட்சிப்பின் அனு பவத்தைக் குறித்து என் உள்ளத்திலே சந்தேகங்கள் எழும்பின சமயங்களுண்டு. ஆனுல், எனக்குள் உறுதி யான மாறுதலேக் கண்டேன். உண்மையாய் ஜெபிக்கவும் ஆண்டவருக்குச் சேவை செய்யவும் எனக்குள் ஆசை மேலிட்டது. தேவனேடு ஐக்கியத்திற்காக என் உள்ளம் வாஞ்சித்தது. வேதத்தைக் கற்க நாட்டம் கொண்டேன் கிறிஸ்தவ மக்களோடு மகிழ்ச்சியைக் கண்டேன் சுவிசேஷ பாடல்கள் எனக்கின்பமாயின. தேவ வசனத் தைக் கற்றுக்கொள்ளக் கூட்டங்களுக்குப் போக ஆசித் தேன். நான் கிறிஸ்தவனுவதற்கு முன்பு இவையெல்லாம் என் ஜென்ம சுபாவத்திற்கு இசையாததாயிருந்தன எனக்குண்டான எல்லாமாறுதல்களிலும் விசேஷித்த வி மாய்க் குறிப்பிடத் தக்கது யாதெனில் என் சம்பாஷணே களில் தாமாகவே உண்டான மாறுதல்தான். இதற்கு முன்னே என் பேச்சு அருவருப்பானதாயும், தெய்வ பக்தியற்றதாயுமிருந்தது. அசுத்தமான பேச்சின்றிப் பேசு வது எனக்குக் கடினமாயிருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் உள்ளத்தில் வர இடங் கொடு

கவே, அவ்வித்மான பேச்சுகள் என்னைவிட்டு விலகினது எனக்கே வியப்பை உண்டாக்குகிறது.

மேலும், நான் வாலிபனாயிருந்தபொழுது அநேக தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப் பட்டிருந்தேன். அவைகள் வெற்றிலை போடுவதும், புகைப்பிடிப்பதும் தான். இவ்வித பழக்கங்களிலே அதிக ஆசையுண்டு. ஆனால் நான் குணப்பட்ட பின்னர் அவ்வித ஆசைகள் எல்லாம் மறைந்தன. என்றாலும் வேளாவேளைகளிலே அவைகளின்பேரில் ஆசை எழும்புவது உண்டு. ஆனால் அவற்றை மேற்கொள்ள எனக்குப் பெலன் அருளப் பட்டது. ஒரு கிறிஸ்தவன் புகையிலை உபயோகிக்க சோதிக்கப்படுவதால் அவன் கிறிஸ்தவன் அல்ல என்று சொல்வதல்ல, ஆனால் நான் குறிப்பிடும் விஷயம் யாதெனில், ஒருவன் ஆண்டவரைச் சந்தித்ததுண்டானால் அவனில் மாறுதல்கள் ஏற்படும். விசேஷமாக அவன் ஆசைகள் மாறுதலடையும்,

உன் விருப்பங்கள், உன் ஆசைகள் மட்டுமல்லாமல் உன் ஜீவியமும் மாறுதல் அடையும். உள்ளான உன் பாவங்கள் தெய்வ பக்திக்கு ஏதுவாக மாறும். இவ்வித வேறுபாடுகள் உன் ஜீவியத்தில் உண்டென்று உண்மையாக நீ சொல்லக்கூடுமானால் அவை பரிசுத்தாவியினால் உண்டானவைகளாகும். இதுவே நீ தேவனுடைய பிள்ளையாய்ப் பிறந்திருக்கிறாய் என்பதின் அடையாளம். மறுபிறப்பு ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆரம்பம். இந்தப் புதுப் பிறப்பும், புது ஜீவியமும் உள்ளான புதிய சுபாவமாகும். இத்தகைய புதிய சுபாவத்தை நீ உனக்குள்ளே உணர்வாயாகில் நீ தேவனால் பிறந்திருக்கிறாய் என்பதற்கு

ஒரு அத்தாட்சியாகும். இப்படிச் சொல்வதினால் பழைய சுபாவங்கள் உனக்குள் இல்லாமல் இல்லை. வேளாவேளை களில் பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும் இடையே போராட்டங்கள் உண்டு. இவ்வித போராட் டாமே நீ மறுபடியும் பிறந்திருக்கிறாய் என்பதற்கு ரூப கரமாகும். "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டும் என்றிருக்கிறவைகளைச் செய்யாத படிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக் கின்றன" (கலா. 5: 17) என்று பவுலார் கூறுகிறார். இவ் விதமான போராட்டங்கள் உனக்குள்ளே நடந்தேறுகிற தென்றால் உனக்குள்ளே புதிய சுபாவம் நாட்டப்பட்டு நீ அப்புதிய ஜீவனிலே பங்கு பெற்றிருக்கிறாய் என் பதற்கு இவைகள் அடையாளங்களாகும். உன் பழைய சுபாவம், அதாவது உன் "மாம்சம்" உன் புதிய சுபாவத் தோடு, அதாவது "ஆவியோடு" போராடுகிறது. நீ கிறிஸ் துவை உன் மீட்பராக ஏற்றுக் கொண்டதுண்டானால் உனக்குள்ளே புதிய மாறுதல் உண்டாயிருக்கிறது என்று உணருவாய். இதுவே நீ உத்தம கிறிஸ்தவனா யிருக்கிறாய், இரட்சிக்கப்பட்டு நித்தியமாய்த் தேவ னுடைய பிள்ளையானாய் என்பதற்கு அடையாளமாகும்.

இரண்டாவதாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வுக்குள்ளிருக்கிற விசுவாசிக்கு இன்னும் ஒருவகை நிச்சய முண்டு. ஏனெனில் தேவனுடைய வார்த்தை, அவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான் என்று உறுதி மொழி கூறுகிறது. வேதாகமத்தின் சாட்சி தேவன் தாமே கொடுத்த சாட்சி. ஆகவே வேதாகமம் சொல்வ தெல்லாம் நிச்சயமானவைகள். யோ. 1: 12 இல் நாம்

சிப்பது, 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாச
ள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்
ன பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய
ள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்
ர்." இங்கே நாம் தேவனுடைய வார்த்தையிலே தெளி
ய்க் காண்பது யாதெனில், எவரேனும் இயேசு
தரை விசுவாசித்துத் தமது இரட்சிப்புக்காக அவரை
ற்றுக்கொள்வாரானுல் அவர் தேவனுடைய பிள்ளை
கக்கூடும் என்பதே. அப். 13: 39ல் நாம் வாசிப்பது,
விசுவாசிக்கிற எவனும் அவைகளினின்று நீதிமானுக்கப்
டுகிருன்" என்பதன் அர்த்தம், "நீதிமான் என்று தீர்ப்
ப் பெறுகிருன்" என்பது. அதாவது பாவ பழிக்கெல்
ம் நீங்கிவிட்டான் என்று தீர்ப்புப் பெறுகிருன்.
ிறிஸ்து நாதரில் விசுவாசம் வைக்கிற எவனும் எல்லாக்
ரியங்களினின்றும் நீதிமானுக்கப் படுகிருன் என்பதை
றியலாம். ஏனெனில், வேதாகமம் இதைத் தெளிவுறக்
றுகிறது. இதைவிட வேறு எந்த உறுதி தேவை?
யா. 5:24லே ஆண்டவராகிய இயேசு சுவாமி வாக்
ளித்தது யாதெனில், "என் வசனத்தைக் கேட்டு
ன்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய
வன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல்,
ரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிருன்."
மெய்யாகவே இப்பொழுது தேவகுமாரனை உன்
ரட்சகராக விசுவாசிக்கிருயா? அப்படியானுல் அவர்
ாக்குத்தத்தத்தின்படியே உனக்கு இப்பொழுதே
த்திய ஜீவனுண்டு. நீ ஒரு போதும் ஆக்கினைக்குட்
டாய். நீ இரட்சிக்கப்பட்டாயோ இல்லையோ என்று
ணர்வதல்ல. நீ உன் உணர்ச்சியை எப்பொழுதும்

நம்ப இயலாது, ஆனால் தேவனுடைய வார்த்தை உரைப்பதை நீ எப்பொழுதும் நம்பலாமே. அநேகர் தங்கள் இரட்சிப்பின் நிச்சயத்தைத் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மூலமாய் ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் உணர்ச்சியினால் மட்டும் தேடுவதினால் தங்கள் இரட்சிப்பைக் குறித்தும், தங்களுக்கும் தேவனுக்குமிடையேயுள்ள சம்பந்தத்தைக் குறித்தும் சந்தேகிக்கிறனர். இவ்வாக்குத் தத்தங்களின் நிபந்தனையைக் கவனித்தீர்களா? கிறிஸ்து நிறைவேற்றி முடித்த வேலைபாட்டில் நாம் வைக்கும் விசுவாசம்தான் இவ்வாக்குத்தத்தத்தை நாம் பெற நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனையாகும். நீ இரட்சிக்கப்பட கிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பை விசுவாசி, வேறொன்றும் தேவையில்லை. தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, இந்நிச்சயத்தைப் பெறுவதைவிட வேறென்ன வழி உனக்குத் தேவை? லூக். 7: 48ல் குஷ்டரோகியாகிய சீமோனுடைய வீட்டிலே ஆண்டவர் பாவியான ஸ்திரீயை நோக்கி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றதும், அவள் வெளியே வந்து, "என் பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்பதை நான் அறிவேன்" என்று சொல்வது துணிகரமானதோ? அல்லது "என் பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டன என்பதைப் பற்றி நான் சந்தேகிக்கிறேன்" என்பது துணிகரமா? தேவன் தாமே தம் திருவசனத்திலே திட்டமும் தெளிவுமாய், "அவருடைய ஐசுவரியத்தின்படியே இவருடைய (கிறிஸ்துவின்) இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1; 7) என்று கூறியதினால், கிறிஸ்தவ

இன்றே இவ் வார்த்தைக்கிசைய, "நான் இரட்சிக்கப்பட்டேன், என் பாவமெல்லாம் தீர்ந்தன" என்று கூறுவது, துணிகரமா? எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவ மக்களைப் பார்த்துப் பவுலார், "கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தார்" என்கிறார் (எபே. 4: 32). அப்போஸ்தலனாகிய யோவானும் தம் முதல் நிருபத்திலே, "பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" என்கிறார் (1 யோ. 2: 12). சுவிசேஷத்திலே தேவனுடைய வாக்குத்தத்தம் யாதெனில், "அவருடைய நாமத்திலே அவரை நோக்கிக் கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" என்பதே. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உன்னை இரட்சிக்கும்படி நீ கூப்பிட்டால் அவர் உன்னை இரட்சிப்பார். தேவ வாக்கு வியர்த்தமகாதே.

1 யோ. 5: 11-12ல் நாம் வாசிப்பது, "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்தருளினார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம். குமாரனையுடையவன் ஜீவனை யுடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்" என்பதே. தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நீ உன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டாயா? அவரை உன் வாழ்க்கையிலே நுழைந்து உன் இரட்சகராயிருக்க கேட்டதுண்டோ? இச்சிறிய நம்பிக்கையினால் இப்பொழுதே நீ அவரை அண்டிக்கொள்ள மாட்டாயா? அப்படியானால் தேவ வார்த்தையின்படியே நீ நித்திய ஜீவனையுடையவனாயிருக்கிறாய்.

சாத்தான் உன் பாவங்கள் மன்னிக்கப்பட
இல்லை என்ற சந்தேகத்தை உனக்குள் உண்டாக்கினு
நீ தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிட்டுக் காட்டி
"நான் என் ஆண்டவராகிய இயேசு சுவாமியை விசுவ
சித்ததால், என் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு
தீர்ந்தன" என்று தேவன் சொல்லுகிறார். "நான் தே
னுடைய வார்த்தையை நம்புகிறேன்" என்று சொல்
மேலும் சாத்தான் உன்னிடம், "சரி, நான் அவரை ந
புகிறதில்லை" என்பானேயாகில், நீ அவனிடம், "சா
தானே, நான் அவரை இதற்குமுன் நம்பினதே இல்லை
ஆனால் நான் அவரை இப்பொழுது ஏற்றுக்கொண்
இது முதல் அவரை விசுவாசிக்கிறேன்" என்று சொல்
ஆனந்தக் களிப்புடன் உன் வழியே செல். ஏனெனி
எழுதப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தின்படியே
உன் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டன. நீ தே
னுடைய பிள்ளையாய் இருக்கிறாயே.

இதற்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். நீ சிறை
யில் அடைபடும்படி தீர்ப்புப் பெற்றிருக்கிறாய் என்
வைத்துக்கொள்வோம். உன் நண்பர் உனக்கு மன்
னிப்பைத் தேடிக்கொண்டு வந்தனர். உன் மன்னிப்பை
கூறுவதான சட்ட பூர்வமான எழுத்து உன் முன்
கொண்டுவரப்பட்டது. நீ மன்னிப்புப் பெற்றாய் என்
அதை நீ வாசித்து அறிந்துகொண்டாய். இந்நியாய
தீர்ப்பு, உனக்கு நலமாயிருந்தாலும் அவை திடீரென்
வந்ததால் நீ பிரமை கொண்டாய். நீ மன்னிப்புப்
பெற்றதை நீ உணராதிருக்கிறாய். இவ்வேளையிலே ஒ
வன் வந்து, "உனக்கு மன்னிப்புக் கிடைத்ததா?" என்
உன்னை வினவுகிறான். உன் பதில் என்ன? "ஆம்

மன்னிப்புப் பெற்றேன்'' என்கிறாய். பிறகு அவன் உன்னைப் பார்த்து,“உன் மன்னிப்பை நீ உணருகிறாயா?'' என்கிறான். நீயோ, “நான் மன்னிப்பு பெற்றேன் என்பதை உணருவதில்லை. ஏனெனில் அவை சடுதியும் ஆச்சரியமுமாயிருப்பதால் நான் அதை உணர முடிய வில்லை,'' என்கிறாய். பின்னும் அவன் உன்னை நோக்கி, “நீ உணர்ந்துகொள்ளக் கூடாதிருக்கும்போது நீ மன்னிப்பு பெற்றாய் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்கிறான். அப்பொழுது நீ உன் மன்னிப்புப் பத்திரத் தைக் காட்டி, “இப்பத்திரம் அப்படிச் சொல்லுகிறது'' என்கிறாய். இப்பொழுது வேதாகமம் தேவனுடைய அதிகாரம் பெற்ற பத்திரமாயிருக்கிறது. அப்பத்திரம் அறிவிப்பது யாதெனில், “கிறிஸ்து நாதரை விசுவாசிக் கிற எவரும் நீதிமானுக்கப்பட்டு, நித்திய ஜீவனை யடைந்து, தேவ பிள்ளையாகிறான்'' என்கிறது. எவரே னும் உன்னிடம் “உன் பாவங்கள் யாவும் மன்னிக்கப் பட்டனவா?'' என்று கேட்டால், நீ, “ஆம், என் பாவங் கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்று எனக்குத் தெரியும். தேவன் அப்படி சொல்லியிருக்கிறார்'' என்று பதிலுரை. மேலும் எவரேனும், “நீ தேவனுடைய பிள்ளையாக இருக்கிறாயா? நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறாயா?'' என்று கேட்டால், நீ, “ஆம், நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்றும், நித்திய ஜீவனைப் பெற் றிருக்கிறேன் என்றும் எனக்குத் தெரியும். தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார்'' என்று சொல். ஒரு வேளை நீ இதை இன்னமும் நிச்சயத்தோடு சொல்ல முடியாது. ஆனால் தேவனுடைய அறிக்கையைச் சிந்தனை பண்ணி, தேவன் விரும்பியதை விசுவாசித்தால்,

வேளை வரும் போது நீயும் அதைச் சந்தேகமில்லாம
சொல்லுவாய்.

விசுவாசிகளின் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பற்றி
மூன்றும் சாட்சியாவது: பரிசுத்த ஆவியின் உள்ளா
பிரசன்னமும், சத்தமுமே. வேதாகமம் கூறுவதாவ
"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்
ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட
சாட்சி கொடுக்கிறார்" (ரோ. 8; 16). இரட்சிப்பை
பற்றிய உணர்ச்சி வெறும் மனுஷ உணர்ச்சியல்ல
ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோ
என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே
கூடச் சாட்சியிடுகிறார். அது வெறும் மனதின்
உணர்ச்சியல்ல, அது பரிசுத்த ஆவியின் ஞாபக மூட்டு
லாகும்.பரிசுத்த ஆவியானவர் நாம் இரட்சிக்கப்பட்டிரு
கிறோம் என்கிற நிச்சயத்தை நாம் உள்ளான மன
சாட்சியின் மூலமாய்த் தெளிவாக்குகிறார்.

பரிசுத்த ஆவியானவர் முக்கியமாகத் தேவ வசனத்
தின் மூலமாகவே இந்த நிச்சயத்தை நமக்குள் கொண்டு
வருகிறார். எனினும் அடிக்கடி அஞ்ஞான நாடுகளிலே
வாசிக்கவும், எழுதவும் இயலாத அறியாமையும், அநா
ரீகமும் நிறைந்த ஜனங்கள் மத்தியிலும் பரிசுத்தாவியான
வர் விசேஷித்த பிரகாரமாய் இந்த இரட்சிப்பின் நிச்சயத்
தைக் கொண்டுவருகிறார். பரிசுத்தாவியானவர் நமது
உள்ளங்களைத் தேற்றரவு செய்யும்படி அனுப்பப்பட்
டிருக்கிறார். இரட்சிப்பின் நிச்சயத்தை அளிப்பது அப்
பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த தேற்றரவு வேலை
களில் ஒன்றாகும். ஒரு கிறிஸ்தவன் திறந்த உள்ளத்

தோடு வேதத்தை வாசித்துத் தியானிக்கும்போது ஆவியானவர் தேவ வசனங்களின் சத்தியத்தை எடுத்து அவன் உள்ளத்திலே பதித்து அவன் கிறிஸ்துவினுடைய வனுயிருக்கிருன் என்று சாட்சி பகர்கிருர். நாம் தேவனேடு ஜெபத்தில் ஐக்கியமாகும்போது இந்தப் பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சாட்சி இன்னமும் அதிகமாய்ப் பலப்படுத்தப்பட்டு வேரூன்றுகிறது. ஜெபம் ஒரு வெறும் மன்ருட்டு மாத்திரம் அல்ல, அது தேவனேடுள்ள அந்நியோன்னிய ஐக்கியமுமாகும். நாம் தேவனிடத்தில் பேசுவதுமட்டுமல்ல, தேவன் தாமே நம்மோடு தம் பரிசுத்தாவியானவர் மூலமாய்ப் பேசுகிருர். உன் இரட்சிப்பைக் குறித்து சந்தேகங்கள் எழும்புமாஞல் வேத வசனத்தை வாசிப்பது மாத்திரமல்ல, ஜெபத்தின் மூலமாய் அவரண்டை போ. நீ ஜெபிப்பதின் மூலமாய்ப் பரிசுத்த ஆவியானவர் உன்னேடு பேசி நீ தேவனுடைய பிள்ளையாயிருக்கிருய் என்கிற நிச்சயத்தைத் தருகிருர். ஜெபிக்காத கிறிஸ்தவ, தன் இரட்சிப்பின் நிச்சயத்தை இழந்து போகக் கூடும். ஏனெனில் நாம் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மோடு உறவாடி அந்த நிச்சயத்தைத் தருகிருர்.

உன் உள்ளத்தில் விசாரம் பெருகும்போது ஜெபத்தின் மூலமாய் நீ உன் ஆண்டவரண்டை போ. அப்பொழுது அவர் உன் உள்ளத்தைத் தேற்றி உனக்கு நம்பிக்கையையும் நிச்சயத்தையும் அளிப்பார். நீ ஜெபிக்கும்பொழுது நீ கண்டடைகிற தேறுதலும் நிச்சயமும் நீ தேவனுடைய பிள்ளையாயிருக்கிருய் உன்பதற்கு ரூபகாரமாகும். இது ஆவியானவரின் அந்நியோன்னியத்தினுல் மட்டும் உண்டாகக் கூடியது.

உன் வாழ்நாளெல்லாம் நான் இரட்சிக்கப்பட்டே
இல்லையா என்ற நிச்சயமற்றவனுயிருக்கத் தேவையில்
உனக்குள்ளும், புறமும் உண்டான மாறுதல், தே
னுடைய வசனத்தின் சாட்சி, பரிசுத்த ஆவியின் உள்ள
சாட்சி, இவையெல்லாம் சேர்ந்து நீ இரட்சிக்கப்ப
டிருக்கிருய் என்ற திடமான உறுதியை என்றெ
றும் உனக்களிக்கும். சந்தேகங்கள் உன்னைப் பி
தொடரும்போது, நீ மீண்டும் கல்வாரியை நோக்
பார்த்து, "அவர் என் பாவங்களுக்காக மரித்து, அ
ஆக்கினையை எல்லாம் அகற்றியிருக்கிருர். அவரை நா
என் பிணையாளியாக நம்பினல் அவர் என்னை மீட்பத
வாக்குத்தத்தமும் பண்ணியுள்ளார். நான் அவரை நம்
யிருக்கிறேன். அவர் தமது வாக்கின்படியே எனக்கரு
செய்ய இப்பொழுது நான் அவரைச் சார்ந்திருக்கிறே
என்று சொல்.

புதிதாய்க் குணப்பட்ட சிலர் கிறிஸ்துவின் பே
லுள்ள தங்கள் ஆதி அன்பின் சுவாலை தணியும்போ
நம்பிக்கையை இழந்து, தாங்கள் அழிந்து போனதாக
எண்ணுகின்றனர். இது அவர்களின் தவறேயாகு
நம் சரீர பலமும், உணர்ச்சிகளும், விருப்பங்களும் நா
அனுபவிக்கும் சரீர சுகத்தினலோ, சீதோஷ்ண நிலையி
லோ, அல்லது வேறு சம்பவங்களினலோ, மாறுதலன
யலாம். ஆனல் இயேசுநாதர் நேற்றும் இன்றும் எ
றும் மாருதவராயிருக்கிருர்.

சிலருக்கு உன்னத எழுப்புதலடைய சந்தோஷ
மான கூட்டங்கள் தேவை. அவர்களை உருக்கிக் க
ணீர் விடச்செய்து ஆனந்தப் பரவசமாக்குகிற கூட்ட

நல்ல கூட்டங்கள். அமர்ந்த தெய்வீக சத்தியத்தின் தேசமும், தேவ சித்தத்தை அறிய வேதப் படிப்பும், ப ஜீவியமும், தற்சோதனையும், இவையெல்லாம் வித ஆசாமிகளுக்குச் சலிப்பும், வெறுப்புமாய்க் ணும். இவர்கள் பழக்க வழக்கமான எழுப்புதல் ளயும் செவிக்கின்பமான கட்டுக் கதைகளையும் ரும்புகிறவர்கள். இவர்கள் ஸ்திரமான போதனைகளின் ரில் விருப்பமற்றவர்கள். இதை வாசிக்கும் நண்பா! ன் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே இத் கைய காரியங்களை அகற்றிவிடு. இயேசுவே உன் வாசத்தைத் துவக்குகிறவரும்' முடிக்கிறவருமாய் ருக்கட்டும்.

அதிகாரம் 4.

தேவனோடுள்ள உன் ஐக்கியம்

நீ இப்பொழுது தேவனுடைய பிள்ளையாகிவிட் ய். இவ்வுலகில் மனுஷனுக்குக் கிடைக்கக்கூடிய ரிய பாக்கியம் யாதெனில் சர்வ வல்லமையுள்ள வனோடுள்ள ஐக்கியமே. பாவியான ஒருவன் எப்படி வனோடு ஐக்கியமாக முடியும்? சிலுவையண்டை லே இது முழுவதும் கூடும். சிலுவையிலே பரிசுத் கடவுளும் பாவியும் சந்திக்கக்கூடும். ஏனெனில் வன் சிலுவையிலே பாவத்தைப் பரிகரித்தார். அங்கே வன் நம்மைச் சந்திக்கக் கூடும்.

பழைய ஏற்பாட்டிலே, மோசே தேவன் வாசம் ண்ணத்தக்கதான ஒரு கூடாரத்தை ஏற்படுத்தக் ட்ளை பெற்றான். அந்தக் கூடாரத்திலே மகா ரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கவும் அதிலே, "கிருபாச த்தை அமைக்கவும் வேண்டும்". அக்கிருபாசனம் த்தப் பசும்பொன்னால் செய்யப்பட்டது. வருஷத்தில் ரே தடவை மாத்திரம் பிராயச்சித்த பலியின் இரத்தம் தன்பேரில் தெளிக்கப்படும். இரத்தம் தெளிக்கப் ட்ட அந்தக் கிருபாசனத்தைக் குறித்துத் தேவன் ன்டைய கால ஜனத்திற்குச் சொன்னது யாதெனில், அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்" என்பதே. ருபாசனத்தண்டையிலே தேவன் இஸ்ரவேல் ஜனத்தை வர்களுடைய பிரதான ஆசாரியன் மூலமாய்ச் சந்திக் கூடும். ஏனெனில் அவர்களினிமித்தமாகத் தெளிக்கப் ட்ட பிராயச்சித்த பலியின் இரத்தத்தைத் தேவன்

ஏற்றுக்கொள்வதாக வாக்குக் கொடுத்திருந்தார். இ
பிராயச்சித்தத்தின் இரத்தமே பரிசுத்தமான கடவு
பாவியான மனிதனும் சந்திக்கக்கூடியதான வழி
உண்டாக்கிற்று. இத்தன்மைப் போன்றதே சிலு
யின் இரத்தமும். தன் பாவங்களுக்காகப் பிராயச்சி
பலியின் இரத்தம் சிலுவையிலே சிந்தப்பட்டதெ
எந்த ஆத்துமா நம்புகிறதோ, அந்த ஆத்துமா
தேவன் சிலுவையிலே சந்திப்பார். இதுமுதல் சிலு
யினாலும் சிலுவையின் வேலைப்பாட்டில் நாம் வைக்
நம்பிக்கையினாலும் தேவனோடு ஐக்கியம் ஆகக்கூ
புதிய ஏற்பாட்டிலே நாம் வாசிப்பது, "ஆகை
சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்ப
இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின்
யாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நம
உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்
யாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தி
நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,
னுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசா
நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சா
நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சு
ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உ
மையான இருதயத்தோடும் விசுவாசத்தின் பூ
நிச்சயத்தோடும் சேரக் கடவோம்" (எபி. 10: 19-
அதே நிருபத்தில் வேறொரு இடத்தில் நாம் வாசிப்
"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போ
தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆ
ரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் இரக்கத்
பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம்செய்யும் கிருபை

டையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே ரக் கடவோம்" (எபி. 4: 14, 16).

சிலுவையின்மேல் வைக்கும் நமது நம்பிக்கையின் லமாய் நாம் தேவனோடு அந்நியோன்னியம் அடையக் டும். நமக்குத் தேவனோடுள்ள இந்த ஐக்கியம் ப்படி வளர்ந்தோங்கக்கூடும்? ஐக்கியம், ஐக்கியத் லே வளர்ந்தோங்கும். நீ ஒரு ஆளைச் சந்தித்து, வனோடு நேரத்தைக் கழித்தால், அவனோடுள்ள உன் க்கியம் வேரூன்றி, உன் அந்நியோன்னியம் அதிகமாய் றுதியாகிறது. எத்தனை அதிகமாய் நேரத்தை இரு ரும் செலவு செய்கிறீர்களோ அதற்குத் தக்கப்படி க்கியம் விருத்தி யடைகிறது. இப்படியே நம்முடைய க்கியம் தேவனோடிருக்கிறது. தேவன் சம்பந்தப்பட்ட ளவிலே, கிறிஸ்து சிலுவையிலே நிறைவேற்றி டித்த வேலைப்பாட்டிலே நம்பிக்கை வைக்கிற வருக்கும் இவ்வைக்கியத்திலே இடமுண்டு. நமக்கும் தவனோடிருக்கிற ஐக்கியத்திற்கும் நமக்குள் இருக்கும் தொன்றும் தடையாயிராதபடி எச்சரிக்கையாயிருப் பாமாக.

தேவனோடுள்ள இவ்வைக்கியம் ஜெபத்தின் மூல ய் மட்டுமல்ல, தேவ வசனத்தை வாசிப்பதாலும் ளர்ந்தோங்கும். நாம் ஜெபிக்கும்போது தேவனோடு ம்பாஷிக்கிறோம்: வேத வசனத்தை வாசிக்கும்போது தவன் நம்மோடு பேசுகிறார். இவ்விதமாய் நாம் ஜபத்திலும், வேத வசனத்தை ஆராய்வதிலும் ரத்தைச் செலவிடும்போது நமக்கும் தேவனுக்கு ள்ள ஐக்கியம் வளர்ச்சி யடைகிறது. வேதத்தைப் ற்றி நாம் அதிகமாய்ப் பின்பு பார்க்கலாம்.

தேவனோடுள்ள இக்கூட்டுறவு எப்படிக் காக்கப் படுகிறது? சில வேளைகளில் பாவமானது நமது பட்சத்திலே இவ்வைக்கியத்தைக் குலைப்பதால், தேவப் பிரசன்னத்தை நாம் ஆனந்திப்பதில்லை. நமது உள்ளத்திலே பாவத்திற்கு நாம் விலகி நடக்கத் தீர்மானிப்பதாலும், நாம் பாவ உணர்ச்சியடையும்பொழுதெல்லாம் பாவத்தை அறிக்கை செய்து, அதை விட்டுவிடுவதாலுமே இக்கூட்டுறவு காத்துக் கொள்ளப்படுகிறது. அறிக்கை செய்யப்படாத பாவம் எப்பொழுதும் தேவனோடுள்ள ஐக்கியத்தைக் குலைத்து விடுகிறது. ஆனால் பாவ அறிக்கை செய்யப்பட்ட உடனே பாவத்தின் பேரிலும், தவறுதல்களின் பேரிலும் நொறுங்குண்டு நருங்குண்ட இருதயத்தைத் தேவன் நமக்குள்ளே காண்பதால் இழந்த ஐக்கியத்தை மறுபடியும் பெற்றுக் கொள்கிறோம். "நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை தேவரீர் புறக்கணியீர்" என்று தாவீது ஓலமிட்டான். இதற்கு முன்னே தாவீது மிகவும் துக்ககரமான பாவச் சேர்க்கையிலே குற்றவாளியானதால், தேவனோடுள்ள ஐக்கியம் முழுவதுமாய் சீர்குலைந்து போகவே, அவன், "உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்தாவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" என்று கதறினன். தேவன் அவனுடைய நருங்குண்ட இருதயத்தைக்கண்டு, அவன் பாவ அறிக்கையைக்கேட்ட உடனே தாவீதைத் தமது ஐக்கியத்தில் மறுபடியும் சேர்த்துக் கொண்டார்.

பாவத்தோடே நடக்கும்மட்டும் ஒருவரும் தேவனோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள முடியாது. ஒரு கிறிஸ்தவன் பாவத்திலே விழவும், சிலகாலம் அதிலே நிலைத்திருக்கவும் கூடும். ஆனால் அவன் அப்படிச் செய்வதினால் தேவனோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளக் கூடாமற்போகிறான். பாவ உணர்ச்சியடைகிற ஒவ்வொரு பாவத்தையும் தொடர்பாய் அறிக்கை செய்வதினால் மட்டுமே தேவனோடுள்ள சிநேகம் காத்துக்கொள்ளப்படுகிறது. பாவ அறிக்கை மட்டுமல்ல, தெரிந்த எல்லா பாவத்தையும் விட்டுவிடுவதாலுமே. ஆகையால் கிறிஸ்தவனே, நீ தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்தாய் என்று உணரும்போது, உடனே அவரண்டைபோய் அறிக்கை செய்து, அவருடைய மன்னிப்புக்காகவும், குணமாக்குதலுக்காகவும் மன்றாடு. அவர் தமது வார்த்தைக்கு உண்மையுள்ளவராய்த் தம்மோடுள்ள ஐக்கியத்தில் மீண்டும் உன்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் இவ்வித ஐக்கியமின்றி கிறிஸ்தவன் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. கர்த்தர் தம் ஜனம் சந்தோஷமாயிருக்க விரும்புகிறார். கிறிஸ்துவானவர் தம் சீஷர்களுக்குச் சொன்னதாவது, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்பதே (யோ. 15 : 11.) "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமை

யால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்'' (1 பேதுரு 1 : 8). அப்போஸ்தல ஞகிய பவுல் பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு, "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லு கிறேன்'' என்ருர். வேருேரிடத்தில் "தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதான மும் பரிசுத்தாவியினுலுண்டாகும் சந்தோஷமாயிருக் கிறது'' என்று எழுதினுர் (ரோ. 14: 17.)

வேதத்திலெல்லாம் தேவன் மீட்கப்பட்ட தம் ஜனம் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருக்க வேண்டு மென்று வற்புறுத்தியிருக்கிருர். ஆனுல் ஒருவன் தேவ ஞேடுள்ள அந்நியோன்னியத்தில் சீராய் நடவாத பொழுது தன் இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்து விடுகிருன். தேவஞேடு நெருங்கிய கூட்டுறவிலும், ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் ஜீவிக்கிறவர்கள் சந்தோஷமுள்ள கிறிஸ்தவர்கள். விவாக ஜீவியத்தின் சந்தோஷம் புருஷனுக்கும் மனைவிக்கும் இருக்கும் கூட்டுறவிலே அடங்கியது. அந்தச் சந்தோஷகரமான அந்நியோன்னியம் சிதைந்து போகும்பொழுது விவாகத் தின் ஆனந்தம் மறைந்து போகிறது. ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சி அக்குடும்பத்தின் எல்லா ஆட்களினிடையே யுமுள்ள சந்தோஷகரமான ஐக்கியத்தில் அடங்கி யுள்ளது. அந்த ஐக்கியம் சிதையும்பொழுது அக் குடும்பத்தின் மகிழ்ச்சி அழிந்துவிடுகிறது.

பாவத்தையும் சாத்தானையும் ஜெயிக்க ஜீவியத் திற்குத் தேவஞேடுள்ள ஐக்கியம் இன்றியமை

யாதது. ஜெபம், வேத வாசிப்பு, சாரமேற்றும் தேவனோடுள்ள ஐக்கியம் என்பவைகள் ஆவிக்குரிய பலத்திற்கு ஊற்றுகள். பின்வாங்கிப் போகிற கிறிஸ்தவன் தேவனோடுள்ள ஐக்கியத்தில் இவ்விதமான காரியங்களை விருத்தி செய்யாமல் அசட்டை செய்தபொழுது பின்வாங்க ஆரம்பித்தான். ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் தவறினால் தேவனோடுள்ள ஐக்கியத்தில் ஜீவிக்க முடியாது. நீ உன் ஆண்டவரிடத்திலிருந்து தூரஞ் செல்ல ஆரம்பிப்பாய். நீ பாவத்திலே விழுவாய். தாமதியாமல் சாத்தான் உன்மேல் ஜெயங்கொள்ளுவான். நம் பெலத்தால் சாத்தானை மேற்கொள்ளுவது நமக்கு மிஞ்சின காரியம். நாம் தேவனிடத்திலிருந்து பெலனைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அந்தப் பெலன் நாம் தேவனோடு ஐக்கியமாகிற அளவிற்குத் தக்கபடி இருக்கும். ஆண்டவரோடு ஐக்கியமாகிய ஜெப ஜீவியம் செய்யாத எந்தக் கிறிஸ்தவனும் ஆவியிலே பெலனடைந்து, பாவத்தின் பேரிலும், உலகத்தின் பேரிலும் ஜெயமடைய முடியாது. சாத்தானுக்கு அது நன்றாய்த் தெரியும். அது காரணத்தால்தான் நாம் ஜெபிக்க முடியாவண்ணம் சாத்தான் நம்மை அப்புறப்படுத்தப் பிரயத்தனிக்கிறான். நாம் ஜெபிப்பதைவிட இவ்வுலகில் வேறு எதையாகிலும் செய்யத் தூண்டுவது தான் சாத்தானுடைய ஆவல்.

நாம் ஆண்டவருக்கென்று கனி கொடுப்பதற்குத் தேவனோடுள்ள ஐக்கியம் இன்றியமையாதது. யோவான் பதினைந்தாம் அதிகாரத்தில், இயேசுவானவர் தமக்கும் தம்முடையவர்களுக்கும் இருக்கிற சம்பந்தத்தைத் திராட்சச் செடிக்கும், கொடிக்கும் உள்ள ஐக்கியத்

தால் விளக்குகிறார். கொடியானது திராட்சச் செடியிலே நிலைத்திருந்து, அதன் ஜீவனைப் பெற்றுக் கனி கொடுக்கும் தன்மையைச் செடியிலிருந்து அடைந்தால்மட்டுமே கனி கொடுக்கக்கூடும் என்று காட்டினார். பிறகு இரட்சகர் சொல்வது, "என்னில் நிலைத்திருங்கள்; நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாகக் கனி கொடுக்க முடியாததுபோல நீங்களும் என்னில் நிலைத்திரா விட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்பதே. கொடியானது திராட்சச் செடியோடு இசைந்து அதன் சாரத்தைப் பெற்றுப் பிழைக்காவிடில் சீக்கிரம் உலர்ந்து பிரயோஜனமற்றதாய்ப்போகும். அப்படியே கிறிஸ் தவர்களாகிய நாமும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவும் எப் பொழுதும் அவரோடுள்ள ஐக்கியத்தில் தங்கவும் தவறி ஞல் நம் ஜீவிய மாண்டு கனியற்றதாகும். நமது இரட்சகரில் ஜீவித்து ஐக்கியத்தில் நிலைத்திருக்கும் பொழுது மாத்திரமே நாம் கனி கொடுக்கக்கூடும். நீ ஓய்வுநாள் பாடசாலையிலே உபாத்தியாயராய் இருந் தாலோ, அல்லது வாலிபக் கூட்டத்திற்கு நீ தலைவனா யிருந்தாலோ, அல்லது நீ உன் தனி ஜீவியத்தால் ஆத்தும ஆதாயம் செய்ய முயற்சித்தாலோ, உனக்குக் கிறிஸ்துவோடு தொடர்பான ஐக்கியமில்லையானால் வேலைக்குத் தேவையான உள்ளான பெலனின்றி உன் வேலையைக் கொஞ்சமாகவோ அல்லது சூனியமாகவோ முடிப்பாய் என்பதை மனதில் வை.

பக்தியுள்ள கிறிஸ்தவர் ஒருவர் சொன்னது யாதெனில், "நீ இடைவிடாமல் கிறிஸ்துவுக்குப்

பக்கமாய் உன்னைக் காத்து, அவரையே உன் ஒரே நம்பிக்கையாகவும் அவரின் கறையற்ற ஜீவியமே உன் தெளிவான மாதிரியாகவும் நீ பார்த்தால் உன் வாழ்க்கையிலே ஆவிக்குரிய வளர்ச்சி கண்டு, வாழ்நாள் முழுதும் பிரகாசத்தின் மேல் பிரகாசம் அடைவாய்; உன் மனதிலே அறிவும், கிருபையும் உன் ஜீவியத்தில் கீழ்ப்படிதலும் இருக்கும்போது, உன் ஒழுங்கான நடக்கையை மக்கள் கண்டு உன் பரலோகத் தந்தையை மகிமைப்படுத்துவார்கள். உன்னைப் பாவத்திற்கு உட்படுத்துகிற கடும்போராட்டத்தில் கிறிஸ்து உன் பெலனாயிருந்து உன் கடைசி சத்துரு போர்க்களத்தில் மடியும்வரை அவர் உன்னைக் கைவிடாதிருப்பார். ஆத்திரமும் தீவிரமுமான இச்சைகளுக்குப் பதிலாகத் தேவனில் இளைப்பாறுதல் காண்பாய். அசுத்தமான உன் கோபம் உன்னை மேற்கொள்ளும்போது கிறிஸ்துவின் மனத்தாழ்மையினால் கீழடங்கும். பொறுமையின்மையினால் உண்டாகிற முறைப்பாடுகள் தேவ சித்தத்திற்கு அடிபணியும். உலக சிந்தைகள் தேவனோடுள்ள கூட்டுறவினாலும் நித்தியமான மகிமைக்குரிய காரியங்களின் அறிவினாலும் மேற்கொள்ளப்படும்” என்பதே.

வேறொருவர் சொன்னதாவது, “உன் மார்க்கத்தை உலக வழிகளுக்கு ஏற்கத் திருப்பிக் கொள்வதைவிட உலக வசதிகளை உன் மார்க்கத்திற்கு ஏற்றாற்போல் திருப்பிக்கொள். உன் ஜீவியத்திலுள்ள பரீட்சைகள், போராட்டங்கள் இவற்றின் இடையிலே உன்னைத் தாங்கித்தக்கப் பெலனைப் பெற்று தேவ கிருபையில் வளரும்படி விசுவாசத்தோடும் உண்மையோடும்ஜெபி. ஆனால் நீ

செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்குப் பதிலாக ஜெபிக்காதே'' என்பதே.

நம் ஜெப வாழ்க்கையிலே உயிரற்ற பழக்க வழக்க மான காரியங்களுக்கு எச்சரிக்கையாயிருப்பதோடு, சில எளிதான சட்டங்களும் ஆலோசனைகளும் உதவியா யிருக்கும்.

1. ஸ்தோத்திரத்திலும் ஜெபத்திலும் தேவனோடு உன் நாளை ஆரம்பி. தேவன் உனக்கு நாள்தோறும் தருகிற புதிய ஆசீர்வாதங்களை நினைந்து, அவைகளுக் காக நன்றி செலுத்து. அந்த நாளிலே உனக்கு நேரிடக் கூடிய சோதனைகளை நினைத்து, அவற்றின் பேரிலே ஜெயங்கொள்ளத்தக்கதான பெலனைத் தேவனிடத்திலே காண். காலையில் உன் போராட்டங்களை முழந்தாளி னின்று எதிர்நோக்கி அவற்றை மேற்கொள்ளத்தக்க தான தேவ கிருபைக்காகப் போராடு. நாளின் நெருக்கடி யான ஜோலிகள், உன் ஆண்டவரோடுள்ள காலைத் தியா னத்தினின்று உன்னை ஏமாற்றிவிட ஒருபோதும் இடம் கொடாதே.

2. தீவிரமும் ஆத்திரமுமான நாளின் மையத்திலே நின்று வேளா வேளைகளில் துதித்து ஜெபி. சிறிதுநேரம் தேவனோடு தனிமையாயிருப்பது, உன் வாழ்க்கை யிலுள்ள தொல்லைகள், மாறுபாடான நிலைகள் யாவை யும் நீக்கி உனக்கு அமைதியையும் ஜெயத்தையும் தந்து நாள் முழுவதும் உன்னைக் காத்துக்கொள்ளும்.

3. நாளை ஸ்தோத்திரத்திலும், ஜெபத்திலும் முடி. ஒரு நாளை முடிக்குமுன் நீ பெற்றுக்கொண்ட ஆசீர்

வாதங்களை நினைந்து குறிப்பாய் அவற்றிற்காகத் தேவனைத் துதி.

4. ஒவ்வொரு நாளும் உன் ஜீவியத்தில் ஆண்டவருக்குப் பிரீதியில்லாத காரியங்களை அறிந்து அவற்றிற்காக மன்னிப்புக் கேள். பாவ மன்னிப்புக்காகவும் சுத்திகரிப்புக்காகவும் உண்மையாய் ஆண்டவருக்குமுன்பாக உன் பாவங்களை அறிக்கை செய். நீ பாவ உணர்ச்சி பெறாத பாவம் ஏதாகிலும் இருந்தால் பரிசுத்தாவியானவர் உன் உள்ளத்தை ஆராய்ந்து உனக்குக் காட்டும்படி உன் ஜெப வேளையிலே சற்று மௌனமாயிரு. "ஜெபமே ஜெயம்" என்னும் குறிக்கோள் சாதாரணமாய் அநேக இடங்களில் காணப்படுகிறது. அந்த வார்த்தைகள் உண்மையுள்ளவைகளே என்பதை ஞாபகத்தில் வை. ஜெபமே உன் வெற்றிக்கு ஊற்று. தேவனோடு ஜெபம் முதலாவது ஐக்கியம். தேவனோடுள்ள ஐக்கியம் ஒரு சிலாக்கியம் மாத்திரமல்ல, பலவிதமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இன்றியமையாததே.

அதிகாரம் 5.

தேவனுடைய பிள்ளைகளோடு உன் ஐக்கியம்

ஒருவனுடைய நடத்தை அவனுடைய தோழமைக்குத் தக்கவாறுயிருக்கும். ஒருவன் தான் பழக்கமாய்த் தெரிந்து கொள்ளுகிற தோழர் அவன் ஆவிக்குரிய ஜீவியம், அவன் அறிவு, அவன் சமுதாய வாழ்க்கை இவைகளுக்கு உதவியாயிருக்கும் அல்லது இடறலாயிருக்கும். ஆகையால் ஒருவனுடைய நெருங்கிய கூட்டுறவுக்கும், கிறிஸ்தவ ஐக்கியத்தை வளர்ந்தோங்கச் செய்வதற்கும் ஆவிக்குரிய சிநேகிதரைத் தெரிந்து கொள்வது முக்கியமான காரியமாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகளின் புத்தகம் இல்லறத்தையும், அனுபவத்தையும் விளக்கிக் காட்டும் ஒரு புத்தகம். அப்புத்தகத்தில் தோழர்களைக் குறித்து அநேக வார்த்தைகளுண்டு. அவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுவோம். "ஞானிகளோடு சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனே நாசமடைவான்" (நீதி 13 : 20). "பொய்யனுயிருப்பதிலும் தரித்திரனுயிருப்பது நலம்" (நீதி 19: 22). "கோபக்காரனுக்குத் தோழனுகாதே; அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிப்பாய்" (நீதி 22 : 24, 25). "ஆபத்துக் காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மூழி புரண்ட காலுக்கும் சமானம்" (நீதி 25 : 19).

நாம் எத்தன்மையான கிறிஸ்தவ ஜீவியமும் எத்தனை உறுதியான நடத்தை யுடையவர்களாயிருந்தும் நம் சேர்க்கையினுல் இவைகள் மாறிப்போகக்கூடும். சமுதாயத்தோடு நாம் வாழ்கிறவர்களாயிருப்பதினுலும், பிறரின் கூட்டுறவும், தோழமையும் நமக்கு வேண்டியதாயிருப்பதாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் அதிக ஜாக்கிரதையோடு உத்தம கிறிஸ்தவ சிநேகிதர்களை நாடுவோமாக.

வயதில் உனக்கு ஒப்பாயிருந்து உன் வேதப் படிப்புக்கும் ஜெபத்திற்கும் ஆத்தும ஆதாயத்திற்கும் இசைந்து உன்னேடு நெருங்கி நட்புக்கொள்ளக்கூடிய சில நண்பர்களைத் தெரிந்துக்கொள். உன் சன்மார்க்க ஜீவியத்தையும் ஆவிக்குரிய ஜீவியத்தையும் ஊனப்படுத்தக்கூடிய சிநேகிதர்களை விடு. ஒரு கிறிஸ்தவன் குணப்படாத மக்களினின்று தன்னை முற்றிலுமாய் விலக்கிக் கொள்ளத் தேவையில்லை. ஆனுல் அவர்களை ஆத்மீக நண்பர்களாக்கிக் கொள்ளக்கூடாது. நீ எவ்வளவாய் முயற்சித்தும் உன் கூட்டுறவினுல் உன் ஆவிக்குரிய ஜீவியம் பாதிக்கப்படுமானுல், அந்தச் சிநேகத்தை விட்டு ஒழி.

கிறிஸ்தவ ஜீவியமானது, எல்லா நற்சினேகத்தையும் விட்டு ஒழித்து விடுவதான ஏகாந்தமான ஜீவியம் என்று எண்ண வேண்டாம். உலகிலே மகா இன்பமான சிநேகத்தை கிறிஸ்தவ மக்களிடத்தே நாம் காணக்கூடும்.

முதலாம் நூற்ருண்டுகளில் ரோம இராஜ்யத்திலுள்ள அதிகாரிகள் கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாயும்,

இசைவாயும் வாழ்ந்ததைக் கண்டதால், காண்ஸ்டேடின் என்ற ரோமச் சக்கரவர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தன் இராஜ்யத்தில் பிரதானமாக்கினான். ஆதி கிறிஸ்தவர்களுடைய அன்பும் பக்தியும் ஒருவருக்கொருவர் காட்டிய தூய சிநேகமும் அவர்களிடையே வாசஞ்செய்த அஞ்ஞான ஜனங்களால் கிரகித்துக்கொள்ளக் கூடாதிருந்தது.

கிறிஸ்துவிலே ஜாதிபேதமும் வகுப்பு விரோதமும் நீக்கப்பட்டு மக்கள் கிறிஸ்துவிலே ஒருமனப்பட்டிருக்கிறார்கள். முன் காலத்தில் நாயும் பாம்பும்போல் சீறிச் சினந்து பகைத்த பல ஜாதிகள் இப்பொழுது தங்கள் வேலையிலும் வாழ்க்கையிலும் ஜெபத்திலும் கூடப் பிறந்த மக்களைப்போல் சேர்ந்து வாழ்வதைக் கண்டிருக்கிறேன். வட ஆப்பிரிக்காவிலே பகைக்கப்பட்ட யூதரும் அகந்தையுள்ள அரபியரும் கிறிஸ்துவில் இணைக்கப்பட்டு பரிசுத்த அந்நியோன்னியச் சந்தோஷமுள்ளவர்களாய்க் கர்த்தரின் பந்தியிலும், அன்றாடக வாழ்க்கையிலும் வாழ்வதைக் கண்டிருக்கிறேன். என் தாய்நாட்டில் ஒருவரையொருவர் ஜென்மப் பகையாய்ப் பகைத்தவர்கள் குணப்பட்டபிறகு ஊக்கமாய் ஒருவரிலொருவர் அன்புகூருவதையும் கண்டிருக்கிறேன்.

கிறிஸ்தவ சிநேகம் பாஷைகளால் ஏற்படும் தடைகளை மேற்கொண்டிருக்கிறது. ஒரு பூங்காவனத்தில் ஒரு அமெரிக்கக் கிறிஸ்தவ சகோதரனும் ஒரு ஐரோப்பியக் கிறிஸ்தவ சகோதரனும் சந்தித்தனர். அவர்கள் இருவரும் தங்கள் தேசங்களைவிட்டுப் பிரிந்து தனித்தவர்களாயிருந்தார்கள். தாங்களிருவரும் கிறிஸ்தவர்கள்

என்று உணர்ந்துக்கொண்டதால் ஒருவர் மற்றவரை நோக்கி, "அல்லெலூயா" என்ருர். அதற்குப் பதிலாக அவர் "ஆமென்" என்ருர். இந்த இரண்டு வார்த்தைகளினுலும் இருவரும் அடைந்த ஐக்கியத்திஞல் ஆசீர்வதிக்கப்பட்டனர். கிறிஸ்தவ சிநேகமானது பல பாஷைகளை மேற்கொண்டு உள்ளங்களை ஒன்ருய் இணைக்கிறது.

சாத்தான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டுக் கிறிஸ்தவ ஐக்கியத்தைக் குலைக்கப் பார்க்கிருன். முக்கியமான கிறிஸ்தவக் கொள்கைகளை நம்பியிருக்கிற வெவ்வேறு சபைக்குள்ளும் இருக்கும் ஐக்கியத்தைச் சிதைக்கப் பிரயாசப்படுகிருன். சபைகளில் தலைவர்களுக்குள்ளும் பெரியவர்களுக்குள்ளும், ஊழியர்களுக்குள்ளும், குடும்பங்களுக்குள்ளும், சிநேகிதர்களுக்குள்ளும், எப்பொழுதும் எங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்குள் இருக்கும் ஐக்கியத்தைக் கெடுக்கச் சாத்தான் பிரயத்தனஞ் செய்கிருன்.

தேவ மக்களிடையே காணப்படும் பிளவுகள் மிக துக்ககரமானவை. அருமை இரட்சகர் இப்பிரிவுகளால் மனத்துயர்கொண்டு பின்வருமாறு தம் அடியார்களுக்காகப் பிரார்த்தித்தார், "அவர்களெல்லோரும் ஒன்ருயிருக்கவும் பிதாவே, நீர் என்னை அனுப்பியதை உலகம் விசுவாசிப்பதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருப்பதுபோல அவர்களெல்லோரும் நம்மில் ஒன்ருயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்ருர் (யோ. 17: 21.) பரிசுத்தாவிக்குள் நாம் ஒரே சரீரமாக ஞானஸ்நானம் பெற்றிருப்பதால் ஆவியானவர் பிரிவினைகளால் துயர் அடைகிருர் (1 கொ. 12: 13.) "நீங்கள்

மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' என்றும், ''சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' என்று எபே. 4 : 30-32ல் வாசிக்கிறோம். மற்ற கிறிஸ்தர்களோடும் கிறிஸ்தவ ஐக்கியம் குறையும்பொழுது கிறிஸ்தவன் தன் இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்து போகிறான். அவன் ஜெபம் தடைப்படுகிறது, சாட்சி பலட்டியப்படுகிறது. மேலும் ஆவிக்குரிய வல்லமையை இழந்துவிடுகிறான். இரட்சிக்கப் படாதோர் இதனிமித்தம் கலக்கமடைகின்றனர். நாம் பெற்ற பிள்ளைகளுக்கும் விளங்குவதில்லை. இதனால் சில சமயம் சிதறுண்டு போகிறார்கள்.

கிறிஸ்தவ அந்நியோன்னியம் வளர்க்கப்படவும் காக்கப்படவும் வேண்டும். கிறிஸ்தவனே, பிற கிறிஸ்தவர்களோடு அந்நியோன்னியமாய் ஜீவிக்க வேண்டும். நல்ல கிறிஸ்தவ சபைக்கு ஒழுங்காய்ப் போய் மற்றவர்களோடு உறவுகொள். அடிக்கடி ஒரு சபையை விட்டு இன்னொரு சபைக்குப் போவோமானால் மற்றவர்களோடு உறவு கொண்டாடுவது கடினம். கிறிஸ்தவர்களை உன் இல்லத்திற்கு அழைக்கவோ அல்லது அவர்களோடு வனபோஜனத்துக்குப் போகவோ ஒழுங்குசெய். உனக்காகவும் உன் சிக்கலான காரியங்களுக்காகவும்

ஜெபிக்கவும் கேள். நீயும் அவர்களுக்காக ஜெபி. கூட்ட மாகவும் ஜெபிக்கவேண்டும்.

ஒரு மேலான வழி யாதெனில், உன் வயதிற்கேற்ப ஒரு ஜெப தோழனைக் கண்டுபிடித்து அவனிடம் உன் மனபாரங்களைச் சொல்லி ஜெபி. வாரம் ஒரு முறை குறிப்பிட்ட நேரத்திலும், இடத்திலும் இருவரும் கூடி உங்கள் பிரச்சினையான காரியங்களுக்காக ஜெபியுங்கள். இவ்விதமாய்ப் பிறகிறிஸ்தவர்களோடுஉறவாடுவதால்உன் ஆவிக்குரிய ஐக்கியம் விருத்தியடைவதற்கும் வழியுண்டு. நீ எப்பொழுதுமே ஜெபிப்பதும் ஆவிக்குரிய காரியங் களைப் பற்றி பேசுகிறதுமில்லை. மனுஷ சுபாவம் பிறரு டைய கூட்டுறவை நாடுகிறதும் அதனால் திருப்தி யடை வதுமாயிருக்கிறது. கிறிஸ்தவ சிநேகமானது விசாலமான தாயும் சர்வத்தையும் உடையதாயுமிருக்கவேண்டும். கிறிஸ்தவ ஐக்கியத்தில் உண்பது, விளையாடுவது, உதவி புரிவது, சம்பாஷணை இப்படிப்பட்டவைகளுக்கு இடம் உண்டு.

பிறரைப் போலவே நீயும் சிநேகம் பாராட்டி அதைப் பாதுகாக்கவேண்டும் என்பதை மனதில் வை. "சிநேகித ருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்" என்பது முது மொழி (நீதி 18:24). உனக்குச் சிநேகிதரைச் சம்பா தித்த பின் அவர்களின் சிநேகத்தை ஜாக்கிரதையாகக் காத் துக்கொள். தன்னயக்காரனும், முன்கோபக்காரனுமாயு மிராதபடி உன்னைக் காத்துச் சிநேகிதருடைய அற்ப சொற்பக் குற்றங்களைக் கண் ஜாடையாய் விட்டுவிடு. குறைகள் எல்லோரிடமும் உண்டு. நம்பிக்கை துரோகம் செய்யாதே. உன் காதில் விழுந்தவற்றை யெல்லாம் வாயால் கக்கிவிடாதே. ஞானியின் வார்த்தையைக் கேள்,

"சிநேகிதன் எல்லாக் காலங்களிலும் சிநேகிப்பான்" (நீதி 17 : 17.) "குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிருன். கேட்டதைச் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிருன்" (நீதி 17 : 9) "கோள் காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப் போலிருக்கும். ஆனாலும் அவைகள் உள்ளத்தில் தைக்கும்" (நீதி 18 : 8) "அரணான பட்டணத்தை வசப்படுத்துவதைப் பார்க்கிலும் கோபங் கொண்ட சகோதரனை வசப்படுத்துவது அரிது" (நீதி 18 : 19.) "புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிருன். ஆவியில் உண்மையுள்ளவனே காரியத்தை அடக்குகிருன்" (நீதி 11 ; 13.).

ஞானியாகிய சாலொமோன் இவ்விஷயமாய்ச் சொன்ன ஓர் எச்சரிப்பு என்னவென்ருல், "மிதமிஞ்சி உறவு கொள்ளாமல் இருக்கவேண்டும்" என்பதே. "உன் அயலான் சலித்து உன்னை வெறுக்காதபடிக்கு, அடிக்கடி அவன் வீட்டில் கால் வைக்காதே" (நீதி 25 ; 17) உனக்கும் உன் நண்பனுக்கு மிடையேயுள்ள நட்பைக் குலைக்கும் ஏதேனும் காரியம் ஏற்படுமானல், உடனுக்குடனே சென்று காரியங்களை பகிரங்கப்படுத்தித் தடைகளை அப்புறப்படுத்து. நீ குற்றவாளியானல் அவைகளை அறிக்கை செய். அவர்களிடம் குற்றம், குறைவு காணப்பட்டால் மன்னித்துவிடு. எல்லாவற்றிற்கும் மேலாகக் குற்றம் குறைவுகளை முற்றுமாய் மறந்து நட்பு நிலைத்திருக்கும்படிச் செய். கிறிஸ்தவ சிநேகிதர்கள் நாம் இழந்துவிடக்கூடாத விலையேறப் பெற்றவர்கள். இழந்துவிட்டால் அவர்களைக் கூட்டுவது கடினம். யதார்த்தமாய்ச் சொன்ருல் ஆவிக்குரிய நடத்தைக்கு இத்தகைய சிநேகிதர்கள் இன்றியமையாதவர்கள்.

நீ கிறிஸ்துவை பின்பற்றுவதால் உன் பழைய நண்பர்களில் சிலரையோ அல்லது அதிகமான பேரையோ இழந்து விடவேண்டியதா யிருந்தால் திகில் அடையாதே. கிறிஸ்துவுக்குள் உனக்கு மேலான சிநேகிதரைக் கண்டடைவாய். கிறிஸ்தவ சிநேகிதர்தான் மெய்யான சிநேகிதர். ஆனால் கிறிஸ்தவர்களுக்குள்ளும் பக்தரோடு கிறிஸ்தவர்களல்லாதவர்கள் இருப்பார்கள் என்று ஒத்துக் கொள்ளவேண்டும்.

இடுக்கமும் நெருக்கமுமான சந்தர்ப்பங்களிலே உலக சிநேகிதர் என்னைக் கைவிட்டபொழுது கிறிஸ்தவ சிநேகிதர் என்னுடன் நிலைத்து நின்றதை நான் கண்டிருக்கிறேன். உலக சிநேகிதர் தன்னயமுள்ளவர்கள். கிறிஸ்தவ நண்பர்களோ உள்ளத்தில் கிறிஸ்துவின் பரிதாபத்தையும் தேவனுடைய அன்பையும் உடையவர்கள். தன்னயத்தை நடுமையமாகக் கொண்டவர்கள் தங்களையே எண்ணுவர். ஆனால் கிறிஸ்துநாதரை நடு நாயகனாகக் கொண்ட மக்கள் பிறநயமுள்ளவர்கள். ஆண்டவருக்கும் உனக்கும் நடுநின்று, அவரை விட்டு உன்னைப் பிரிக்கிறவர்கள் உன் சிநேகிதர்களல்லவே. அவர்கள் உனக்குச் சத்துருக்களே யாவர்.

உத்தமமாயும் உண்மையாயும் உனக்கு உதவி புரிய கிறிஸ்தவ சிநேகிதர்களைச் சம்பாதி. நீ பலிதமடையவும், வளர்ச்சியடையவும் கிறிஸ்தவ கூட்டுறவையே நாடு. நீ பிரகாசமடையவும், அதிகமாய் சாட்சிபகரவும் கிறிஸ்தவ கூட்டுறவையே தேடு. நீ தனித்து நடந்தால் தவறலாம். மற்ற பரிசுத்தவான்களோடு நீ நடந்தால் எவரேனும் உன்னைத் தாங்கி பலப்படுத்துவார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சனிக்கிழமை மாலை நான் அதிகச் சோர்வுற்றேன். அப்பொழுது நான் நெருங்கிய நட்புக் கொண்டிருந்த ஒரு கிறிஸ்தவரைக் கண்டேன். இருவரும் சம்பாஷித்து ஜெபித்தோம். நான் என் சோர்வுற்ற நிலையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் என்னை விட்டுப் பிரிந்த பின் அன்று நடு இரவிலே நான் ஆவியில் உயர்வு பெற்று பலப்படுத்தப் பட்டேன். மறுமுறை என் நண்பரை இரண்டு வாரங்களுக்குப் பிறகு சந்தித்தேன். அவர் என்னை நோக்கி, “அன்று நான் அதிக சோர்வுற்றிருந்தேன், ஆனால் நாம் இருவரும் சந்தித்த பின் என் சோர்வெல்லாம் நீங்கிற்று. நாம் அன்று மாலை ஜெபித்தபின் என் விசுவாசமும், என் மனத்தைரியமும் உயிர்ப்பிக்கப்பட்டு, புத்துயிர் பெற்றன” என்றார். கிறிஸ்தவ நட்பின் மேன்மைக்கு இது தகுந்த உதாரணமாகும். மனத் தளர்ச்சி யடைந்த இரு கிறிஸ்தவ சகோதரர்கள் சிறிது நேரம் கூடி உறவாடியதால் மனதின் இருள் நீங்கிற்று. சில உத்தம கிறிஸ்தவர்களைக் கண்டுபிடித்து, நெருங்கிய உறவாடு. சோர்வுற்ற வேளைகளிலும், துன்புறும் வேளைகளிலும் அவர்களின் ஐக்கியத்தை நாடு. பரலோக நாட்டுக்கு வெளியே கிறிஸ்தவ சிநேகமானது இன்பமும் அதிக ஆரோக்கியமும், அதிக உயர்வுக்குரியதாயுமிருக்கிறது.

அதிகாரம் 6

உன் ஆவிக்குரிய ஆகாரம்

வேதாகமத்தில் ஆவிக்குரிய ஜீவியம் சரீர ஜீவியத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய சரீரத்தை ஏற்ற ஆகாரத்தினால் போஷித்து சுகத்துடன் காப்பாற்றுவதைப் போல நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்துக்குத் தகுந்த போஜனம் தேவை. நாம் இயேசுநாதரை நம் இரட்சகராக ஏற்றுக் கொண்டபொழுது மறுபிறப் படைந்து புதிய ஜீவனில் பங்கு பெற்றிருக்கிறோம். புதிதாய்ப் பிறந்த ஒரு குழந்தைக்குச் சரியான கவனிப்பும் போஷிப்பும் இல்லையென்றால் அது வளர்ச்சி பெறுமா? அத்தன்மை போன்றதே ஆவிக்குரிய ஜீவியமும். அது வளர்ச்சி பெற நன்றாய் போஷிக்கப்பட வேண்டும். மறுபிறப்பினாலே ஒருவன் கிறிஸ்தவன் ஆகின்றான். ஒருவன் கிறிஸ்தவன் என்றால் அவனில் வளர்ச்சி காணப்பட வேண்டும். "இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்," (2 பே. 3:18) என்று பேதுரு புத்தி சொல்லுகிறார்.

எல்லா ஜீவனின் வளர்ச்சியும் ஆகாரத்தைச் சார்ந்திருக்கின்றது. ஆகவே கடவுள் நமது ஆவிக்குரிய ஜீவனுக்கு வேண்டிய கொழுமையான ஆகாரத்தைக் கிருபையாயும், ஞானமாயும் வைத்திருக்கிறார். அந்த ஆகாரம் அவருடைய வார்த்தையாகிய திருவசனமே. இத்திருவசனம் நம்முடைய ஆவிக்குரிய எல்லா வளர்ச்சிக்கும், சுகத்திற்கும் தேவையான சத்துள்ள ஆகாரமாயிருக்கிறது. வேத புஸ்தகம் களங்கமில்லாத பாலுக்கும், மதுர

மான தேனுக்கும், ஜீவ அப்பத்திற்கும், ஜீவ தண்ணீருக்கும், பலமான மாமிசத்திற்கும், கொழுமையான பலவித கனி வர்க்கங்களுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு கிறிஸ்தவன் தன் சரீரத்திற்குரிய ஆகாரத்தைப் புசிப்பதுபோல, தன் ஆவிக்குரிய ஆகாரமாகிய திரு வசனத்தைத் தினந்தோறும் ஒரு முறையோ அல்லது பன் முறையோ வாசித்து உட்கொண்டால் அவன் பலமும் சுகமும் உள்ள தேவபிள்ளையாகலாம். நீ இப்படிச் செய் வதினால் உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் நீ பலவான் ஆவாய். இவ்வித அன்றாடக ஆகாரமின்றி எந்தக் கிறிஸ்தவனும் பலனடைய முடியாது.

உன் வேதாகமத்தை வாசி. ஜாக்கிரதையாய் வாசித்து அதன் சத்தியத்தைப் பற்றிக்கொள்ளக் கருத் தாய்த் தேடி அதன் ஆசீர்வாதங்களைச் சொந்தமாக்கிக் கொள். அஜாக்கிரதையாய் வாசிப்பது அதிக பயன் அளிக்காது. வேதத்தைக் கவலையீனமாயும், அலட்சிய மாயும் வாசிப்பதுபோல் தன் பாட புத்தகங்களை வாசித் தால் தன் பாடங்களிலே தேர்ச்சி யடையமாட்டானே. வேறு விதமாகச் சொன்னால் வேத புஸ்தகத்தை அதிக ஜாக்கிரதையோடு தன் பாட புஸ்தகத்தைப்போல் படித்தால் அவனுக்கு அதன் சத்தியம் விளங்கும். ஜனங்கள் அடிக்கடி வேதாகமம் விளங்கவில்லை என்பதன் காரணம் ஒருவேளை உண்மையாய் அவர்கள் பிர யாசப்படவில்லை. யாராவது ஒருவன் புதிய ஏற்பாட்டில் மத்தேயு முதல் அதிகாரத்திலிருந்து கவனமாய் வாசித் தால், வேதாகமம் படிப்பதற்கு எத்தனை எளிதான புஸ்தகம் என்பதைக் கண்டு அவன் அதிசயிப்பான். அவ்

விதம் அவன் வாசித்து அதன் சத்தியங்களை உட்கொள்ளும்போது அவன் ஆவிக்குரிய ஜீவியம் பலமான ஆகாரத்தால் போஷிக்கப்படும். வேதத்தை வாசிக்கும் பொழுதெல்லாம் அதை அறிந்துக்கொள்ள வேண்டும் என்கிற கருத்தோடும் நோக்கத்தோடும் வாசித்தால் அதை அறிந்துகொள்வாய்.

வேதாகமத்தை ஒழுங்காகவும் வழக்கமாகவும் வாசி. வேதத்தைத் தற்செயலாகவும் அதில் இங்கு மங்குமாகவும் வாசித்தால் நீ பயனடையவும் திருப்தியடையவும் மாட்டாய். வேத வாசிப்புக்கென குறிப்பிட்ட நேரத்தை வைத்துக்கொள். வேதவாசிப்போடு ஜெபத்தையும் வைத்துக்கொள்வது நலமானது. கூடுமானால் முதலில் ஜெபி. குறைந்த பட்சம் கால் மணி நேரமாவது தினமும் வேதத்தை வாசிப்பது உன் ஜீவியத்திற்குத் தேவை. குறைந்தது அரை மணி நேரம் உத்தமமானது. அநேகர் வேதத்தைப் படிக்கத் தினந்தோறும் ஒரு மணி நேரம் செலவு செய்கின்றனர்.

எத்தனை நெருக்கடியான ஜோலிகள் உனக்கிருந்தாலும், உன் ஆத்தும போஜனத்தை அசட்டை செய்யாதே. ஒருவன் தன் நெருக்கடியான ஜோலிகளின் மத்தியில் தன் ஆகாரத்தைப் புசிக்க நேரமில்லை யென்பானாகில் அது ஆபத்தல்லவா? அடிக்கடி அவ்விதம் சம்பவிப்பதில்லை. ஆனால் அடிக்கடி நாம் சந்திக்கும் கிறிஸ்தவர்கள் தாங்கள் சரீர அலுவல்களில் தீவிரமாய் உழைப்பதால், தங்கள் ஆத்துமாவைப் பட்டினி கிடக்கப் பண்ணுகிறார்கள். இது விபத்தானதே. நீ ஓர் உத்தம கிறிஸ்தவனாக வேண்டுமானால் வேதாகமத்தை ஒழுங்காக வாசிக்கும் கிறிஸ்தவனாயிரு.

ஜெபமும் வேத வாசிப்பும் இசைந்திருக்கவேண்டும். ஏனெனில் நாம் ஜெபிக்கும்போது தேவனோடு பேசுகிறோம், வேதாகமத்தை வாசிக்கும்பொழுதோ தேவன் நம்மோடு பேசுகிறார். "உண்மையான வேதவாசிப்பு இல்லாத ஒரு நாள் உன் ஜீவியத்தில் உண்டானால், அந்நாள் அநேக தவறுதல்களுக்கும், பாவத்துக்கும் நீ இடம் கொடுக்கிறாய்" என்று ஒருவர் கூறுகிறார். இந்தக் காரணத்தினாலேயே அநேகர் தவறிப் பின்னர் வீழ்ந்து போகின்றனர்.

கீழ்ப்படிதலோடு உன் வேதாகமத்தை வாசி. வேதாகமத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற எண்ணத்தினால் மட்டுமே ஒருவன் வேதாகமத்தை அறிந்து தேவனைக்கிட்டி வரக்கூடும். வேதாகமத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மனமற்ற எவனும் அதைச் சரியானபடி அறிந்துகொள்ள முடியாது. அநேகர் அடிக்கடி வேதாகமத்தை அறிந்துகொள்ளக் கூடாததின் காரணம் இதுதான் என்று சந்தேகமறக் கூறலாம். "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துக்கொள்ளுவான்" (யோ. 7 : 17). ஒருவன் வேதாகமத்தின் யாதாகிலும் கட்டளைக்குக் கீழ்ப்படியாது போனால், அவன் வெகு சீக்கிரத்தில் வேத வாசிப்பில் இன்சுவை காண்பதில்லை, அவன் மனமும் அதன் உபதேசங்களைப் பற்றிக்கொள்ள முடியாதபடி தவறிவிடுகிறது. வேதாகமத்தின் ஒரு சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்போது மற்றொரு சத்தியம் உனக்கு வெளிப்படுத்தப்படும் என்பதைக் காண்பாய். நீ ஒப்புக்கொள்ளு

கிற ஏதாகிலும் ஒரு சத்தியத்திற்கு நீ கீழ்ப்படியாமல் போகும்போது உன் உள்ளமும், மனமும் அதன் எல்லா சத்தியத்திற்கும் அந்தகாரப்படும். அநேகர் இதைத் தங்கள் துக்ககரமான அனுபவத்தால் நிரூபித்துக் காண்பித்திருக்கின்றனர். நீ கைக்கொள்ளவேண்டும் என்று நீ அறிந்த எல்லா வேதத்தின் கட்டளைகளுக்கும் தீவிரமாயும், முழுவதுமாயும், சந்தோஷமாயும், மறுப்பில்லாமலும் கீழ்ப்படிவாயானல் ஒவ்வொரு கட்டளையும் உன்னை இன்னொரு சத்தியத்திற்கும், உன்னத ஆசீர்வாதத்திற்கும் கைகாட்டி மரம்போல் உனக்கு வழிகாட்டும் என்பதை அறிவாய்.

என் நண்பர்களில் ஒருவர் என் காது கேட்கச் சொன்னதாவது, "வேதாகமத்தை வாசிக்கும்பொழுதெல்லாம், அவ்வேதாகமம் எனக்குக் கட்டளையிடும் எல்லாவற்றையும் தேவகிருபையால் செய்ய முயற்சிப்பேன் என்று பல வருடங்களுக்கு முந்தி எனக்குள் தீர்மானித்தேன்" என்பதே. அவர் அவ்விதம் சொன்னது அவரின் கிறிஸ்துவைப் போலுள்ள தன்மையையும், ஆவிக்குரிய பலத்தையும் எனக்கு விளக்கி வைத்தது. வேதம் அதன் திருவுளச் சித்தத்தைத் தன்னில் நிறைவேற்றி வைக்க அவன் இடம் கொடுத்தான்.

வேதாகமத்தை ஜெபத்துடன் வாசி. தேவாவியானவர் அதன் சத்தியங்களை உனக்கு விளக்கிக் காட்டவும், உன் ஜீவியத்திற்கு அவைகளைப் பயன்படச் செய்யவும் கேள். வேதாகமம் தேவாவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தையானது. அதை வெறும் ஜென்ம சுபாவத்தால் அறியமுடியாது. உன் சுயபுத்தியால் வாசித்தால் அதன் உண்மையான கருத்தை அறியமாட்டாய்;

ஆனால் நாமிதைப் போல், "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்" என்று ஜெபித்து, வாசித்துத் தியானம் செய்வோர் அதன் சத்தியத்தைக் கண்டுகொள்வர். (1 கொ. 2: 12-14.) "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறுமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்தாவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." தெய்வீக வெளிப்படுத்தலினால் மட்டும் ஆவிக்குரிய சத்தியங்களை நாம் பற்றிக்கொள்ள முடியும்.

வேதத்தை நீ திறக்கிறபொழுதெல்லாம், சில நிமிஷ நேரமாயிருந்தாலும் கூட தேவாவியானவர் அதன் அர்த்தத்தை நீ அறிந்துகொள்வதற்கான வல்லமையையும், விவேகத்தையும் அருளும்படி கேள். வேதத்தில் எப்பொழுதாவது உனக்கு விளங்காத ஒரு சத்தியத்தை நீ காணும்போது தேவாவியானவர் தாமே அதை உனக்கு விளக்கிக் காட்டுமாறு அவர்முன் அதை வை. "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று யோ. 16: 13ல் இயேசு தாமே வாக்குத்தத்தமும் தந்தருளினார். அவரே வேதத்

தின் ஆக்கியோனும், ஆசிரியரும், அதன் வியாக்கியானியுமாவார்.

வேத வியாக்கியான புத்தகங்கள் மதிக்கத்தக்கவைகள்தான். ஆனாலோ வேதத்தைப் பற்றிய எல்லா புஸ்தகங்களையும் உபயோகிக்கிறதைப் பார்க்கிலும் ஒருவன் பரிசுத்தாவியானவர் சகாயத்தைப் பெறுவது விசேஷம். அவருடைய உதவியினால் வேதத்தின் உட்கருத்தை நன்ருய் அறியலாம். எந்த வியாக்கியான புஸ்தகங்களையும் உபயோகிக்க முடியாத ஏழை கிறிஸ்தவன் முதலாய் பரிசுத்தாவியின் சகாயத்தை யுடையவனாயிருந்தால் அவன் வேதத்தை அறிய இயலும். எனவே ஜெபித்து, பரிசுத்தாவியின் உதவியினால் வேதத்தை வாசி. உன் இயற்கை அறிவால் வேதத்தை வாசிப்பாயானால் ஆழமான சத்தியங்களை அறியவும் மாட்டாய்; வேத வாசிப்பு உனக்குக் கடினமும் குழப்பமுமாய் முடியும்.

இடைவிடாது உன் வேதத்தை வாசி. உன்னுடன் எப்பொழுதும் வேதாகமம் இருக்கட்டும், அல்லது ஒரு புதிய ஏற்பாடாவது வைத்துக்கொண்டு அற்ப சொற்ப நேரங்களை வீணாக்காமல் வேதத்தை வாசி. மோட்டார் வண்டியிலோ, புகை வண்டியிலோ பிரயாணம் செய்யும் பொழுதும், சாப்பாட்டிற்காக காத்திருக்கும் வேளையிலும், வேலையின் ஓய்வு வேளையிலும் வேதத்தை வாசி. உனக்குக் கிடைப்பதான நற்சமயங்களிலெல்லாம் வேதத்தின் பகுதியை வாசி. இவ்விதம் செய்வாயானால் நீ குழந்தையாயிராமல் உன் ஜீவியத்திலே வளர்ச்சியடைந்து பலப்படுவாய்.

உன் வேதத்தை மனப்பாடமாகக் கற்றுக்கொள். “நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு

உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" என்று தாவீது வெகு காலத்திற்கு முன்பு கூறியுள்ளார். இவ்விதம் மனப்பாடம் செய்வதால் அதிகப் பயனுண்டு. மனப்பாடம் செய்த வசனம் உன் உள்ளத்திலும், மனதிலுமிருந்து நீ பாவம் செய்யாதபடி உன்னைத் தற் காக்கும். சோதனை காலங்களிலே அது உன்னை பாவச் செயலுக்குத் தப்புவிக்கும். அது உன்னை வல்லமையோடு தடுத்து ஆட்கொள்ளும். இதன் உண்மையை உன் ஜீவியத்தில் பரீக்ஷித்துப் பார்.

வேதாகமத்தை மனனம் பண்ணுதல் ஆத்தும ஆதாயத்திற்கும், சாட்சி கூறுவதற்கும் உன்னைத் தகுதி உள்ளவனுக்கும். தேவன் எப்பொழுதும் தமது வார்த்தையை பிரயோகிக்கிறார். ஆனால் உன் சொந்த வார்த்தைகளினாலும் உன் தர்க்கங்களினாலும் அவர் அவ்விதம் எப்பொழுதும் செய்யமாட்டார். மனிதனுடைய தீவிரமான வார்த்தைகளும், தர்க்கங்களும் தடுமாறி தெளிவற்றதாய் மனித உள்ளத்திலே தோன்றும்போது, "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையுமுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி. 4 : 12.). வேத வசனமில்லாமல் தன் வெறும் உதடுகளிலிருந்து பேசும் வார்த்தைகளால் சாட்சி கூறவோ அல்லது ஆதாயம் செய்யவோ முயற்சித்தால் உனக்குக் குறைவுண்டு என்று அறிவாய். உடன் கிறிஸ்தவனைக் கண்டிக்கும்பொழுதோ அல்லது புத்தி கூறும்பொழுதோ நாம், "ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறார்" என்போமாக. உன்னுடைய தர்க்கங்களும், முயற்சிகளும் பய

னற்று வீணாய்ப் போகும்போது, தேவனுடைய வார்த்தை யானது பிறனை வசப்படுத்தி, உணர்த்தி, அவனைப் பரிசுத் தப்படுத்தும்.

வேதத்தை மனனம் செய்ய எத்தனையோ உபாயங் களுண்டு. ஒரு சாதாரண வழியாதெனில் உன் அன்றாடக வேத வாசிப்பின் பாகத்திலிருந்து ஒரு வசனத்தைத் தெரிந்துக்கொண்டு மனப்பாடம் செய். ஒருவேளை உனக்கு அந்நாள் விளங்கியதான வசனமாயிருக்கலாம். அதை உன் வேதாகமத்திலே கோடு கிழித்து உனக்குக் கிடைப்பதான ஓய்வு வேளைகளில் ஒரு முறையோ, இரு முறையோ கற்றுக்கொள். அதுமட்டுமல்ல, முன்னே நீ கற்றுக்கொண்ட வசனங்களையும் ஞாபகப்படுத்தி வை, பன்முறை சொல்வதே மனப்பாடம் செய்வதின் இரகசியம். ஒரு வேளை ஒரு வசனத்தை மனப்பாடம் செய்வது உனக்குக் கூடியதல்ல என்று கண்டால் ஒரு வாரத்திற்கு ஒரு வசனமாவது கற்றுக்கொள். ஞாபகத் தில் வைப்பதற்கு ஒரு நல்ல முறை யாதெனில் வேத வசனங்களை ஒரு துண்டு காகிதத்தில் எழுதி வைத்துக் கொள். வேலையில்லாத வேளைகளில் எல்லாம் திரும்பத் திரும்ப அதை எடுத்துப் படித்து மனப்பாடம் செய்.

அதிகாரம் 7.

உன் ஆவிக்குரிய ஆகாரம் (தொடர்ச்சி)

உன் வேதாகமத்தை ஆராய்ந்து பார். தனி தியானத்திற்கும், ஆவியின் எழுப்புதலுக்கும் வேத வாசிப்பு உன் அன்றாடக வாழ்க்கைக்குத் தேவை. அதோடுகூட உத்தம கிறிஸ்தவ ஜீவியத்தில் பயன் அடைய உன் வேதாகமத்தை ஆவலோடு ஆராயவேண்டும். இவற்றிற்கென நேரம் கிடைப்பது கடினந்தான் என்பதை அறிவோம், ஆயினும் உத்தம கிறிஸ்தவர்கள் யாவரும் இதற்கென நேரத்தைப் பிரத்தியேகப்படுத்தி வைப்பார்கள். "ஒரு கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஒழுங்காயும் கிரமமாயும் வேதத்தை ஆராய்ந்து பார்க்கிறதைவிட வேறொன்றும் பிரதானமானதல்ல" என்று ஒருவன் சொல்லுகிறான். வாரந்தோறும் நாம் கேட்கிற பிரசங்கங்கள் போதாது. நீயே கர்த்தரின் வசனத்தைக் கற்கவேண்டும். உன் ஆவிக்குரிய ஆகாரமாகிய மன்னாவை நீயே பொறுக்க வேண்டுமே ஒழிய பிறனை எதிர்ப்பார்க்கக்கூடாதே. அநேகர் இந்நாட்களிலே பல தப்பிதமான மதப் போதனைகளினாலும், தவறான விசுவாசத்தாலும் மனக் குழப்பத்திற்குள்ளாகின்றனர். இக் கூட்டங்கள் அதிகமாய் பெருகிக்கொண்டு வருகின்றன. இவ்விதம் தப்பிதமான மார்க்க கண்ணிகளுக்கு நமது கால்கள் தப்பிக்கொள்ள நாமே வேதாகமத்தைப் படித்து அதன் சத்தியத்தைத் திட்டமாய் அறிந்துகொள்வதுதான் வழி. எபேசு பட்டணத்து மூப்பன்மார்களுக்கு பவுல் கூறிய பயனுபசார வார்த்தைளை அப். 20: 29-32ல் வாசி. நமது ஆவிக்குரிய ஜீவியத்தின் சுகம், வளர்ச்சி, பெலன், பாவத்தின்மீது

வெற்றி, சுத்த உபதேசம், கிறிஸ்துவிலுள்ள நம் சந்தோஷம், சமாதானம், உள்ளும் புறமுமான பாவ சுத்திகரிப்பு, ஊழியத்திற்குத் தகுதி ஆகிய இவை அனைத்தும் வேத வாசிப்பில்தான் அடங்கியுள்ளன. வேதத்தைப் படிக்கத்தவறிவிடும் ஒருவன் தன் கிறிஸ்தவ ஜீவியத்திலே விழுந்து போவதற்கு ஏதுவாயிருக்கிறான். ஆனால் உண்மையாய் தன் வேதத்தைக் கற்றுக்கொள்ளும் ஒரு கிறிஸ்தவனே உத்தம கிறிஸ்தவ வாழ்க்கையிலே வெற்றியைக் கண்டடைவான்.

வேதத்தைக் கற்றுக்கொள்ளும் ஒரு முறை யாதெனில் அதை அதிகாரம் அதிகாரமாய்ப் படிப்பது தான். வேதத்தில் ஒரு புத்தகத்தைத் தெரிந்துகொண்டு அதில் அதிகாரம் அதிகாரமாக வாசித்து, ஒவ்வொரு அதிகாரத்தின் பொருள் என்ன என்பதைக் கண்டுபிடி. ஒருவர் சொல்லுவதாவது, "ஓர் அதிகாரத்தைத் திருப்பத் திருப்பப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுது" என்பதே.

1. அதிகாரத்தின் விசேஷித்த பொருள் என்ன? (ஒரு வார்த்தையினாலாவது அல்லது குறிப்பான வசனத்தினாலாவது விடையளி.)

2. அதிகாரத்தின் தெளிவான முக்கிய சத்தியம் அல்லது வற்புறுத்திக் கூறும் பொருள் என்ன?

3. கற்றுக் கொள்ளவேண்டிய விசேஷித்த பாடம் என்ன?

4. தங்க வசனம் எது?

5. குறிப்பிடும் முக்கிய ஆட்கள் யார்?

6. கிறிஸ்துவைப்பற்றி அதிகாரம் போதிப்பது என்ன?

7. நீ கற்றுக்கொள்ளும் புதிய சத்தியம் என்ன?

8. இதைப் படித்ததின் பயனுக நீ செய்யும்படியாய் தீர்மானித்ததென்ன?

புஸ்தகம் புஸ்தகமாக நீ இவ்விதமாய்க் கற்றுக்கொண்டால் நீயே திறவாளியாய் இருப்பாய்.

பொருள் பாடமாய்க் கற்றுக்கொள்வது மற்றெரு நல்ல வழியாகும். இது D. L. மூடி என்பவர் தான் வேதத்தைக் கற்றுக்கொண்ட முறையாயிருந்தது. இது எளிதும், அதிக மேலானதுமான வழியாகும். இதற்குச் சில புஸ்தகங்களை உபயோகித்தால் உதவியாயிருக்கும். மற்ற புஸ்தகங்கள் கிடைக்காதுபோனுல் அகராதி நல்லது. தமிழ் பாஷையில் ஒத்த வாக்கிய அகராதியை சங்கை D. A. துரோவர் ஐயர் இயற்றியுள்ளார். அதை உபயோகிக்கலாம். இவ்வித அகராதியின் உதவியால் வேதம் முழுவதிலுமுள்ள பொருட்களை நீ தனித்தனியாகக் கண்டு பிடிக்கலாம். உதாரணமாகப் பரிசுத்தாவியானவரின் வேலை, பாவம், கிருபை, கிறிஸ்துவின் இரத்தம், விசுவாசம், மனந்திரும்புதல், நீதிமானுக்கப்படுதல், தேவ அன்பு, மோட்சம், நரகம் முதலிய விஷயங்களையும் படிக்கலாம். இவ்விதமாய் ஆராய்ந்து படித்தால் எல்லா சத்தியங்களையும் நன்றுய் அறிந்து, "கர்த்தராகிய ஆண்டவர் இப்படிச் சொல்லுகிறுர்," என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். ஆராதனையிலோ வேத வகுப்பிலோ பேச உனக்குச் சமயம் கிடைத்தால் இந்த முறையை உபயோகித்துத் தைரியமாய்ப் பேசலாம்.

புஸ்தகம் புஸ்தகமாக ஆராய்வது இன்னொருமுறை யாகும். முதல் முதல் புதிய ஏற்பாட்டின் சிறிய நிருபங்களில் ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு அதைப் படிப்பது மிகச் சிறந்த முறையாகும். ஒரு நிருபத்தை எடுத்துக்கொண்டு அதை ஒரே தடவையில் படித்தோ அல்லது பன்முறை படித்தோ அதன் பொருளைக் கண்டுபிடி. இரண்டாம் தடவை அப் புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பிக்கும்போது அதன் முக்கிய போதனை என்ன என்பதைக் கவனி. மறுமுறை படிக்கும்போதோ அதன் விஷயம் எவ்வாறு அந்நிருபத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடி. அதை மீண்டும் வாசித்து அதன் முக்கிய விஷயத்தை உன் சொந்த வார்த்தைகளால் சுருங்கச் சொல்.

ஒரு புத்தகத்தை நீ முற்றுமாய்க் கற்று தெளிவுபடு மட்டும் அதில் நிலைத்திரு. அப்புறம் அடுத்த புத்தகத்திற்குச் செல். இவ்விதம் செய்வாயானால் நீ முழு வேதத்தையே கற்றுத் தெளிவடையக்கூடும். இது இப்பொழுது நீ எண்ணுகிறபடி நடக்கக்கூடாத காரியமல்ல. இது நடக்கக்கூடியதே.

ஜீவிய சரித்திரங்களைக் கொண்டு வேதத்தைக் கற்றுக்கொள்வது உதவியாயிருக்கும். இதற்கு உதவியாக ஒத்த வாக்கிய அகராதியே மேலானது. சில ஜீவிய சரித்திரங்களை எடுத்து வேதம் அவைகளைப்பற்றி சொல்வதெல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்யலாம். உதாரணமாக நோவா, ஆபிரகாம், லோத்து, யாக்கோபு, பவுல், தீமோத்தேயு மற்றுமான இவர்களைப் பின்வருமாறு படித்து குறிப்பெழுது.

1. அவன் தேவனைச் சந்தித்தது அல்லது அவன் குணப்படுதல்.

2. அவன் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டது.

3. அவனுடைய உறுதியான விசுவாசம் அல்லது ஜெபம்.

4. அவனுடைய பெலவீனமான பாவம் அல்லது தவறுதல்கள்.

5. அவன் நிறைவேற்றியவைகள்,

6. அவன் செல்வாக்கு.

7. அவன் பெயரின் அர்த்தம், புதுப் பெயர் உண்டானால் அப்பெயர்.

8. அவன் ஜீவியத்தால் நீ கற்றுக்கொள்வது யாது?

9. அவன் ஜீவியத்தால் நீ எச்சரிப்படைவதானவைகள்.

10. அவனைப்பற்றி தேவன் சொன்னவைகள்.

வேதத்தை ஒத்திட்டுப் படிக்கும் முறையும் உண்டு. இம்முறையில் வேதத்தோடு வேதத்தை ஒத்திட்டுப் படிப்பதுதான். இப்படிப் படிக்கும்பொழுது ஒரு பாகத்தில் விளங்காத காரியத்தை மற்றொரு பாகத்தால் விளங்கிக்கொள்ளலாம். இவ்விதம் படிக்கத் தபால் மூலமாய் நீ எழுதி கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் கிடைக்கக் கூடுமானால் நலமாயிருக்கும்.

திட்டமான வேதப் படிப்பு அவசியமான இக்காலத்திலே அதிக சொற்ப பேர்மட்டும் அவ்விதம் செய்கின்றனர். இதை வாசிக்கும் நண்பனே! வேதத்தைப் படிப்பதற்கான அழைப்பை நீ இன்றே ஏற்றுக்கொண்டு திருவசனத்தை ஆராய்ந்து பார்த்து உத்தம கிறிஸ்தவ ஜீவியம் செய்.

அதிகாரம் 8.

பிறருக்கு முன்பாக உன் பகிரங்க சாட்சி

அந்தரங்கமான கிறிஸ்தவ ஜீவியம் செய்வது கூடாததாயினும் சிலர் தப்பிதமாய் அவ்விதம் செய்ய முயற்சிக்கின்றனர். கிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் புதிய ஜீவனில் பங்கு பெற்றிருப்பதால் அந்த ஜீவியம் முழுவதும் தெளிவாய்க் காட்டப்படவேண்டும். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தவேண்டுமானுல், அது பயமும், வெட்கமுமின்றி பகிரங்கமாய் வாழ்வதுதான். நீ ஒரு கிறிஸ்தவ ஜீவியம் செய்ய விரும்பினுல் உன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், அவரைப் பற்றிய உன் விசுவாசத்தையும், உன் அன்பையும் உலகத்திற்கு முன் அறிக்கையிட்டு வெளிப்படுத்தவேண்டும். உன் கிறிஸ்தவ ஜீவியத்தை மறைத்துவிடாதே. உன் ஜீவியம் விளக்குத் தண்டின் மீது ஏற்றப்பட்ட சுடர் போலவும், மறைக்காமல் மலையின்மீது வைக்கப்பட்ட பட்டணம் போலவும் பிரகாசிக்கட்டும். கிறிஸ்துநாதரை மனிதருக்கு முன்பாக உன் ஜீவியத்தால் வெளிப்படுத்திக் காட்டுவது மட்டுமல்ல, உன் வாயினுல் வெளியரங்கமாய் அறிக்கை செய்தலும் வேண்டும்.

கிறிஸ்துவை நாம் ஏன் பிறர் கேட்க அறிக்கையிடுதல் வேண்டும்? கிறிஸ்து பெருமானே அவ்விதம் கட்டளையிட்டிருக்கிருர். "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனே, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை

பண்ணுவேன்" (மத். 10: 32) பகிரங்க அறிக்கையை அவர் நம்மிடம் கேட்கிருர். அவர் நம்மை முழுவதுமாய் ஆசீர்வதிக்க வேண்டுமாஞல், அவர் நம்மைப் பரலோகத் தந்தைக்கு முன்பாக அறிக்கை செய்வதுபோல் நாமும் அவரை மனிதர் முன்பாக அறிக்கையிடுவதே, இவ்வாசீர் வாதத்திற்குரிய நிபந்தனையாகும். நமது ஆசீர்வாதத்திற் காகவே இதை அவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கிருர். (ரோ. 10: 9, 10) "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயி ஞலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரி லிருந்து எழுப்பினுர் என்று உன் இருதயத்திலே விசுவா சித்தால் இரட்சிக்கப்படுவாய், நீதியுண்டாக இருதயத் திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினுலே அறிக்கை பண்ணப்படும்." பகிரங்கமான அறிக்கை அதிக முக்கியமானது. இதில் தவறிப் போவது ஆண்ட வருக்குக் கீழ்ப்படியாமையும் இரட்சிப்பின் பூரணத் தைத் தவற விடுவதுமாயிருக்கிறது. இரண்டாவதாக நமது சொந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உதவியும் பெல னுமாயிருக்க நாம் கிறிஸ்துவை அறிக்கை செய்தல் வேண்டும். கிறிஸ்துவை அறிக்கை செய்யும் ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படுத்தப்படுகிருன். அறிக்கை செய்கிற ஒரு கிறிஸ்தவன் பின்வாங்கிப் போகிற பெரிய ஆபத்துக்குள் ளாகிறதில்லை, ஆஞல் அவ்விதம் அறிக்கை செய்யாமல் இருப்பது அடிக்கடி பின்வாங்கிப் போவதற்குக் காரண மாயிருக்கிறது. பகிரங்க அறிக்கை ஒருவனைப் பலப் படுத்துவதுமன்றி உண்மையான சந்தோஷம் உண்டாக் குவதற்கு ஓர் ஊற்ருயிருக்கிறது. ஆரம்பத்தில் உன் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பகிரங்கவாக அறிக்கையிடுதல்

கடினமாயினும், அவ்விதமான சாட்சி பகர்தல் சொல்லி முடியாத மகிழ்ச்சியைத் தரும். புதிதாய்க் குணப்பட்ட அநேகர் கோழைத்தனத்தால் நடுங்கித் தங்கள் சாட்சியை முதல் முதல் சொல்ல எத்தனித்தாலும், அவர்கள் சாட்சியின் முடிவிலோ ஆனந்தம் பொங்கி வழிந்தோடுவதைக் காண்பர். சாட்சி பகர்தல் உண்மையாகவே உள்ளான பலத்திற்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கிறது.

மேலும் ஒருவனுடைய விசுவாசத்தின் தெளிவான அறிக்கை பிறருக்கு முன்பாகக் கொடுக்கப்படும்போது அநேக கஷ்டங்களை நிவர்த்தியாக்குகிறது. உலக சிந்தையும் தெய்வ பக்தியற்றவர்களுமான ஆட்கள், ஒருவன் கிறிஸ்துவுக்காய் முற்றுமாய் ஜீவிப்பதை அறியும்போது, அவர்கள் அவனைத் தடுத்து கிறிஸ்தவர்கள் அல்லாத வேடிக்கைகளுக்கும், பக்தியற்ற காரியங்களுக்கும்போக அவனைத் துரிதப்படுத்தமாட்டார்கள். ஆரம்பத்திலிருந்தே உன் நிலையை அவர்கள் நன்றாய் அறிந்துக்கொண்டால் நீ அநேக இக்கட்டுகளுக்கும் துயரத்திற்கும் உன்னை விலக்கித் தற்காத்துக் கொள்வாய். முற்றும் கிறிஸ்துவுக்காய் ஜீவிக்கிற ஒரு கிறிஸ்தவனை ஒருவேளை உலகம் சிநேகிக்கக்கூடாமலிருக்கலாம். ஆனால் அது அவனை எப்பொழுதும் கனப்படுத்தும். வேறுவிதமாய்ச் சொன்னால் பலவீனமான கிறிஸ்தவர்கள் தாங்கள் வஞ்சிக்கப்படக்கூடிய இடங்களுக்குத் தொடர்பாய்ப்போய்க் கிறிஸ்தவர்கள் செய்யக்கூடாத காரியங்களைச் செய்வதினால், அவர்கள் உண்மை கிறிஸ்தவர்கள் ஆகவில்லை என்பதை உலகம் அறிந்துகொள்ளும். இவ்வித அறிக்கை தைரியமான கிறிஸ்தவ ஜீவியத்திலே உண்டானால் வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அது உதவியாயிருக்கும்.

உனக்காகப் பெரிதான இரட்சிப்பைச் செய்து முடித்த உன் இரட்சகரை மனிதர்முன் நீ அறிக்கை செய்யவேண்டியது உண்மையாகவே நியாயமாயும் அவ்சியமாயும் இருக்கிறதல்லவா? யாராகிலும் ஒரு நண்பன் உனக்குக் கைமாறு கருதாமல் ஒரு நன்மை செய்திருந்தால் அதைப் பிறருக்குச் சொல்ல விரும்பு வாயா? அல்லது வெட்கப்பட்டு அறிக்கையிட வெறுப் பாயா? நாம் பெருமையோடு அதைச் சொல்லச் சமயம் தேடமாட்டோமா? அப்படியே நமது சிநேகிதராகிய ஆண்டவர் நம்மை நரகத்தினின்றும் பாவத்தினின்றும் விடுவிக்க நமக்காகத் தமது ஜீவனை ஈந்தாரே. ஒரு பிள்ளை தன் அன்புள்ள தந்தையைப் பற்றி பிறருக்குச் சொல்ல வெட்கப்படுமோ? பிள்ளைகள் பெருமையோடு தங்கள் தந்தையைப் பற்றிப் பேசமாட்டார்களா? ஒரு நல்ல புருஷனைப்பற்றி ஒரு மனைவி மற்றவர்களுக்கு முன்பாக சந்தோஷத்தோடும் பெருமையோடும் பேசமாட்டாளா? வேத புஸ்தகத்திலே நாம் கிறிஸ்துவின் மனையாட்டி என்று அழைக்கப்படுகிறோம். ஆகவே நமது மணவாள னைப்பற்றி அறிக்கையிட வெட்கப்படுகிறோமா அல்லது பயப்படுகிறோமா? உன்னில் கிறிஸ்துநாதரைப் பற்றிய சாட்சியிருந்தால்மட்டும் நீ கிறிஸ்தவன் என்பதைப் பிறர் அறியமாட்டார்கள். நீ கிறிஸ்து மார்க்கத்தைக் குறித்து வெட்கப்படுகிறாய் என்பதைப் பிறர் கண்டால் உன்னை உத்தம கிறிஸ்தவன் என்று மதிக்கமாட்டார்கள். உன் விசுவாசம் பலவீனமானதென்றும் உன் கிறிஸ்தவ அனுபவங்கள் உண்மையல்லவென்றும் பிறர் கூறுவர். உன்னை எந்த வரிசையில் வைப்பதென்று அவர்கள் அறி யார்கள், ஆனாலோ கிறிஸ்துவுக்கென நீ தைரியமாய்ச் சாட்சி பகரும்போது உன்னை எந்த அட்டவணையில்

குறிப்பிட வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். நீ ஒரு கிறிஸ்தவனுக மதிக்கப்பட ஆசைப்பட்டும் உன் விசுவாசத்தைப் பயத்தினுல் அறிக்கை செய்யாமல் இருந்தால் உலகத்தார் உன்னே யாரென்று அறியாமல் தடுமாறுவார்கள். ஏன் இது உனக்குக் கடினமும், ஆண்டவருக்குத் துக்கமுமாயிருக்க வேண்டும்?

ஒருவன் எவ்விதம் பிறருக்கு முன்பாகக் கிறிஸ்துவை அறிக்கை செய்யக்கூடும்? முதல் முதலாய் ஒரு கிறிஸ்தவ ஆராதனேயிலாவது, சுவிசேஷக் கூட்டத்திலாவது சாட்சி கூற நில். கிறிஸ்துவை உன் வீட்டிலோ அல்லது வேலே செய்யுமிடத்திலோ ஏற்றுக்கொண்டிருக்கலாம், ஆயினும் நீ பகிரங்கமாய் இன்னும் சாட்சி பகரவில்லே, இப்பொழுது ஒரு கிறிஸ்தவ பகிரங்கக் கூட்டத்தில் நீ முன்வந்து சாட்சி பகருவது முக்கியமானதே.

ஒரு முறைமட்டும் அவ்விதம் அறிக்கையிடுதல் போதாது. ஒருபோதும் அப்படிச் செய்ய வெட்கப்படாதே. ஜனங்கள் நீ யாருக்குச் சொந்தமென்றும், உன் ஜீவியம் என்ன என்றும் அறிந்துகொள்ளட்டும். ஆலயத்திலும், வீட்டிலும், வேலேயிலும், பள்ளியிலும், விளேயாட்டிலும் ஜனங்கள் நீ மீட்கப்பட்டவன் என்று அறியட்டும். உன் சாட்சி எப்பொழுதும் தாழ்மையுடையதாய் இருக்கட்டும். எவ்விதமான பெருமையும் உன் சாட்சியை ஒன்றுமில்லாது ஆக்கிவிடும். என் மனேவி இளமையிலே குணப்பட்டவள். அவள் தனக்குள் செய்த தீர்மானம் யாதெனில் சாட்சிக் கூட்டத்தில், நான் கிறிஸ்துநாதரைக் குறித்துச் சாட்சி கூருது இருக்கமாட்டேன் என்பதே. இந்த நல்ல முறையை இப்பொழுதே நீயும் ஆரம்பி.

நாம் பாவங்களினின்று கழுவப்பட்டோம் என்கிற சாட்சியை ஞானஸ்நானத்தில் பகிரங்கப்படுத்துகிறோம். ஞானஸ்நானத்தின் தண்ணீர் நம் சரீரத்தின் மேல்பாகங்களை மட்டும் தொடக்கூடுமே ஒழிய, அது நமது உள்ளான உள்ளத்திலும், ஆவியிலுமுள்ள பாவத்தைக் கழுவுகிறது என்பதை நாம் ஒருபோதும் குறிக்கிறதில்லை; ஆனால் ஞானஸ்நானம் நாம் நம்முடைய பழைய பாவ ஜீவியத்திற்கு மரித்துப் புதிய ஜீவனுள்ளவர்களாய் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று, அவருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டோம் என்பதைக் காட்டுகிற மகிமையான அடையாளமாயிருக்கிறது (எபி. 9: 14; வெளி. 1: 6). ஞானஸ்நானத்தால் இரட்சிப்பு அல்ல, ஆனால் இரட்சிக்கப்பட்ட பின்புதான் ஞானஸ்நானம் (ரோ. 6 வாசி) ஆண்டவர் தமது சீஷர்களுக்கு, "சகல ஜாதிகளையும் சீஷராக்கி......ஞானஸ்நானம் கொடுங்கள்" என்றார் (மத். 28: 19). ஆதிச் சபையிலே பெந்தெகொஸ்தே நாளின் ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஞானஸ்நானத்திலே அவர்கள் தங்களை கிறிஸ்துவோடும் அவர் அடியாரோடும் ஒன்றாக்கி அறிக்கையிடுகின்றனர்.

'முதலாவது கிறிஸ்துவை உண்மையோடு உன் இனத்தவர், சிநேகிதர் இவர்கள்முன் அறிக்கையிடு. முதல் உன் வீட்டாருக்குச் சொல். நீ கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன் என்று உன் நெருங்கினவர்களுக்குச் சொல்லவில்லை என்றால் நீ எப்படி உத்தம கிறிஸ்தவ ஜீவியம் செய்ய எதிர்பார்க்க முடியும்? உன் இனத்தாருக்குச் சொல்லத் தவறினால் கிறிஸ்துவுக்காக எப்படி நீ மற்ற

இடங்களில் பலமான சாட்சி பகரக்கூடும். உன் நண்பர்களிடம் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுவதினால் நீ அவர்களின் சிநேகத்தை இழக்க நேரிடுமானால் அவர்கள் எவ்விதத்திலும் உனக்கு உத்தம சிநேகிதர்கள் அல்ல. ஆவிக்குரிய நலத்திலே இடறலாக நிற்கும் ஒருவன் எப்படி உன் உத்தம நண்பனாகக் கூடும்?

கிறிஸ்துவைத் தெளிவாய் உன் அறிமுகமானவர்களிடத்திலும், நீ கூடிப் பழகுகிறவர்களிடத்திலும் அறிக்கை செய். நீ அவ்விதம் செய்ய ஒருபொழுதும் உனக்கு அச்சமோ நாணமோ வேண்டாம். நீ யாரோடு தொடர்பு கொள்ளுகிறாயோ அவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவை அறிக்கை செய். நீ கிறிஸ்துவை சிநேகித்து அவருக்கு உழைக்கிறாய் என்பதை எவரும் அறியட்டும். உன்னோடு உறவு கொண்டாடின எவரேனும், "கிறிஸ்துவைக் குறித்து ஒரு பொழுதும் இவர் எனக்குச் சொன்னாரில்லை" என்று உன்னைப்பற்றி இம்மையிலோ, மறுமையிலோ சொல்லாதிருப்பானாக. என் நண்பா! இவ்விதமான குற்றச்சாட்டுதல் உன்னைப்பற்றி ஒரு பொழுதும் சொல்லப்படாதிருப்பதாக.

கிறிஸ்துநாதர் தம் சீஷர்களுக்கு "நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருங்கள்" என்று தெளிவாய்ச் சொன்னார் (லூக்கா. 24: 48; அப். 1:3). அவர்கள் அவ்விதமே அதை நிறைவேற்றினர். சாட்சி என்றால் என்ன? அதன் அர்த்தம் என்ன? இப்பதம் நியாய ஸ்தலத்திலே உபயோகிக்கப்படும் ஒரு பதமாகும்.

சாட்சி, காரியத்தைப்பற்றி ஏதாகிலும் அறிந்திருக்க வேண்டும். மற்றபடி அவன் நடந்தேறுகிற விசார

ணைக்கு அழைக்கப்பட்டான். அவன் நிஜமாகவே தான் திட்டமாய் அறிந்த காரியமாயிருக்கவேண்டும். அவன் ஐம்புலன்களில் ஒன்றினுலாவது அறிந்த அறிவாயிருக்க வேண்டும். அவன் தன் கண்ணுரக்கண்டு, அல்லது காதாரக் கேட்டு, அல்லது உணர்ந்து, அல்லது ருசித்து, அல்லது முகர்ந்ததாயிருக்க வேண்டும். அவன் தன் சொந்த எண்ணங்களேயோ கூறக்கூடாது. அவன் கண்டதும் கேட்டதும் தன் சொந்த அனுபவத்தில் கண்டவைகளேமட்டும் சொல்ல வேண்டியது. கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுகிறவன் தன் சொந்த அனுபவத்திலிருந்துதான் கூறவேண்டும்.

1. இயேசுநாதர் இரட்சிக்கிருர் என்ற செய்தியை நீ பிறருக்குப் பலிதப்படச் சொல்ல வேண்டுமாஞல், நீ அந்த இரட்சிப்பை உன் அனுபவத்தில் அனுபவித்திருக்க வேண்டும். எந்தச் சாட்சியும் எதிர்வாதம் செய்யப்படும். இயேசுவானவர் உன்னே இரட்சித்திருக்கிறதை நீ அறிந்திருப்பதால் நீ இயேசு இரட்சிக்கிருர் என்று சாட்சி சொல்லக்கூடாதா? அவருடைய இரட்சிப்பைப் பற்றிய உன் அறிவும் அனுபவமும் உண்மையும் யதார்த்தமுமானதா? உன் சாட்சி நிச்சயமற்றதும், உறுதியில்லாததுமாயிருந்தால் அது பிறரைத் திருப்தி செய்யாது.

2. தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிருர் என்ற உண்மையை நீ பிறருக்குச் சாட்சிபகருமுன் தேவன் உன் ஜெபங்களுக்குப் பதில் அளித்தார் என்பதை நீ அறிந்திருக்க வேண்டுமே. உன் தனி விண்ணப்பதற்குத் தேவன் திட்டமாய்ப் பதிலளித்திருக்கிருரா? தேவன் உன் ஜெபங்களுக்குப் பதில் அளித்தார் என்ற அனுபவம் உனக்குண்டாஞல் எவரேனும் அதை மறுக்க இயலாது,

அனுபவத்தால்மட்டும் பிறரைத் திருப்தி செய்யக்கூடும். உன் பிரசங்கி அப்படிச் சொல்லுகிறுர், அல்லது அந்தச் சபை அவ்விதம் போதிக்கிறது, அல்லது கிறிஸ்தவர்கள் அப்படி எப்பொழுதும் நம்புகிறுர்கள் என்றெல்லாம் நீ சொன்னுல், தேவன் ஜெபங்களுக்குப் பதில் அருளுகிறுர் என்பதில் எப்படி உன் நண்பனைத் திருப்தி கொள்ளச் செய்வாய்? ஒருபோதும் அவன் திருப்தியடையான். நீ அனுபவத்தைக் கூறுவாயானுல் உண்மையான உன் சாட்சியை நிலைநாட்டுவதுமன்றி வாஞ்சையுள்ள ஆத்துமாவைத் திருப்தி செய்வாய்.

3. நீ பிறருக்குப் பிரயோஜனமானதும், குறைவற்றதுமான சாட்சியைப் பகர வேண்டுமானுல், இயேசுநாதர் உன் எல்லா உள்ளான இருதயத்தின் வாஞ்சைகளையும் திருப்தி செய்கிறுர் என்ற சொந்த அனுபவத்தை உடையவனுயிருக்க வேண்டும். பிறர் ஒருவேளை அருமையான பாடங்களின் கருத்தை அறியாதிருக்கலாம். (மத். 11: 23-30; யோ. 7: 37-39) வேத வசனத்தின் வாக்குத்தத்தங்களையும் ஏற்றுக் கொள்ளாதிருக்கலாம். ஆனுலோ நீ உன் உண்மையான அனுபவ சாட்சியைக் கூறும்போது அவர்கள் நம்புவார்கள்.

கிறிஸ்து உன் ஏக்கங்களுக்கெல்லாம் திருப்தி அளித்திருக்கிறுரா? உன் அனுபவ சாட்சியை அளிக்க இயலுமா? அப்படியானுல் உன் சாட்சி பலமுள்ளதாகும், இல்லையேல் அது பயன்படாது. நீ இயேசு கிறிஸ்துவை நம்பி, வரும் எல்லா கஷ்டங்களையும் அவரிடம் சொல்லப் பழகினுல் அவர் பூரண சமாதானம், சந்தோஷம், இளைப்பாறுதல் இவைகளினுல் பசி, தாகமுள்ள ஆத்துமாவைத் திருப்தி பண்ணுகிறுர் என்று அறிவாய்.

4. கிறிஸ்துவானவர் உனக்குப் பாவங்களின்மேல் ஜெயத்தை அளிக்கிறார் என்பதை நீ அறிந்தால்மட்டும், இந்த உண்மையினால் உன் சிநேகிதர்களை நீ திருப்தி செய்யக்கூடும். நீ விசுவாச ஜெபத்தால் பாவத்தின்மீது அவர் மூலமாய் வெற்றி அடைந்திருக்கிறாயா? நீ பாவத்தை விட்டுவிடும்படியாய் அவர் உனக்குத் திட்டமான வெற்றியைத் தந்திருக்கிறாரா? அவ்வித வெற்றியை இப்பொழுது அனுபவிக்கிறாயா? ஓர் ஆத்துமாவைக் கிறிஸ்துவண்டை நீ நடத்தும்போது, "நான் உறுதியாய் நிலைக்க முடியாது என்று பயப்படுகிறேன்" என்று சொல்வதை அடிக்கடி கேட்கலாம். இவ்வேளையிலே கிறிஸ்துநாதர் உன் ஜீவியத்திலே தந்த வெற்றியை நீ தைரியமாயும், தெளிவாயும் சொல்லு. அவ்விதமான சாட்சி அதிகத் தெளிவாகவும் சாமர்த்தியமாகவும் பேசப்பட்ட பிரசங்கத்தைவிட அதிக பலனுள்ளதாயிருக்கும்.

அறிந்ததைச் சொல்பவன்தான் சாட்சி. ஒருவன் தான் அறிந்ததைச் சொல்ல மனமற்றவனானால் அவன் நன்றாய் அறிந்தாலும் என்ன? அது எவ்வளவு முக்கியமாயிருந்தாலும் என்ன? அவன் சாட்சியல்லவே. சாட்சி சாட்சிசொல்ல வேண்டும். அவன்தான் கண்டறிந்ததைத் தெரிவிக்க மனதுடையவனாயும் கேட்கப்படும் எக்கேள்விகளுக்கும் விடையளிக்கக் கூடியவனாயுமிருக்கவேண்டும். பேசவேண்டியபொழுது பேசாமல் மௌனம் சாதிப்பது ஆபத்தானது. நியாயஸ்தலத்திலே மரணத் தீர்ப்பு பெற்று நிற்கும் ஒருவனுக்குச் சாட்சி கூறினால் அவன் அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்புவான் என்பதை அறிந்தும் மௌனம் சாதித்து நிற்கும் ஒருவனை மனோபாவனை செய்து பார். எந்தக் கண்ணியமான

மனிதனும் இவ்வித ஆபத்தான வேளையில் மௌனம் சாதித்து இப்பழிக்கு ஆளாகான்.

“நான் துன்மார்க்கனை நோக்கி, துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ துன்மார்க் கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்க தாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால், அந்த துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான், ஆனாலும் அவன் இரத்தப்பழியை உன் கையிலே கேட்பேன்” என்று எசே. 33: 8ல் நாம் வாசிக்கிறோம். இது பய பக்தியான எச்சரிப்பு. அழிந்து போகிற பாவிகளுக்கு நாம் தேவனுடைய இரட்சிப்பின் கிருபையை அறிவிக் கிற சாட்சிகளாயிருப்பதினால் நாம் தைரியமாய் நம் வாயைத் திறக்காமலிருக்க முடியாது. நாம் அறிந்ததைச் சொல்ல வேண்டும். எந்தக் கிறிஸ்தவனும் தன் உள்ளத் திலும் ஜீவியத்திலும் எதை அறிந்தான் என்பதைப் பிறர் அறியத்தக்கதாய்த் தைரியமாய் வாயைத் திறந்து கிறிஸ்து வைப்பற்றி சாட்சி பகர வேண்டும். இதை வாசிக்கும் நண்பா! கடவுள் உனக்கு இவ்விஷயத்தில் கிருபை புரி வாராக. ஒரு சாட்சி சாட்சிகூறவேண்டும், தான் அறிந்ததைச் சொல்லவேண்டும். நீ கிறிஸ்துவின் சாட்சியா?

சாட்சியானவன் தன் சாட்சி குற்றம் சாட்டப் படாத முறையில் ஜீவிக்கவேண்டும். நீதிஸ்தலத்திலே பஞ்சாயத்தார் முன்னிலையில் கொடுக்கப்பட்ட ஒரு சாட்சி, அந்தச் சாட்சியைக் கொடுத்தவனுடைய ஜீவி யத்தை நினைவு கூர்ந்து இதற்குத் தக்கபடி சொன்ன சாட்சியை மதிப்பார்கள். சாட்சியானவன் நம்பப்படத் தக்கவன் அல்ல என்று ஊரார் அறிந்திருந்தால், பஞ்சா

யத்தார் அவன் சாட்சியை அதிகமாய் மதிக்கமாட்டார்கள். ஆனாலோ சாட்சியின் நேர்மையையும், உண்மையையும் கிராமத்தார் எல்லோரும் நன்கறிந்திருந்தார்களானால், அவன் வார்த்தைகள் அதிக கனம் பெறும். நீதிஸ்தலத்திலே நிற்கிற எதிர் வக்கீலானவன் சாட்சி பகருகிறவனுடைய ஜீவியத்தில் குற்றம் கண்டுபிடிக்கத் தக்கதான தருணத்திற்கு ஆவலோடு காத்திருந்து முந்திய அவன் ஜீவியத்தில் சமுசயப்படத்தக்க காரியத்தைக் கொண்டு, அவன் சாட்சியைக் கெடுக்கப் பார்ப்பான். இவ்வுலகில் கிறிஸ்தவனுடைய காரியமும் அப்படித்தானிருக்கிறது. நமது நடத்தை நமது வார்த்தைகளுக்கு ஒத்ததாயிருக்க வேண்டும். நாம் ஒன்றைச் சொல்லி அதற்கு மாறாய் ஜீவிக்க இயலாது. ஜனங்கள் நம்முடைய வார்த்தைகளை உண்மையுள்ளவைகளாக எடுத்துக் கொள்ள வேண்டுமானால், நம்முடைய ஜீவியம் உண்மையாயிருக்கவேண்டும்.

ஓர் உயிர்மீட்சிக் கூட்டத்திலே பெயர் கிறிஸ்தவன் ஒருவன் குணப்படாத சகோதரனைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த முயற்சித்தான். உடனே அவன் சினந்து இகழ்ச்சியாக, "அந்த வயோதிப விதவை அம்மாளைப் பற்றிய உன் காரியம் என்ன?" என்றான். ஏனெனில் இக்கிறிஸ்தவ சகோதரன் அந்த அம்மாளுக்குத் தவறு செய்து அவளை ஏமாற்றியிருந்தான். உடனே அச் சகோதரன் முகம் கடுத்து, "ஓ! அது வியாபார விஷயம், இது மார்க்கத்தைப் பற்றியது" என்றான். தன் ஜீவிய சாட்சியில்லாததால் அச்சகோதரனைக் கிறிஸ்துவுக்கென ஆதாயப்படுத்த முடியாமற்போனான்.

தூய்மையாயும், உண்மையாயும் உன்னைக் காத்துக் கொள்ள முயற்சி செய். நீ பாவம் செய்தால் உடனே கிறிஸ்துவண்டை போய் பாவ மன்னிப்பையும், சுத்தி கரிப்பையும் பெற்றுக்கொள். நீ யாருக்காவது தீங்கு இழைத்திருந்தால் அவரண்டை போய் அறிக்கை செய்து மன்னிப்பைப் பெற்றுக்கொள். நீ இவ்விதம் செய்யப் பழகினால் மக்கள் உன்னை மதித்து உன் சாட்சியை நம்பு வார்கள். பின்வரும் வசனங்களை வேதத்தில் கண்டு பிடித்து வாசித்து, உன் ஜீவியத்திற்கு அவைகளை எடுத் துக்கொள். தீத்து. 2: 7, 8; 1 பே. 2: 11-12; 1 பே. 3: 15-16; அப். 4: 13.

சாட்சி தன் சாட்சியை ஒருபொழுதும் மாற்றமாட் டான். அவன் ஒருபோதும் தன் வார்த்தைகளை மாற்ற வோ அல்லது குறைக்கவோ அல்லது விட்டுக் கொடுக்க வோ மாட்டான். அவ்விதம் மாற்றுவது நாசத்திற்கும், நிந்தைக்கும், அவநம்பிக்கைக்கும் இடம் கொடுக்கும். புதிய ஏற்பாட்டிலே சாட்சி என்ற பதம் இரத்தச் சாட்சி யையும் குறிக்கும். உண்மையான சாட்சி தன் சாட்சிக் காக மரிக்கவும் செய்வான், ஆனால் ஒருபோதும் தன் வார்த்தைகளைக் குறைக்கவோ மாற்றவோ மாட்டான்.

அநேகமாயிரம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சாட்சி யாக மரித்தார்கள். அவர்களில் அநேகர் அக்கினிக்கிரை யானார்கள், அநேகர் கொதிக்கிற எண்ணெய்க் கொப் பறைகளில் போடப்பட்டார்கள், வேறு அநேகர் காட்டு மிருகங்களுக்கிரையாக வைக்கப்பட்டனர். சிலுவையில் அறையுண்டார்கள். இரண்டாக அறுப்புண்டார்கள். அவர்களுடைய நாவுகள் அறுக்கப்பட்டன. கண்கள்

காய்ந்த இரும்புக் கம்பிகளால் கட்டப்பட்டன. சக்கரங்களின்மீது நசுக்கப்பட்டனர், என்றாலும் அவர்கள் தங்கள் சாட்சியை மாற்றவேயில்லை. ஆனந்தக்களிப்புடன் அவர் துதியைப் பாடி மாண்டார்கள். அநேக நாடுகளிலே உள்ள மகம்மதிய மதத்தைவிட்ட கிறிஸ்தவர்கள் இன்னும் கிறிஸ்துவின் சாட்சிகளாய்ப் பாடுபட்டு மடிகின்றனர். ஆனால் நம் நாட்டிலோ ஓர் லேசான நிந்தையைச் சகிக்க இயலாது கிறிஸ்துநாதரை மறுக்கவும் ஆயத்தமாயிருக்கின்றனர். அந்தோ! நிந்தை நமக்கே உரியது. கிறிஸ்துநாதர் நமக்காய் தைரியமாய்ச் சாட்சியைப் பகர்ந்து வலது பாரிசத்திலிருக்கிறார். நாமும் அவருக்கு உத்தம சாட்சிகளாய் விளங்குவோமாக. வெளி. 1: 5.

அதிகாரம் 9.

ஆத்தும ஆதாயம் பண்ணுவதில் உன் உத்திரவாதம்

2 கொரி. 5: 15, 18-20ல் நாம் வாசிப்பது, "பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கு என்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லோருக்காகவும் மரித்தார் என்று நிதானிக்கிறோம். இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்", என்பதே.

மேற்கூறிய வசனங்களில் முக்கியமாக நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருக்கிறோம் என்பதையும் ஒப்புரவாக்குதலின் ஊழியம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனிப்போமாக. கிறிஸ்துவுக்காக நாமே வெளியே சென்று மனிதரைச் சந்தித்து தேவனோடு ஒப்புரவாகுங்கள் என்று அவர்களை வற்புறுத்தவேண்டும். இவ்வுலகில் இதுவே நமது உத்திரவாதமும், நாம் நிறைவேற்றவேண்டிய வேலையுமாகும்.

உத்தம கிறிஸ்தவனுயிருக்கிற எவனும் கிறிஸ்துவுக்காய் ஸ்தானுதிபதியாயிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்காய் மனிதரைத் தேடிச் சென்று தேவனோடு ஒப்புரவாகுங்கள் என்று மன்ருடுவோனே கிறிஸ்துவின் ஸ்தானுதிபதியாயிருக்கிருன். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஊழியமும், பிறனைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணுவதே. ஓர் உத்தம கிறிஸ்தவ ஊழியம் செய்து, தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானுல் ஆத்தும ஆதாயமாகிய இச்சேவைக்கென உன்னை ஒப்புக்கொடு. யோவான் முதல் அதிகாரத்திலே, அந்திரேயா இயேசுநாதரைத் தன் மேசியாவாகவும், இரட்சகராகவும் கண்ட பின்னர், அவன் முதலாவது தன் சகோதரனுகிய சீமோனைக் கண்டு, "மேசியாவைக் கண்டோம்" என்று சொன்னுன். அந்திரேயா இயேசுநாதரின் பின்செல்லத் தொடங்கின பொழுதே, தான் வெளியே சென்று பிறரையும் கிறிஸ்துவண்டை அழைத்து வரவேண்டும் என்ற ஆவல் மேலிட்டதால் முதல் முதல் தன் சகோதரனையே ஆண்டவரிடம் அழைத்துக்கொண்டு வந்தான். அந்திரேயாவின் சகோதரனுகிய பேதுரு ஆண்டவருடைய சீஷருக்குள் பிரபலமான சீஷனுகிய தன் சகோதரனைவிட மேலான ஊழியத்தை ஆண்டவருக்குச் செய்தார். இது உன்னை உற்சாகப்படுத்தக்கூடும். உன்னைப் பற்றி நீ அற்பமாய் எண்ணலாம், நீ ஒரு சாதாரண ஆளாயிருக்கலாம். என்ருலும், நீ ஒரு ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்கென ஆதாயப்படுத்திஞல், அந்த ஆத்துமா அநேகமாயிரம் பேரைக் கிறிஸ்துவுக்கெனக் கொண்டு வரக்கூடும். உதாரணமாக D. L. மூடி என்பவரைக் கிறிஸ்துவண்டை கொண்டு வந்தவர் ஆயிரக்கணக்கான

மக்களை D. L. மூடி கிறிஸ்துவண்டை கொண்டுவருவார் என்று அறியாதிருந்தார். நீ ஓர் உத்தம கிறிஸ்தவனாக இருக்க விரும்பினால் அந்திரேயாவின் மாதிரியைப் பின்பற்று. பிறரைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணு. அவ்வேலையை உன் குடும்பத்திலேயே ஆரம்பி. அந்திரேயாவின் சாதாரண சாட்சியைக் கவனி. "நாங்கள் மேசியாவைக் கண்டோம்" என்று மாத்திரம் சொன்னான். நீயும் அவ்விதமே உன் நண்பர்களிடமும், உனக்கன்பானவர்களிடமும் போய், "நான் இரட்சகரைக் கண்டேன்" என்று சொல். இது உனக்குக் கடினமானதும் உன் சக்திக்கு மிஞ்சினதுமில்லையே. அந்திரேயாவின் சாட்சி பேதுருவினிடத்தில் பலித்ததுபோல உன்னுடைய சாதாரண சாட்சியும் ஒருவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவாயிருக்கலாம்.

பவுல் அப்போஸ்தலன் சொல்லிய வார்த்தைகளைக் கேள். "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும், ஏற்படுத்தினார்" (எபே. 4: 12, 13.) பிரதான தலையாகிய இயேசு கிறிஸ்து ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஏதாகிலும் சில வரத்தையோ அல்லது திறமையையோ கொடுத்திருக்கிறார். வசனம் சொல்வதாவது, "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக" அவர் பலவித வரங்களை வித்தியாசமான கிறிஸ்தவ மக்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பது. கிறிஸ்துவின் ஊழியத்திலே ஆத்தும

ஆதாயம் செய்யத் தக்கதாய் ஏதோ ஒரு பங்கு பெற உனக்குக் கிடைக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுவதே இந்த வேலையின் நோக்கம். சர்வ லோகம் எங்குமுள்ள கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்துவுக்கென ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவார்களானால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை கட்டப்பட்டு கடைசியாக அவ்வேலை முற்றுப்பெறும். இரட்சிக்கப்பட வேண்டிய கடைசி ஆத்துமா இரட்சிக்கபபட்டவுடனே கிறிஸ்துவின் வருகை இருக்கும். இது கிறிஸ்துவுக்கென மனிதரை ஆதாயம்பண்ண நம்மை உற்சாகப்படுத்துகிறது. யாருக்குத் தெரியும்? கடைசி ஆத்துமாவை நீ தேடி கிறிஸ்துவுக்கென ஆதாயம்பண்ணும் வேளையிலே கிறிஸ்வின் வருகை யிருக்கலாம். நாம் என்றென்றைக்கும் அவரோடிருக்கும்படி ஆகாயத்திலே எடுத்துக் கொள்ளப்படுவோம்.

'கிறிஸ்துவுக்குள்ளான உன்னுடைய விசுவாசத்தைப் பிறர் கேட்கத்தக்கதாய் நீ சாட்சி கூறவேண்டும்' என்று முந்தின அதிகாரத்திலே பார்த்தோம். இப்பொழுதோ நாம் விரும்புவது, நீ சாட்சி கூறுவதின் ஒரே ஒரு பிரதான நோக்கம் பிறரைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணுவதாயிருக்க வேண்டுமென்பதே. கிறிஸ்து நாதரை நாம் இப்பூமியிலே அறிக்கையிடுவதினால்மட்டும் கிறிஸ்துநாதர் நம்மைத் தமது பிதாவின் வலது பாரிசத்திலேயிருந்து அறிக்கை செய்வார். ஆனால் நாம் நமதுள்ளத்திலே பிறரைக் கிறிஸ்துவண்டை நடத்த வேண்டுமென்று பிரதான ஆவல் கொள்ளவேண்டும். அதுவே கிறிஸ்துநாதருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத்தரும். 2 கொரி. 5ல் 'பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று

பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கவேண்டும்' என்று பார்த்தோம். இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கெனப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜீவியமே கிறிஸ்துவுக்கு அதிக பிரியமானது. கிறிஸ்துவானவர் அப். 1. அதிகாரத்திலே தம் சீஷர்களிடம் 'நீங்கள் பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்று சொன்னதின் நோக்கம் யாதெனில், தம் சீஷருடைய சாட்சியினுல் அவர்கள் எல்லா ஜாதி, கோத்திரம், பாஷைக்காரர் இவர்களிலிருந்தும் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ணவேண்டும் என்பதே.

நீ கிறிஸ்துநாதரண்டை சீர்கெட்ட பாவியாய் வந்தபொழுது உன் சொந்த ஆத்தும இரட்சிப்பைத்தேடியே வந்தாய் என்று சந்தேகமறக் கூறலாம். இப்பொழுது நீ இரட்சிக்கப்பட்ட பின்பு பிறருடைய ஆத்தும இரட்சிப்பை நாடுவதே உன் நோக்கமாயிருக்கவேண்டும். உன் இரட்சகரைப் பிரியப்படுத்துவதின் நோக்கம் இதைவிட வேறொன்றுமில்லை. நாம் இயேசுநாதரை அறிக்கையிடுவதின் மூலம் பிறர் தம்மை இரட்சகராக அறியக்கூடுமாதலால், நாம் அவரைப் பிறருக்கு முன்பாக அறிக்கையிடுவதில் அவர் பேராவல் கொள்ளுகிருர்.

நம்முடைய இம்மையின் ஜீவியத்தைப்பற்றி ஆண்டவருக்கு அவ்விதமான நோக்கமில்லாதுபோனுல், நாம் இரட்சிக்கப்பட்டவுடனே அவர் நம்மைத் தம்மிடம் பரத்திற்கு எடுத்துக்கொண்டிருப்பார். ஆனுலோ அவர் நம்மை இப்பூமியில் வைத்திருப்பதற்கு ஒரு நோக்கமுண்டு. அந்தகாரத்திலிருப்போர் பிரகாசிக்கிற ஒளியை நம்மில் பார்த்து அவரைத் தங்கள் தேவனுக அறிய

வேண்டும் என்றிருக்கிருர். நீ ஒரு வாலிப கிறிஸ்தவ ஞனுல் ஆண்டவர் உன்னை இந்தப் பூமியிலே பல வருஷமாக ஜீவிக்கத் தவணை கொடுப்பாராகில் உன் நீண்ட ஆயுட்காலத்திலே அநேகர் உன் மூலமாய்த் தம்மை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற நோக்கமுடையவராய் இருக்கிருர். நீ ஒரு வயோதிபனும் அநேக காலத்திற்கு முன்பே ஆண்டவரை அறிந்த ஒரு ஆளாயிருந்தால் உன் மூலமாய் அநேகர் தம்மை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற நோக்கத்துடனேதான், நீ இன்னும் உயிரோடிருக்கக் கருணை புரிகிருர். அந்நோக்கம் உன் வாழ்க்கையில் நிறைவேறி வருகிறதா? அல்லது உன் இரட்சகரை ஏமாற்றிவிட்டாயா? யோவான் பதினைந்தாம் அதிகாரத்தில் ஆண்டவருக்கும் நமக்கும் இருக்கிற சம்பந்தத்தைத் திராட்சச் செடிக்கும் கொடிக்கும் ஒப்பிட்டு வர்ணிக்கிருர் (யோ. 15: 5). "நான் திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி கொடுப்பான்; என்னையல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது" என்கிருர். இதன் விசேஷித்த பாடம் யாதெனில் ஆண்டவருக்கும் நமக்குள்ள இன்றியமையாத தன்மைதான். செடிக்கு எவ்வாறு கொடி இன்றியமையாததோ, அவ்வாறே நமக்கு ஆண்டவர் இன்றியமையாதவர். "என்னையல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது" என்கிருர். கொடி செடியின்றி ஒன்றும் செய்ய இயலாததுபோல கிறிஸ்துவன்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவரே நம் ஆத்தும ஆதாயத்திற்கும், ஆவியின் கனிநிறைவுக்கும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், சுகத்திற்கும், பலத்திற்கும் இன்றியமையாதவர். எதிர்மாருகச் சொன்னுல், கொடியும் செடிக்கு இன்றியமையாதது.

கொடியானது செடியின்றி கனி கொடுக்கமாட்டாதது போல, கொடியின்றி செடியும் கனி கொடுக்கமாட்டாது. கனி எப்பொழுதும் கொடியில்தான் உண்டு. அது செடியிலோ அல்லது அடிபாகத்திலோ இல்லை. "நீங்களே கொடிகள்" என்று இயேசுநாதர் சொன்னதை ஞாபகத்தில் வை. கொடியாகிய நமது மூலமாகப் பிற ஆத்துமாக்களாகிய கனிகளைக் கொடுக்கிறார்.

கிறிஸ்துபெருமான் பெந்தேகோஸ்துக்குப்பின் இவ்வுலகில் நடப்பிக்கும் வேலைப்பாடு தம் ஜனத்தின் மூலமாக நடந்தேறச் செய்கிறார். பரிசுத்தாவியானவர் தம் ஜனத்தோடு வாசம்பண்ணி, அவர்கள் மூலமாகக் கிறிஸ்துவின் வேலையை நடப்பிக்கிறார். கிறிஸ்துவின் மக்களின் ஜெபத்தினாலும், சாட்சியினாலும், பிரசங்கத்தினாலும் மீட்பரைப்பற்றிப் பிறரோடு சம்பாஷிப்பதினாலும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படக்கூடும். நமது மூலமாகவும், நமது சாட்சியின் வழியாகவும் ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணக்கூடும். நாம் மனிதரைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணினால் ஒழிய அவர்கள் ஆதாயம் பண்ணப்படமாட்டார்கள். நாம் கிறிஸ்துநாதரின் இரட்சிப்பின் கிருபையைத் தெரிவிக்காமற் போனால், வேறு சாட்சியில்லையே. சுவிசேஷத்தை நாம் அறிவிக்காமற் போனால், சுவிசேஷம் அறிவிக்கப்பட முடியாது. உலகிற்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெரிவிக்கவேண்டிய கிறிஸ்துவின் கால்கள் நமது கால்கள் தான். கெட்டுப்போன மக்களுக்கு மீட்பின் செய்தியைக் கூறும் நாவு கிறிஸ்துவுக்கு வேறில்லை, அது நம் நாவு தான். கல்வாரியின் பிராயச்சித்த மரணத்தினால் உண்டான மீட்பின் கிருபையைக் கூறும் உதடுகள் நம்

முடைய உதடுகளேயன்றி கிறிஸ்துநாதருக்கு வேறு உதடுகளில்லையே. சுவிசேஷத்தின் நற்செய்தியை வேறு பாஷைகளிலே மாற்றி எழுதுவதற்கு வேண்டிய கரங்கள் நம்முடைய கரங்கள்தான், அவருடைய இரக்கத்தையும் கிருபையையும் மனுமக்களுக்குச் சாட்சிபகர வேண்டிய ஆட்கள் நாமே. இவ்வாறிருக்கும்போது நாம் துணிவது எப்படி?

ஆத்தும ஆதாயம் செய்யும் இத்தொழில் ஆரம்பத்தில் சற்று கடினமாயிருக்கலாம், எனினும் ஒருமுறை ஒரு ஆத்துமாவை நீ கிறிஸ்துவுக்கென சம்பாதித்தால், அப்புறம் நீ ஒருபோதும் அதை விட்டுவிடமாட்டாய். சுவிசேஷ ஊழியனுகிய D. L. மூடி தன் வாழ்க்கையிலே வைத்துக்கொண்ட பிரமாணம் யாதெனில், "என் வாழ் நாளிலே ஒவ்வொரு தினத்திலும் ஓர் ஆத்துமாவையாவது சந்தித்து இரட்சிப்பின் செய்தியைக் கூறி அவனைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணுமலிரேன்" என்பதே. ஆத்தும ஆதாயம் பண்ண ஓர் ஆள் சாமர்த்தியசாலியாகவோ அல்லது திறமை வாய்ந்தவனுகவோ இருக்கத் தேவையில்லை.

பிறரிடத்தில் முதல்முதலாய் எவ்வாறு சம்பாஷணையைத் தொடங்குவது என்பதே இவ்வேலையிலுண்டாகும் பெரிதான கஷ்டமாகும். ஒரு வழி யாதெனில், நீ வெளியே செல்லும்பொழுது உன்னுடன் சில சுவிசேஷப் பிரதிகளை வைத்துக்கொண்டு, சமயம் வரும்போது அவைகளைப் பிறருக்குக்கொடு. இதன் மூலமாய் நீ இரட்சிப்பைப்பற்றி சொல்ல வழியுண்டு. அப்புறம் உன் இரட்சிப்பைப்பற்றிச் சொல்லி, இயேசுநாதரை ஏற்றுக்

கொண்டதுபோல அவரும் ஏற்றுக்கொண்டால் இரட்சிக்கப்படுவார் என்று உறுதிமொழி கூறு.

பிரசங்கி ஒருவர் முதல்முதலாய் தான் ஓர் ஆத்துமாவைக் கிறிஸ்துவண்டை நடத்தியபொழுது தனக்குண்டான மகிழ்ச்சியை விவரித்தார். அது யாதெனில் தன் தகப்பனுர் பிரசங்கித்த ஒருசமயம் தான் பாடகரோடு உட்கார்ந்திருந்தார். பிரசங்கத்திற்குப்பின்பு ஜனங்களைக் கிறிஸ்துவண்டை நடத்தும்படியாய் அழைப்பு வந்தது. அப்பொழுது இந்த வாலிப பிரசங்கியைப் பாடகரின் தலைவர் "நீ ஓர் ஆத்துமாவைப் பிரசங்கப் பீடத்தண்டை அழைத்துச்செல்" என்று இவனை விரட்டுமட்டும் அவன் மந்தமாய் உட்கார்ந்திருந்தான். அவன் எழும்பி மனக்குழப்பமாயும், மந்தமாயும் முதலாம் வாலிபனண்டை வந்து "நீ கிறிஸ்துவண்டை வர விரும்புகிருயா?" என்று கேட்க, அந்த வாலிபன் சம்மதித்துப் பிரசங்கப் பீடத்தண்டை போனுன். பாடகர் கூட்டத்திலிருந்து போனவன் இந்த வாலிபனைக் கிறிஸ்துவண்டை நடத்தினுன். தன் கிறிஸ்தவ ஜீவியத்தில் இது முக்கியமான அனுபவம் என்ருன். நீயும் ஆத்தும ஆதாய ஊழியத்தைத் தொடங்கினுல் பிறரை இரட்சகரண்டை வழி நடத்தக்கூடும். உன் உள்ளத்திலே உண்மையான அன்பு பிறருக்காயிருக்குமானுல், உன் சாட்சியின் மூலமாய் நீ பிறரை வசப்படுத்தக்கூடும். அநேகர் அன்புக்கு இணங்கக்கூடுமே. உன்னிடத்தில் அவ்விதமான மெய்யன்பு உண்டெனக் காணும்போது அவர்களை நீ கிறிஸ்துவண்டை நடத்த பிரயாசப்படுகையில் உன்மேல் அவர்கள் பகை கொள்ளார்கள். அன்பினுல் நீ பிறரோடு சம்பாஷணை செய்யும்போது கிறிஸ்துவுக்கென அவர்களை

ஆதாயம் பண்ணுவாய். அவ்வித மெய் அன்பு உனக்கில்லாது போனால் பரிசுத்தாவியானவரை நோக்கி அவர் உன் உள்ளத்திலே தேவன்பை ஊற்றும்படி பிரார்த்தனை செய். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும் பரிசுத்தாவியானவர் நடப்பிக்கும் வேலைகளில் இது ஒன்றாகும் (ரோ. 5: 5). இழந்துபோன ஆத்துமாக்களை அன்புகூர நம் இருதயங்களில் அன்பை நிறைய ஊற்ற நம்மால் முடியாமற்போயினும் பரிசுத்தாவியானவர் இதைச் செய்வார். நாம் அவரைக் கேட்டு அவருக்கு இடம் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவுக்கென ஓர் ஆத்துமாவை ஆதாயம் பண்ணும்படி நீ செய்யும் முயற்சி உண்மையான அன்பினாலிருக்குமானால் அது தப்பிதவாகவோ, சரியாகவோ மதிக்கப்பட்டாலும், அம்முயற்சி அவ்வாத்துமாவுக்கு இரட்சிப்பாகவே முடியக்கூடும்.

உத்தம கிறிஸ்தவன் ஆதாயம் செய்பவன். இவ்வித ஆத்தும ஆதாயம் செய்கிறவன் பின்வாங்கான். ஆத்தும ஆதாயம் செய்யாதவன் எப்பொழுதும் அதைரியம் கொள்வான், மனமகிழ்ச்சியாயிரான். மேலும் தன் ஜீவியத்தில் வெற்றியடையான்.

ஜெப ஜீவியமே எல்லா ஆத்தும ஆதாயத்திற்கும் இரகசியமாயிருக்கிறது. ஆத்தும ஆதாய வேலையில் ஜெபமின்றி ஆரம்பித்து தேவன் இந்த வேலையை ஆசீர்வதிக்கவும், ஆத்துமாக்களைத் தரவும் ஜெபம் பண்ணாமல் முயற்சித்தால் நீ உன் முயற்சிகளிலெல்லாம் தோல்வியடைவாய்; ஆனால் நீ தேவனிடத்தில் ஆத்தும ஆதாயம் செய்யத்தக்கதான உண்மையான வல்லமையையும், கிருபையையும், அன்பையும் பெற்றுக்கொண்டு

இவ்வூழியத்தை உத்தமமாய்ச் செய்ய ஆரம்பித்தால் ஏராளமான பலனை உன் நண்பர்களிடத்திலும் உன் அறிமுகமானவர்களிடத்திலும் கண்டடைவாய்.

நீ ஓர் உத்தம கிறிஸ்தவனாக வேண்டுமென்றால் ஆத்தும ஆதாயத்தை இன்றே ஆரம்பி. இப்பொழுது உன் முழங்காலை ஜெபத்திற்கென முடக்கித் தேவனை நோக்கிப் பிரார்த்தித்துத் தவனமுள்ள ஆத்துமாக்களுக்குள் ஊழியத்தைச் செய்.

அதிகாரம் 10.

உலகத்தோடு உன் உறவு

ஒருவேளை உலகத்தோடுள்ள சம்பந்தத்தினுல்தான் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அதிக சோதனை உண்டாகிறது. சில கிறிஸ்தவர்களைப் பலவித உலகக் காரியங்கள் பிடித்திருப்பதால் அவர்கள் அவைகளை விட்டுவிடுவது கடினமாயிருக்கிறது. மேலும் அவைகள் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாயுமிருக்கின்றன. அவர்கள் உலகக் காரியங்களைப் பற்றிக் கொள்வதினுல் அவைகள் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடை செய்கின்றன.

கிறிஸ்தவர்களின் உலக சம்பந்தத்தைப்பற்றிப் பல வேத வசனங்களுண்டு (யோ. 15 : 19). "நீங்கள் உலகத்தாரல்ல" என்று இயேசுநாதர் சொன்னுர். பவுல் இதைப்பற்றிச் சொல்வது யாதெனில், "நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணவேண்டும்" என்பதே (தீத்து 2: 12). மேலும் பவுல் எபே. 2: 2ல் அச்சபையாரின் குணப்படுதலுக்கு முன்னுன காலத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" என்ருர். எபே. 2 : 12, 13ல் சொல்லுகிறதாவது, "அக்காலத்திலே கிறிஸ்துவைச்

சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை களுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுல கத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்கள் என்று நினைத் துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" என்பதே. இரட்சிக் கப்படாததற்கு முன்னும், இரட்சிக்கப்பட்ட பின்பும் இவர்களிடத்திலே ஏராளமான வித்தியாசங்கள் சொல் லப்பட்டிருக்கின்றன. இரட்சிக்கப்படுவதற்கு முன், இவர்கள் இவ்வுலக வழக்க பழக்கங்களையும், தீமையை யும் விரும்புகிறவர்களுமாயிருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவை அறிந்தது முதல் இவைகள் மாறிப்போயின.

2 தீமோ. 4: 10ல் "தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து என்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டான்" என்றும், யாக்கோபு 4: 4ல் "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவ னுக்குப் பகைவனாயிருக்கிறான்" என்றும், 1 யோ. 2: 15ல் "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந் தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்றும், 2 கொரி. 6: 17ல் "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடு விலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என் றும் வாசிக்கிறோம்.

நீ ஓர் உத்தம கிறிஸ்தவனாயிருந்தால், இவ்வுலகத்தி லுள்ள பாவ சம்பளங்களைப்பற்றி வேத வசனம் சொல்

வதைக் கேட்டு எச்சரிப்படைவாயாக. ஒருவன் மறு பிறப்பைத் தன் ஜீவியத்தில் அனுபவிக்கும்போது அவன் அநேக உலகக் காரியங்களையும், அதன் வழிகளையும், அதன் இன்பங்களையும் விட்டுவிட வேண்டும் என்பதின் அவசியத்தைக் காண்பான். இந்தக் காரணத்தை யோவான் தன் நிருபத்தில் காட்டுகிறார். (1 யோ. 5: 19) "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிற தென்று அறிந்திருக்கிறோம்" என்பதே. நேர்மையான மனதோடே ஒருவன் இவ்வுலகத்தை உற்றுநோக்கினால், முழு உலகமும் தேவனைவிட்டு வெகுதூரம் போயிருக் கிறதென்றும், அது எல்லாவிதமான அசுத்தத்தாலும், தீமையாலும் நிறைந்திருக்கிறதென்றும் காண்பான். இவ் வுலகத்தின் ஜனங்கள் துன்மார்க்கத்தையும், அசுத்தமான காரியங்களையும் சிநேகிக்கிறார்கள். உலகத்தின் அநேக இன்பங்கள் அசுத்தமாயும், பரிசுத்தமில்லாமலிருப்பது மன்றி அநேக துன்மார்க்கத்திற்கும், அவமானத்திற்கும் ஏதுவானதாயும் இருக்கிறது.

இவ்வுலகத்தின் ஆவியெல்லாம் தேவ காரியங்களில் நிர்விசாரமாகவும், கிறிஸ்துவைப் பகைக்கக் கூடியதாயு மிருக்கிறது. உலகத்தின் ஆவியெல்லாம் பரிசுத்தமில் லாததெதுவோ, இழிவானதெதுவோ அதை முக்கியப் படுத்தி அதன்பேரில் பெரிதும் சிநேகம் பாராட்டுகிறது. உலகத்தாருடைய துன்மார்க்கமான சம்பாஷணை, அவர் களுடைய தாழ்மையான ஜீவியம், மோக இச்சை, துன்மார்க்க ஜீவியம் இவைகளில் ஒரு கிறிஸ்தவன் இச்சைகொள்ள ஒன்றுமில்லை. நாடகங்களில் நடக்கும் அநேக விஷயங்கள் குற்றம், பயங்கரம், இச்சை இவை களுக்கு இடம் கொடுக்க ஏவிவிடும். உலகத்தின் ஒழுக்

கம் இப்படி இருக்கிறதினால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கவேண்டும். நீ இப்பொழுது கிறிஸ்துவை விசுவாசித்து அவரைப் பின் பற்ற நாடுகிறாய். ஆகவே நீ வேளா வேளைகளில் தகுந்த கேள்வியைக் கேட்க வேண்டும். "நான் சினிமா வுக்குப் போகலாமா? புகை பிடிக்கலாமா?" இவ்வித அநேக கேள்விகள் எழும்பும்போது நீ அவைகளுக்கு ஏற்ற விடைகளைக் கண்டு பிடிக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவனுடைய விடை எதுவாயிருக்கவேண்டும்? சினிமா ஸ்தலத்திலே குற்றம், அவிசுவாசம், இச்சை இவற்றை முக்கியப்படுத்துகிறதினால் தூய மனதுடைய எவனும் அடிக்கடி துர்இச்சைகளைக் கிளப்பிவிடக் கூடிய இவ்வித படக்காட்சிகளைக் காண்பதால் அவன் மனம் அசுத்தமான வழிகளில் தீட்டுப்படுமல்லவா? இவ்வித படக் காட்சிகளால் அநேக வாலிபர் துர்இச்சை களுக்கும், பழிக்கும் ஆளாகின்றனர். இவ்வித படக் காட்சிகளை வைத்து நடத்துபவர்கள் பணம் சம்பாதிப் பதற்காகவே இவ்விதம் செய்கின்றனர். ஜனத்திரளை அதிகரிக்கச் செய்வதற்காகவே இவர்கள் மரியாதையும், ஒழுக்கமும், பரிசுத்தமுமில்லாத படங்களைத் தயாரிக் கின்றனர். ஆகவே இன்னும் அதிகமதிகமாகவே மோக இச்சை, துன்மார்க்கம், பழி இவ்வித வழிகளை நாடுகிறார் கள். அநேக கிறிஸ்தவர்கள் வாரந்தோறும் இவ்வித இச்சையும், அவமானமுமான படக்காட்சிகளால் தங்களைத் திருப்தி செய்யப் பிரயாசப்படுகிறது மகா பரிதாபம். வேளாவேளைகளில் சில நல்ல படங்கள் என்று சொல்லப்படுகிற படங்களைக் கொண்டுவந்து காட்டி னாலுங்கூட, அவைகளின் நோக்கம் கெட்ட படங்

களுக்குப் போகாதவர்களின் பணத்தையுங்கூடப் பறிப்பதுதான்.

புகையிலை உபயோகிப்பது பண நஷ்டமும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இடையூறுமாகும். இது சரீரத்திற்குக் கேட்டையும், கிறிஸ்தவ சாட்சிக்கு நஷ்டத்தையும் விளைப்பதுமன்றி, ஒருவனுடைய வாழ்க்கை முழுவதும் இவ்வித கெட்ட பழக்கத்தால் ஆளப்படுகிறது. ஒரு மனுஷனைப் பிடித்து அவனுடைய சரீரத்திலும் நரம்புகளிலும் தீமையை நடப்பிக்கக்கூடிய பழக்கம் தேவனுடைய பிள்ளைக்கு ஏற்ற ஒரு பழக்கம் அல்ல. நம் சரீரம் பரிசுத்தாவியின் ஆலயம். நம்மால் கூடியமட்டும் நாம் அவருக்காகப் பரிசுத்தமாய் அதைக் காக்கவேண்டும். புகையிலை நாற்றம் எடுக்கிற ஒரு சரீரத்திலே பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ண விரும்புகிறதில்லை என்று நாம் நம்புகிறோம். கிறிஸ்துவானவர் பாவத்தின் பேரிலும், தீய பழக்க வழக்கங்களின் பேரிலும் மனிதருக்கு ஜெயத்தைக் கொடுக்க வல்லவர் என்று நாம் பிரசங்கித்தும் நம்முடைய ஜீவியத்திலே புகையிலை பழக்கத்திற்கு நாம் அடிமைப்பட்டிருந்தால் நம்முடைய சாட்சி மிகவும் பலவீனமடையும்.

கிறிஸ்தவ ஜீவியமானது உற்சாகமில்லாத ஜீவியம் என்று எண்ணவேண்டாம். வேதாகமத்தில் வாசித்தால் நாம் உலகத்திலிருந்து நீக்கப்பட்டு தேவனுக்கென்றே பிரிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்று பார்க்கிறோம். நாம் தேவனுக்கென்று உலகத்தைவிட்டுப் பிரிந்திருக்கிறோம். ஆண்டவர் நம்முடைய ஜீவியத்திலிருந்து அப்புறப்படுத்துகிற ஒவ்வொரு காரியத்திற்கும் பதிலாக மேலானதொன்றை நமக்குத் தருகிறார். கிறிஸ்

துவின் காரியங்களுக்காய் நாம் எவ்வளவு அதிகமாய் நம்மைப் பிரத்தியேகப் படுத்துகிறோமோ அவ்வளவு தான் உலகத்தின்மேல் நமது ஆசை குறையும். இயேசு வானவர் தம் மரணத்திற்கு முந்திய இரவு தம் சீஷரோடு இருந்தபோது அவர் தம் சீஷர்கள் உலகத்திலிருந்தாலும், அவர்கள் உலகத்தார் அல்ல என்று குறித்த கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நிலைமையும் அதுவேதான். அவர் நம்மை இவ்வுலகத்தின் ஜனங்களினின்று தெரிந்தெடுத்துத் தமக்குரிய விசேஷித்த சொந்தமான ஜனமாகப் பிரித்தெடுத்திருக்கிறார். சபை என்பதின் அர்த்தம் வெளியே அழைக்கப்பட்ட ஒரு கூட்டம் என்பது; ஏனெனில் அது உலகத்தினின்று அழைக்கப்பட்டும், பிரத்தியேகப் படுத்தப்பட்டும் இருக்கிறது. நாம் உலகத்தினின்று வெளியே அழைக்கப்பட்டும் தேவனுக்கென பிரத்தியேகமாக்கப்பட்ட ஒரு ஜனக்கூட்டம் என்றும் உலகில் பிறர் காண நாம் ஜீவிக்க வேண்டும்.

நாம் உலகத்தின் எல்லா வழிகளிலும் நடந்து, உலகம் செய்வதெல்லாவற்றையும் நாமும் செய்து, உண்டு, உடுத்துவதில் உலகத்தின் நிலைக்குத் தக்கபடி நம்மை வைத்துக்கொண்டால் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று உலகம் அறிவதெப்படி? ஆனால் நம்முடைய வாழ்க்கைக்கும், அவர்களின் வாழ்க்கைக்கும் வித்தியாசத்தை அவர்கள் காணும்போது மட்டும் தான் நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள். இதுதான் நமக்குத் தேவை.

பிறருக்கு வெளிச்சம் கொடுக்கவே தேவன் நம்மை சன்னியாசி மடங்களிலே பிரத்தியேகப்படுத்தி வைத்துக்

கொள்வதோ அல்லது உலகத்தின் ஜனங்களிலிருந்து நம்மை முற்றுமாய் அப்புறப்படுத்திக் கொள்வதோ வேண்டாம். ஆனால் துன்மார்க்கமான உலகிலே, "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியான" தேவ மக்களாய் ஜீவிக்க வேண்டும்.

உலகமானது வெறுமையும், அதிருப்தி கொடுக்கக் கூடியதுமாயிருக்கிறது. பிரசங்கியின் புஸ்தகத்தை நீ வாசித்துப் பார்த்தால் சாலொமோன் எவ்வளவாய் இவ்வுலகத்தை அனுபவிக்கப் பிரயாசித்தும், அது தனக்குத் திருப்தியையும், சமாதானத்தையும் அளிக்கக்கூடாததைக் கண்டான். அவன் ஆராய்ச்சியின் முடிவு "எல்லாம் மாயை" என்பதே. சாலொமோன் அதி. 1: 13ல் கல்வியும் ஞானமும் தன் உள்ளான ஆத்மதாகத்தைச் சாந்தி செய்யும் என்றெண்ணி அதன் பேரில் கவனத்தைச் செலுத்தினான். ஆனால் அவன் ஆராய்ச்சியின் பலன் யாதெனில், "எல்லாம் மனதுக்குச் சஞ்சலமும், மாயையுமாயிருக்கிறது" என்பதே. இரண்டாம் அதிகாரத்திலே உலகத்தின் எல்லா இன்பங்களையும், சந்தோஷங்களையும் அனுபவிக்க எண்ணி அவைகளினால் தன்னைச் சீராட்டினான். முடிவில் அவன் கண்ட பலன் "மாயை" என்பதுதான். இன்னும் அவ்வதிகாரத்தின் பின்பாகத்திலும், மற்றைய அதிகாரங்களிலும் உலகத்தின் ஐசுவரியத்தால் தன் உள்ளத்தைத் திருப்தி செய்ய முயற்சித்தான். இங்கேயே தான் தேடுகிற ஆத்ம சாந்தியை அடையலாம் என்று எண்ணிப் பணத்தால் வாங்கக்கூடிய எல்லாவற்றையும் வாங்கினான். அவன் ஆராய்ச்சியின் முடிவு, "எல்லாம் மாயையும் மனதுக்குச்

சஞ்சலமுமாயிருக்கிறது'' என்பதுதான். சாலொமோனை விட வேறு எவரும் உலகத்தை முழுவதும் அனுபவித்த தவரில்லை. உலகம் தன் இன்பத்தாலும், கல்வி அறிவாலும், ஐசுவரியத்தாலும் பெரிய மனுஷனாகிய சாலொமோனையே திருத்தி அமைக்கவில்லை யென்றால், வேறு ஒருவரையும் இவ்வுலகம் திருத்தாது என்பது நிச்சயம். உலகத்தின் வழிகளிலே சாலொமோனைப்போல் நீண்ட காலம் அதை நாடிச் சென்றோர், முடிவிலோ எல்லாம் வீணும் விருதாவுமாயிற்றென்று புலம்புவர். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?''

உலகம் மக்களைப் பெரிதும் நயங்காட்டி, திருத்தித் தருவதாக வாக்குக் கொடுக்கிறது, ஆயினும் அது மயக்கி வஞ்சிக்கும். அது தன் வாக்குகளைக் காத்துக் கொள்ள முடியாது. அது ஆத்துமாவைக் குளிரப் பண்ணி பசியும், பட்டினியுமாக்கி, ஜீவனை அதிருப்தியில் விட்டுச் செல்லும். அடிக்கடி உலகத்தின் ஐசுவரியத்தையும், இன்பத்தையும் திரளாய் அனுபவித்தவர்கள் தற்கொலை செய்து தங்கள் ஜீவனை முடிக்கின்றனர். அப்படியானால் கிறிஸ்தவர்கள் வெறுமையும், மாயையுமான இவ்வுலகத்தின் பேரில் ஆசை கொள்வதேன்?

பவுல் கொலோ. 3:1-2ல் கூறியது கிறிஸ்தவர்களுக்கு உத்தமமானது. "கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்குமிடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல; மேலானவைகளையே நாடுங்கள்.'' ஒருவனுடைய பொக்கிஷம்

எங்கேயோ அங்கேயே அவன் இருதயமிருக்கும். நமது பொக்கிஷம் பரத்திலிருந்தால் நமது உள்ளமும் பரத்தையே நாடும். ஆனால் நமது பொக்கிஷம் இந்த உலகத்திலிருந்தால் நமது மனதும் உள்ளமும் உலகையே தேடும். உன் பொக்கிஷம் எங்கே? உங்கள் நாட்டம் எங்கே? யோவான், "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்கிறான் (1 யோ. 2: 15). அதே-போதனை மீண்டும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. தேவ அன்பு நமது இருதயங்களிலே பிரவேசித்து வழிந்தோடினால்,கிறிஸ்துவைத் தள்ளிப் பகைக்கிற இவ்வுலகக் காரியங்களை நாம் நாடாமல், அதற்குப் பதிலாகக் கிறிஸ்துநாதர் இருக்குமிடத்திலுள்ள மேலானவைகளையே தேடுவோம். கிறிஸ்துநாதருக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் சீராயிருக்குமானால் நமக்கும் உலகத்திற்குமுள்ள சம்பந்தம் ஏற்றவிதமாய் நடைபெறும்.

உனக்குப் பிரயோஜனமான சில கேள்விகளை உனக்கு முன் வைக்கிறேன். நீ ஒரு காரியத்தைச் செய்யலாமோ, அல்லது செய்யக்கூடாதோ என்று உனக்குள் தீர்மானிக்கிறபொழுதெல்லாம் இக்கேள்விகளைக் கேள்.

1. இது கிறிஸ்துநாதருக்குப் பிரீதியாயிருக்குமா?

2. இது தேவனை மகிமைப் படுத்துமா?

3. இயேசுநாதர் இதைச் செய்வாரா?

4. இது பிறருக்கு முன்பாக என் கிறிஸ்தவ சாட்சியைப் பலப்படுத்துமா?

5. இது என் சொந்த கிறிஸ்தவ ஜீவியத்திற்குப் பிரயோஜனமாயிருக்குமா?

இக்கேள்விகளுக்கெல்லாம் உன் விடை "இல்லை" என்றால் உடனே அந்தச் செய்கையை விட்டுவிடு. விடை சரியாயிருக்குமானால் அதைச் செய்.

ஒன்றை உன் மனதில் வைத்துக்கொள். சில கிறிஸ்தவர்கள் சில இடங்களுக்குச் செல்லுகிறார்கள்; சில காரியங்களைச் செய்கிறார்கள்; ஏனெனில் பிறரை ஆதாயம் பண்ண வேண்டும் என்கிற நோக்கத்தோடே தான். ஆனால் வேறு சிலரோ அதே இடங்களுக்குச் சென்று அதே ஜோலிகளைச் செய்வது மற்றவர்களுக்கு இடறலாகவேயிருக்கிறது. சில வேளைகளில் ஒரு கிறிஸ்தவனுக்குச் சரியான காரியங்கள் வேறொரு கிறிஸ்தவனுக்கு முற்றும் தவறாயிருக்கலாம். ஆகவே நீ சந்தேகப்படுவதான காரியங்களில் இக்கேள்விகளைக் கேள். தேவன் சொல்வது, "நீங்கள் எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" கொலோ 3 : 24. வச. 17ல் இதைவிட பலமாகக் கூறப்பட்டிருக்கிறது. "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்". மேலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" என்று 1 கொரி. 10; 31, 33ல் வாசிக்கிறோம்.

நீ சினிமா ஸ்தலத்திற்குக் கிறிஸ்துவின் நாமத்தில் தேவ மகிமைக்காகப் போக முடியாது என்றாலும் உன் சாட்சியை இடையூறின்றி காக்க முடியாதென்றாலும் அங்கே போகாதே. கிறிஸ்துவின் நாமத்தில் தேவ மகிமைக்காகப் பிறருக்கு இடையூறின்றி சீட்டாட முடியாதென்றால் அவ்விதம் சீட்டாட்டம் ஆடாதே. அவ்விதமே சிகரட் குடிப்பதால் பிறருக்கு இடறலுண்டு. தேவ நாமம் மகிமையடையாது. அதைத் தீண்டாதே. "இதைச் செய்வது தவறா?" என்றல்ல "அது தேவ நாமத்திற்கு மகிமையா?" என்று கேள். "கிறிஸ்துவின் நாமத்தில் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் இதைச் செய்யலாமா?" என்று கேள். தீமைக்கு நான் எவ்வளவு தூரமாயிருக்கக்கூடும் என்பதைத்தான் கவனிக்கவேண்டும். "தீமையாய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விடுங்கள்" என்று வேதாகமம் சொல்லுகிறது. நான் ஏன் என் இரட்சகருக்குப் பக்கமாய் நின்று என் ஆவிக்குரிய ஜீவியத்தையும், என் சாட்சியையும், கெடுக்கிற எல்லா உலகக் காரியுங்களையும் தகர்த்து எறியக் கூடாது?

அதிகாரம் 11.

உன் உள்வான சகாயர் பரிசுத்தாவியானவர்

இதற்கு முந்தின அதிகாரங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தில் காணப்படும் சில பெரிய போராட்டங்களைத் தெரிவித்தோம். ஒரு வேளை இது என்னுல் கூடியதல்ல என்று நினைக்கலாம். ஒரு வேளை நீ ஒருபோதும் ஓர் உத்தம கிறிஸ்தவன் இருக்க முடியாது என்றுங்கூட எண்ணுகிருய். நம்முடைய சொந்த பலத்தால் நாம் ஒரு போதும் அவ்வித கிறிஸ்தவ ஜீவியம் செய்ய முடியாது. கிறிஸ்தவ ஜீவியத்திலே நாம் நமது சொந்த பலத்தாலும், ஆதரவாலும் வாழ முடியாது. ஆனுலோ நமதுள்ளத்தில் போதுமான திறமை வாய்ந்த சகாயரும், நம்மை பலப்படுத்துகிற பரிசுத்தாவியானவரும் இருக்கிருர்.

இயேசுநாதர் இம்மையை விட்டு அகலுமுன் திரும்பத் திரும்பத் தம் சிஷர்களிடம் பரிசுத்தாவியானவர் வந்து அவர்களோடு தங்கி, தேவனுக்காக அவர்களைப் பலப்படுத்துவார் என்று வாக்குத்தத்தம் பண்ணினுர். "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேருெரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோ. 14: 16). "பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது; அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்; நீங்களும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (யோ. 15: 26, 27). "நான்

போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்'' (யோ. 16: 7), என்றார். 1 கொரி. 3: 16ல் "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'' என்றும், 1 கொரி. 6: 19ல் "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா?'' என்றும் வாசிக்கிறோம். பவுல் எபேசு சபையார் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆவிக்குரிய நிறைவைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக, "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

பரிசுத்தாவியானவர் நமது உள்ளான சகாயர். அவருடைய வல்லமையாலும், பலத்தாலும் கிறிஸ்தவ ஜீவியத்திலே எழும்புகின்ற எல்லா போராட்டங்களையும் மேற்கொண்டு, வெற்றி உத்தம கிறிஸ்தவ ஜீவியம்செய்ய முடியும். நமது பெலனே முழுவதும் போதாது. ஆனால் அவரின் பெலனாலே நிச்சயமாகவே முடியும். இயேசு நாதருடைய சொந்த வார்த்தைகள் யோ. 14: 18ல் மூல பாஷையாகிய கிரேக்க மொழியில், "நான் உங்களை அநாதைப் பிள்ளைகளாக விடேன்'' என்றிருக்கிறது. பரிசுத்தாவியானவரின் உள்ளான உதவியின்றி, கிறிஸ்தவ ஜீவியத்தை நடப்பிக்கவோ, நமது பொறுப்புகளில் உரிமை பாராட்டவோ வழியில்லை. நாம் சகாயமற்ற

திக்கற்றவர்களாவோம். கர்த்தராகிய ஆண்டவர் இதை நன்ருய் அறிவார். ஆகவே தாம் தம் சீஷர்களைவிட்டுப் பிரிந்து செல்லும் கடைசி இரவு பரிசுத்தாவியானவரின் வருகையைப்பற்றி அவர்களுக்கு வாக்குக் கொடுத்து, அவர் தாமே அவர்கள் உள்ளங்களிலே வாசம் பண்ணி அவர்களைக் கிறிஸ்தவ ஜீவியத்திற்கும், ஊழியத்திற்கும் பலப்படுத்துவார் என்ருர்.

பரிசுத்தாவியானவர் உள்ளங்களிலே வந்து வாசம் பண்ணுவார் என்னும் வாக்குத்தத்தம் ஒவ்வொரு விசுவாசிக்கும் பிறப்புச் சுதந்திரமாகும். ஒருவன் மறுபிறப்படையும்போது அவன் மறுபிறப்பு பரிசுத்தாவியானவராலான்து. வேறுவிதமாய்ச் சொன்னல் அந்த ஆத்துமாவுக்குள் பிரவேசித்து தன் பிரசன்னத்தினல் தேவனுடைய ஜீவனை அவனுக்குள்ளே நிலைநாட்டுகிருர். அப்பரிசுத்தாவியானவரின் சத்துவத்தாலும், பலத்தாலும் தேவன் எதிர்ப்பார்க்கிறபடி நாம் இவ்வுலகில் ஜீவிக்க அவர் நமக்கு உதவி புரிகிருர்.

பரிசுத்தாவியானவரின் பிரசன்னத்தாலும், வல்லமையாலும் நமக்கு அநேக காரியங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருப்பதை இயேசுநாதருடைய திருமொழிகளாலும், அப்போஸ்தலருடைய வார்த்தைகளாலும் நாம் வேதத்தில் காணலாம்.

1. பரிசுத்தாவியானவர் நமது பலவீனங்களிலே உதவி செய்கிருர் (ரோ. 8; 26). நமக்கு அநேகக் குறைவுகளும், பலவீனங்களுமுண்டு. ஆனலோ பரிசுத்தாவியானவர் நமது குறைவுகளை நீக்கி நமக்குத்

தேவையான பலத்தைக் கொடுக்க எப்பொழுதும் பிரசன்னராயிருக்கிருர். பரிசுத்தாவியானவர் மனுஷீக எந்தப் பெலவீனத்திலும் ஜெயம் தந்து, தம் தெய்வீக பெலனே அளிக்க ஆயத்தமாயிருக்கிருர். மிகுந்த பலவீனமும், சக்தியும் அற்ற எந்த விசுவாசியும் இதை நினைவுகூர்ந்து தைரியம் கொள்ளலாம்.

2. பரிசுத்தாவியானவர் வேதாகமத்திலுள்ள சத்தியங்களே அறிந்துகொள்ள நமக்கு உதவி செய்கிருர் (யோ. 16: 12, 13). வேதாகமத்தை நாம் அறிந்து கொள்வது மனுஷீக அறிவால் அல்ல, தெய்வீக வெளிப்பாட்டினுல்தான் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். தெய்வீக சத்தியத்திலே நம்மை வழி நடத்துவது, பரிசுத்தாவியானவரின் வேலையாகும். உன் முழங்தாளினின்று வேதத்தை வாசித்து, கடின பாகங்களே அவர் தாமே உனக்கு விளக்கி வைக்குமாறு பிரார்த்தனே செய், அவரே வேத நாயகனும், வேத வியாக்கியானியுமாவார் (2 பே. 1: 20, 21).

3. பரிசுத்தாவியானவர் நமக்கு அன்பைத் தருகிருர் (ரோ. 5: 5).

அன்பு நமக்கு அத்தியாவசியமானது. தேவன் மீதும், உடன் கிறிஸ்தவர்கள் மீதும், மற்றவர்கள் மீதும் அன்பு வேண்டும். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பிரதானமான கட்டளே யாதெனில், "உன் தேவனுகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக" என்பதே. பேதுரு ஆண்டவரை மறுதலித்த பின்பே ஆண்டவர் அவனே நோக்கி, "என்

னிடத்தில் அன்பாயிருக்கிறுயா?'' என்றுர். தம் சீஷர்களை அறைகூவி அழைத்து, ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் என்னுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள்'' என்றுர். இன்று காணப்படும் பெருங்குறை கிறிஸ்தவ மக்களிடையே காணும் அன்புத்தாழ்ச்சியே. இதுவே உலகம் இடறி விழுவதற்கு ஏதுவான பெருங்குறையாகும். கிறிஸ்துவின் அன்பை நம்மைச் சூழ இருக்கும் பாவ மக்களிடத்து நாம் காண்பிக்காது போனுல் நாம் எப்படி அவர்களைக் கிறிஸ்துவுக்கென ஆதாயம் பண்ணக்கூடும்?

அன்பே நம் பெருங்குறையும், தேவையுமாகும். இதைப்பற்றிப் படிக்க யோவான் எழுதிய முதலாம் நிருபம் காண்க.

நாம் நம்மை அன்பு மயமாக்கிக்கொள்ள முடியாது. ஆனுல் பரிசுத்தாவியானவர் நமக்கு உதவிபுரிய நீயும் நானும் கேட்டால் அவர் தெய்வீக அன்பை நமது உள்ளங்களிலே ஊற்றி அவ்விதம் செய்வார். ஆகவே நாம் நமது உள்ளங்களிலே அன்பின் அனல் தணிந்து, அன்பற்ற உள்ளம் நம்மில் எழும்பும்போது பரிசுத்தாவியானவரை நோக்கிப் பிரார்த்தித்தால் அவர் நம்மில் அன்பை ஊற்றுவார். அவரிடம் நம்மைச் சமர்ப்பித்து அவருடைய நிறைவினுல் நமதுள்ளங்களை நிரப்பும்படிக் கேட்டால், அவர் தவருமல் அவ்விதமே செய்வார்.

4. பரிசுத்தாவியானவர் பாவத்தின் மீது வெற்றி அருளுகிறுர் (எபே. 3 : 16). அவர் நமக்குத் தரும் இந்த உள்ளான பலன் நமக்குப் பாவங்கள்மீது வெற்றி

பெறச் சக்தி அளிக்கிறது; அதனுல் நாம் சாத்தானை மேற்கொள்ள முடியும். பாவம் உன்னை மேற்கொள்ளும் பொழுதும், பாவம் செய்ய ஆரம்பிக்கும்பொழுதும் உடனுக்குடனே உன் உள்ளத்திலே வாசம் பண்ணுகிற பரிசுத்தாவியானவரை நோக்கி அபயமிட்டால், அவர் உனக்கு நிச்சயமாகவே வெற்றி அருளுவார்.

5. பரிசுத்தாவியானவர் நமது ஜெபங்களிலே நமக்கு உதவி புரிகிருர் (ரோ. 8: 26, 27). முதலாவதாக அவரே நம்மை ஜெபிக்கும்படித் தூண்டிவிடுகிருர். இம்மையில் பரிசுத்தாவியானவர் நமதுள்ளங்களிலே இருந்து நமக்காக வேண்டுதல் செய்யும்பொழுது, இயேசுநாதர் பரத்தில் பரமபிதாவின் வலது பாரிசத்திலிருந்து நமக்காகப் பரிந்து மன்ருடுகிருர். பரிசுத்தாவியானவர் வேளா வேளைகளில் நமதுள்ளத்தை அசைகாட்டிக் குறிப்பாய்ச் சில காரியங்களுக்காகவும், ஆட்களுக்காகவும் ஜெபிக்க நமக்கு மனபாரத்தைத் தருகிருர். நீ இவ்வித சமயங்களிலே அதிக ஜாக்கிரதையாய் ஆவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவரோடு இசைந்து ஜெபித்தால் உத்தம கிறிஸ்தவ வாழ்க்கையிலும், ஜெப ஜீவியத்திலும் வழி நடத்தப்படுவாய். நாம் ஜெபிக்கும்பொழுது எவ்விதம் ஜெபிக்க வேண்டுமென்று ஆவியானவர் நமக்குப் போதிக்கிருர். அநேக சமயங்களிலே நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாதிருக்கிறதினுலே ஆவியானவர் தாமே வாக்குக்கு அடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிருர்.

அவர் உதவி இல்லாமல் நாம் அநேக சமயங்களிலே நமக்குப் பிரீதியான காரியங்களையும், நமது பார்வையில்

தேயான காரியங்களையும் ஜெபத்தில் கேட்டிருப்போம். ஆனால் இவைகளைவிட வேறே காரியங்கள் நமக்கு அதிக நலமாய் இருக்கும் என்று அறிந்து பரிசுத்தாவியானவர் நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள நமக்கு உதவி செய்கிறார். தேவ மகிமையான காரியங்களை நாம் ஆசைப்பட அவர் நம்மிலே கிரியை செய்கிறார். நாம் ஜெபிக்க உதவி செய்கிறார். நமக்குள்ளேயிருந்து அவர் நம்மோடும் சேர்ந்து ஜெபிக்கிறார்.

நம் உள்ளங்களில் எழும்பும் இயற்கையான ஆசைகளைக் கேட்பதும், சிறந்த வார்த்தைகளைச் சொல்வதும் மாத்திரம் ஜெபமல்ல. உத்தமமான ஜெபம் யாதெனில் பரிசுத்தாவியானவர் நமக்குள்ளே பரிசுத்தமான விருப்பங்களை உண்டாக்கி, அவ்வித ஆசைகளை அதிகரிக்கச் செய்து அவைகள் நமக்கு அருளப்படும் நாள் மட்டும் இடைவிடாது தேவனை நோக்கி ஜெபிப்பதே ஜெபமாகும்.

எல்லாவற்றையும் விட சாத்தான் ஜெபத்தை அதிகமாய்த் தாக்குவான். ஆகவே ஒரு சகாயர் நமக்குத் தேவை. ஜெபத்தின் ஆவியை நமக்குத் தருபவரும் நாம் ஜெபிக்கும்படி சக்தி அளிப்பவரும் பரிசுத்தாவியானவரே. நீ ஜெபிக்க முடியா நிலையில் இருந்தால் பரிசுத்தாவியானவரில் சார்ந்துக்கொண்டு, அவர் உன்னை அவ்விதமான நிலமையினின்று விடுவிக்கும்படிக் கெஞ்சி பிரார்த்தனை செய். இது அவர் ஊழியங்களில் ஒன்று. அவர் விருப்பத்தோடு உனக்கு உதவி செய்வார்.

6. பரிசுத்தாவியானவர் தேவ மக்களுக்கு வழி காட்டியிருக்கிறார் (ரோ. 8: 14).

அடிக்கடி நாம் தீர்மானிக்க வேண்டியது இன்னதென்றும், தேவசித்தம் இன்னதென்றும் தெரியாதவர்களாயிருக்கிறோம். நாம் தேவனோடு அந்நியோன்னியமாய் ஜீவித்தால் பரிசுத்தாவியானவர் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே நமக்கு உதவிபுரிந்து, நம்முடைய ஜீவியத்திலே திட்டமும் தெளிவுமாய் நம்மை வழிநடத்த விருப்பமுள்ளவராயிருக்கிறார். கிறிஸ்தவன் தன் அன்றாடக வாழ்க்கையிலே இவ்விதம் நடத்தப்பட தினந்தோறும் பரிசுத்தாவியானவரைக் கேட்கப் பழக வேண்டும். நீ காலையில் விழித்தெழும்பி உன் தொழிலை ஆரம்பிக்குமுன் பரிசுத்தாவியானவர் அந்நாளின் எல்லா நினைவுகளிலும், தீர்மானங்களிலும், செயல்களிலும் உன்னை நடத்தும்படி ஜெபி. அப்புறமும் அந்நாளின் வேளைகளிலெல்லாம் உன் வேலைக்கு நீ போகும்பொழுதும், கஷ்ட நேரங்களிலும், உன் குறைவுகளிலும், மனக் குழப்பங்களிலும் அவரிடம் ஒத்தாசையை நாடி, அவர் உன்னை நடத்தும்படி ஜெபி. அவர் உனக்கு வழிகாட்டியாக வந்திருக்கிறார். அவர் தவறாது உன்னைத் தம்முடைய வெளிச்சத்திலே நடத்துவார்.

7. பரிசுத்தாவியானவர் ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் கனி உண்டாக்குகிறவர் (கலா. 5:22, 23). ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளை ஆவியானவரே அளிக்கிறார். எல்லா கிறிஸ்தவ நற்குணங்களையும் பரிசுத்தாவியானவரால் நமக்குக் கொடுக்கப்படும். ஆகவே இவ்வித நற்குணங்களில் பங்குபெற பரிசுத்தாவியானவரோடு அந்நியோன்னியத்தில் உறவாடு.

அநேக கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்தாவியானவரின் பிரசன்னம் உண்மைப்படவில்லை என்று அறிகிறோம். இது ஆபத்தானது. பரிசுத்தாவியானவர், பிதா, குமாரன் இவர்களைப்போலவே ஓர் ஆளாயிருக்கிறார். அவர் ஒவ்வொரு விசுவாசியின் உள்ளத்திலும் வாசம் பண்ணுகிறார். உன் ஜீவியத்தை முற்றுமாய் அவர் கரத்தில் ஒப்படைத்து அவரே உன்னை நடத்தும்படி பிரார்த்தித்தால் அவர் உன்னை மிகுதியான கனியுள்ள ஜீவியத்திலே நடத்துவார்.

பரிசுத்தாவியானவரோடு அந்நியோன்னிய சகவாசம் செய்யப் பழகவேண்டும். அவரே உன் உள்ளத்திலே வாசம் பண்ணுகிற உண்மையான ஆள் என்று நினை. உன் ஆவிக்குரிய நலத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும் பெருமூச்சு விடுகிறார் என்று சிந்தனை செய். அவருடைய நன்மைகளையும், கிருபைகளையும் உன் எல்லா வழிகளிலும் உனக்கு உதவிபுரிய விருப்பமுள்ளவராய் இருக்கிறார் என்பதையும் கவனி. அவரோடு பழகவும், பேசவும் கற்றுக்கொள். தேவன் உன்னில் நிறைவேற்ற விரும்பும் எல்லா ஆவிக்குரிய கிருபைகளையும் அவரிடம் பெற்றுக்கொள்ள முயற்சி செய். அவர் உன் பரம விருந்தாளி என்றும், உன் ஆத்தும நேசர் என்றும் நினை. அவரே உன் நண்பர், உன் கூட்டாளி, தேற்றரவாளர், வழிகாட்டி, சகாயர், ஆசிரியர். உனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்.

அதிகாரம் 12.

உன் தொழுகை

இயேசுநாதர் சமாரிய பெண்ணிடம் "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார் (யோ. 4: 24). கிறிஸ்தவனுடைய தொழுகையானது முக்கியமாய் ஆவிக்குரிய அப்பியாசமாகும். அதாவது, தேவனைத் தன் இருதயத்திலே இடைவிடாது ஆவியில் வணங்குவதேயாகும். இவ்வணக்கம் இருந்தும் சகல கிரியைகளையும் விட்டுப் பிரத்தியேகமாய்ப் போய்த் தொழும் தொழுகைக்காகவும் நேரங்கள் தேவை. நாம் நம் உள்ளங்களிலே தேவனை இடைவிடாது தொழக்கூடும். இடைவிடாது நாம் ஜெபத்தின் ஆவியிலே இருக்கக்கூடும், எனினும் நாம் முக்கியமாய் ஜெபத்திற்கும், தொழுது கொள்ளுதலுக்கும் பிரத்தியேகமான நேரத்தைப் பத்திரப்படுத்திவைக்க வேண்டும். ஒழுங்கான தெய்வீக வணக்கமும், ஒழுங்கான ஜெப வேளையும் இருக்கவேண்டும்.

நாம் ஏற்கனவே தனி ஜெப ஜீவியத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதால் இங்கு நாம் தேவனை வீட்டிலும், ஆலயத்திலும் ஆராதிப்பதைக் குறித்து மாத்திரம் கூறுவோம்.

குடும்ப ஜெபப் பலிபீடம். தினமும் குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஜெபத்திற்கும், வேத வாசிப்புக்கும் நாம் பிரத்தியேகப்படுத்துவதுதான் குடும்ப ஜெபப் பலிபீடமாகும். பெரிய ஆசீர்வாத முண்டாவதற்குக் குடும்ப

ஜெபத்தைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லை என்று நாம் அறிவோம். குழந்தைகளின் உள்ளங்களில் தேவ பயத்தையும், அன்பையும் ஊட்டக் கூடியதும், சகல குடும்ப மாறுபாடுகள், தொல்லைகள் இவைகளை மட்டுப் படுத்தக் கூடியதும் குடும்ப ஜெபமல்லாது வேறொன்று மில்லை. குறைந்தபட்சம் தினம் ஒருவேளை ஜெபத்திற் கும், குடும்ப ஆராதனைக்கும் நாம் கூடும்பொழுது ஒரு வருக்கொருவர் காணப்படுகிற மனவருத்தங்கள், அன்பு தாழ்ச்சிகள் யாவும் அகன்றுபோம். எந்தப் புருஷனும் மனைவியும் இசையாமல் மனமின்றி தினமும் கூடி ஜெபிக்க முடியாதே. மனவேறுபாடுகள் எழும்பும் போதோ அவர்கள் ஜெபத்தை விட்டுவிட வேண்டும் அல்லது கூடியசீக்கிரம் ஒப்புரவாக வேண்டும். குடும்ப வாழ்க்கைக்குக் குடும்ப ஜெபம் இன்றியமையாதது என்று நான் அறிகிறேன். பெற்றோரும் பிள்ளைகளும் கடவுளின் திருவார்த்தைக்குமுன் முழந்தாள் படியிட்டு அனைவரும் கேட்க ஜெபிப்பதைவிட கிடைக்கக்கூடிய பெரிய சுதந்திரம் வேறொன்றுமில்லையே. குடும்ப ஜெப மின்றி எந்தக் குடும்பமும் உத்தம கிறிஸ்தவ குடும்ப மாகாது என்பது மெய். அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் மெய்யான கிறிஸ்தவ குடும்பங்களல்ல. இது மெய் யாகவே பரிதபிக்கக் கூடியது.

நீ இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாயிருப்பதால் குடும்ப ஜெபத்தை உடனே ஆரம்பி. ஒவ்வொரு நாளும் இதற்கென தனிப்பட்ட ஒரு நேரத்தை அப்புறப்படுத்தி வை. அதிகாலையே ஏற்ற வேளையாயிருக்கலாம். ஒவ்வொரு நாளும் வேதத்தில் ஒரு புத்தகத்திலிருந்து ஓர் அதிகாரத்தையோ அல்லது அதில் ஒரு பாகத்தையோ

வாசி, பின்பு முழங்காலில் நின்று கூடிய அளவு அனை வரும் ஜெபத்தில் பங்கு பெறட்டும். சில நாட்களில் தகப்பனே தாயோ மாத்திரம் ஜெபிக்க நேரம் இருக்கும். பிள்ளைகளும் கூட ஜெபிக்க வேறே நாட்களில் சமயங் கள் கொடுக்கவேண்டும். எல்லோரும் குடும்ப ஆராதனை யில் கலந்து பேசி வேதத்திலுள்ள கடின பாகங்களின் பேரில் தர்க்கம் பண்ண இடந்தரவேண்டும். சில சமயங் களில் பிள்ளைகள் தங்கள் மனதிலுள்ள கேள்விகளைக் கேட்கச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

சாதாரணமாகத் தகப்பனே குடும்பத்தின் தலைவனு யிருப்பதால் அவனே குடும்ப ஆராதனையை நடத்துவான். ஆனாலோ சந்தர்ப்பங்களுக்கு இசைய சில வேளைகளில் மற்றவர்களும் குடும்ப ஆராதனையை நடத்துவதுண்டு. புருஷன் கிறிஸ்துநாதரை அறியாதவனுயிருந்தும் மனைவி ஆராதனையை நடத்த அவன் சித்தங்கொண்டால் அவள் நடத்தலாம். பெற்றோர் விருப்பப்பட்டால் குணப்பட்ட பெரிய பிள்ளை ஆராதனையை நடத்தலாம். புருஷனும் மனைவியும் கிறிஸ்தவர்களானால் தகப்பனே குடும்ப ஆசாரியனுக நடக்கவேண்டும்.

குடும்பத்திலே சிறுவர்கள் உண்டானால் சிறுவர்க் கேற்ற வேத சரித்திரங்களை வாசித்துக் கற்றுக் கொடுத் தல் வேண்டும். குடும்ப ஜெப ஆராதனை காலையும் மாலை யும் நடைபெறுமானால் ஒருவேளை வேத வசனங்களடங் கிய அருமையான புஸ்தகமாகிய "வழிக்கு ஒளி" என் பதை வாசிப்பது நலம். யாவற்றிற்கும் மேலாய் வேதத் தையே தினமும் ஒழுங்காய் வாசிக்கவேண்டும். குடும்ப ஆராதனை ஒரு கிறிஸ்தவ குடும்பத்திற்கு இன்றியமை யாதது எனினும் நாம் பிற அலுவல்களையும் கவனிக்க

வேண்டியது இருப்பதால் வேளாவேளைகளில் குடும்ப ஆராதனைக்கு நேரம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. குடும்ப ஆராதனையில்லாத கிறிஸ்தவ குடும்பம் உத்தம கிறிஸ்தவ குடும்பமல்ல. அப்படிச் செய்யப் பிரயாசிப்பேன் என்பதே நீ தவறுகிறாய் என்பதைக் காட்டுகிறது.

ஐக்கியமில்லாத குடும்பங்களில் இக்காரியம் சிக்கலாயிருக்கிறது. குடும்பத்தின் தலைவன் கிறிஸ்து அற்றவனாய் இருந்தும் வேறே ஆள் குடும்ப ஆராதனை நடத்தலாம் என்ற மனதோடு இருந்தால் அது நடத்தப்படவேண்டும். குடும்பத்தின் தலைவனே குடும்ப ஆராதனைக்குத் தடையாயிருப்பானானால் அது ஆபத்தானது என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. அவ்விதமான காரியங்களிலே அவ்வித ஆளின் இரட்சிப்பிற்காக ஜெபத்தில் போராடவேண்டும். உத்தம ஜெபத்திற்குத் தேவன் ஆச்சரியமாய் பதிலளிப்பார், குடும்ப ஆராதனையே பகிரங்க ஆலய ஆராதனையைவிட அதிக ஆசீர்வாதத்திற்கும், ஆவிக்குரிய பலத்திற்குமுரியது என்று நான் எண்ணுகிறேன். ஆலய ஆராதனையை விட குடும்ப ஆராதனையே நான் முதலில் நடத்த ஆசிப்பேன்.

அநேக தடைகள் இருந்தாலும் குடும்ப ஆராதனையை நடத்து. மந்தமான கிறிஸ்தவர்கள் குடும்ப ஆராதனையிலேயே ஜெபிக்கப் பழகுவார்கள். குடும்ப அல்லல்களையும், தொல்லைகளையும் கொண்டுவந்து தேவ சமுகத்தில் பயமின்றித் தாராளமாய்ச் சொல்லி ஜெபிப்பதும் குடும்ப ஜெபத்தில்தான், ஒரு கிறிஸ்தவ இல்லத்திற்குக் குடும்பத் தொழுகையே பிரதானமானது.

சபை. முதலில் சபையின் அங்கத்துவத்தைப் பற்றிச் சிறிது சொல்லுவோம். ஒரு சபையின் அங்கத்

தினராயிருப்பது ஆத்தும இரட்சிப்புக்கு அவசியமில்லை. எனினும் அங்கத்தினராயிருப்பது கிறிஸ்தவ ஜீவியத்தில் திட்டமாக ஒரு பாகமாயிருப்பதால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் யாதாகிலும் ஒரு ஸ்தலத்துச் சபையில் சேர வேண்டும் என்று நம்புகிறோம். சர்வலோக மெங்குமுள்ள சபையானது கிறிஸ்துவின் சரீரம். ஒவ்வொரு விசுவாசியும் அச்சரீரத்தில் ஓர் அவயவமாயிருக்கிறான். அந்த ஆவிக்குரிய சபையில் சர்வலோகமெங்குமுள்ள அநேகமாயிரமான சபைகளும், கூட்டங்களும் உண்டு. ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், உதவிக்காகவும் ஸ்தலத்துச் சபையோடு இசைந்து ஐக்கியமாயிருக்கவேண்டும். நீ அவ்விதம் செய்வாயானால் அது உன் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், ஜீவியத்திற்கும் பேருதவியாயிருக்கும்.

எந்தச் சபையில் ஒருவன் சேர்வது நல்லது? இதற்கு ஒருவனுடைய விடை யாதெனில், எந்தச் சபை கர்த்தருடைய வேதாகமத்தை விசுவாசித்து அதைப் பிரசங்கிக்கிறதோ அதில் சேர். ஜெபக் கூட்டங்களை நடத்தி ஜெபத்தின் ஆவியோடு இருக்கும் சபையில் சேர். இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே வந்த மனுஷ குமாரனைப்போல் இழந்துபோன ஆத்துமாக்களுக்காக உண்மையான ஆவலும் முயற்சியும் கொண்டு, புதிதாய் இரட்சிக்கப்பட்டவர்களைக் கண்காணித்து, ஊழியனும் சபையுமாகச் சேர்ந்து தூரத்துண்டவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் பரிதபித்து உழைக்கிற சபையோடு இசைந்திரு.

சபை (denomination) பெயர் வித்தியாசங்களைத் தவிர மற்ற விஷயத்தில் அதன் நோக்கம், உப

தேசம், ஆளுகை, கொள்கை முதலான காரியங்களில் உனக்கு ஒத்ததாயிருக்குமாகுல் அதில் சேர்ந்துகொள். உன் சபைகளில் (denomination) செத்ததாயிருக்கிற உன் சொந்த சபையைவிட வேறே பிரிவில் இருக்கிற பிற சபையில் அங்கத்தினனுயிருப்பது நலம். தற்பொழுது வகுப்பு (denominational) வித்தியாசங்கள் குறைந்துகொண்டே போகிற காலத்திற்கு நாம் வந்திருக்கிறோம். நம்மை ஒற்றுமைப்படுத்துவதான அஸ்திபார சத்தியங்கள் விசுவாசம், நோக்கங்கள் இவைகளைக் கவனிக்கும்போதுவகுப்பு(denominational) வித்தியாசங்கள் பெரிய காரியங்களல்ல.

மேலே குறிப்பிட்டது போன்ற சபை உனக்குக் கிடைக்காவிட்டால், உனக்குப் பக்கமான ஒரு சபையில் சேர்ந்துகொள். அச்சபைக்கு ஜெபத்தோடும், உழைப்போடும் சென்று அது கிறிஸ்துவின் மாதிரியான சபையாகத் தக்கதாக முயற்சி செய். அங்குள்ள ஊழியரைப் பற்றியோ அல்லது அச்சபையைப் பற்றியோ குறை கூறுவதில் உன் பலத்தைச் செலவு செய்யாதே. அவர்களில் இருக்கிற நல்ல குணங்களைப் பார்த்துப் பலப்படுத்தப் பிரயாசப்படு. உறுதியாய் நின்று குறைகளைச் சரிப்படுத்தப் பார். குறைகளைச் சீர்படுத்த முயன்று ஒரு வாரமோ, மாதமோ, ஒரு வருடமோ கழிந்தும் குறைகள் நீங்கவில்லை என்று சலிப்புற்றுப் போகாதே. பொறுமையோடு கூடிய அன்பும், ஜெபமும், முயற்சியும் கடைசியாக பலன் தரும். நீ அதிருப்திகொண்டு முறுமுறுத்துத் தனியாகப் போவதால் எவ்வித நன்மையும் உண்டாகாது. அவ்விதம் செய்வது சத்தியத்திற்குத் தடையாய்த்தானிருக்கும்.

ஒரு சபையில் சேர்வதுமட்டும் போதாது. நீ ஒழுங்காய் ஆராதனைகளில் இருக்கவேண்டும். ஒழுங்கீனமாய் ஆராதனைக்குப் போகாதே. ஒய்வுநாள் காலைமாலை ஆராதனையிலும், வார ஜெபக் கூட்டங்களிலும் ஆஜராயிரு. ஆலயத்தின் மற்ற ஆராதனைகளிலும் சந்தர்ப்பங்களுக்கு இசையக் கலந்துக்கொள். எவ்விதத்திலும் ஒய்வுநாள் பாடசாலைக்கு ஒழுங்காய்ச் செல். குறைந்தபட்சம் ஒய்வுநாளில் ஒரு தரமும், ஜெபக் கூட்டங்களிலும் ஒய்வுநாள் பாடசாலை வகுப்புகளிலும் எவ்விதத்திலாகிலும் சேர்ந்திரு. சபை நியமிக்கும் மற்ற கூட்டங்களிலும் கலந்துகொள்.

சபை ஆராதனைகளை நீ அசட்டை செய்ய ஆரம்பித்தால் நீ உன் கிறிஸ்தவ ஜீவியத்தின் போக்கிலே குறையவும் செய்வாய். நீ வழக்கமாகத் தேவனுடைய வீட்டுக்கு உன்னை புறம்பாக்குவாயானால் உண்மையாகவே நீ பின்வாங்கிப் போவாய். தேவன் கிறிஸ்தவர்களின் சபை ஆராதனையை வாஞ்சிக்கிறார். "சபை கூடி வருதலை விட்டு விடாதிருங்கள்" என்று நம்மைத் துரிதப்படுத்துகிறார் (எபி. 10: 25). பிற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஆராதிப்பதால் உண்டாகும் ஆவியின் எழுப்புதல் உனக்குத் தேவை. பிரசங்கப் பீடத்தினின்று வரும் தேவ வசனத்தால் நீ பெலனடையவேண்டும். ஆகவே சபை ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ச் செல். சபை ஆராதனைகளுக்கு நீ ஒழுங்காய் போகாமலிருப்பது இரட்சிக்கப்படாதோருக்கும் அயலாருக்கும் துர்ச் சாட்சியாயிருக்கும். கிறிஸ்தவனாகிய நீயே இதில் அஜாக்கிரதையாய்க் காணப்படுவாயாகில் எப்படி பிறர் ஆலயத்தில் போய்த் தேவனுடைய வார்த்தையைக் கேட்க நீ எதிர்பார்க்க முடியும்?

ஒரு சபையின் அங்கத்தினனுவது மட்டுமல்ல, ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப் போவதுமட்டுமல்ல, அச் சபையின் எல்லா உழைப்புகளிலும், பொறுப்புகளிலும் நீ உரிமை பாராட்ட வேண்டும். நீ சபையில் ஏதாவது ஒரு ஊழியத்தைச் செய்யத் தகுதியுள்ளவனென்று கண்டு, அவ்விதம் செய்ய சபையார் உன்னை அழைத்தால் அதைக் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய். ஓய்வு நாள் பாடசாலையை நடத்த அழைப்புப் பெற்றுல் அதை மனசாட்சியோடும், எல்லாவித சிரத்தையோடும் செய். ஒரு கூட்டத்திற்குத் தலைவனுக நின்று சேவை செய்ய நீ அழைக்கப்பட்டால், பரிசுத்தாவியானவரின் உதவியோடு உன்னுல் ஆனமட்டும் சிறக்கச் செய். நீ சபைக் காரியக் கூட்டங்களிலே ஒரு அங்கத்தினனுக அழைக்கப்பட்டால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு உன்னுல் இயன்றவைகளை நலமாய்ச் செய். எதைச் செய்ய சபை உன்னைக் கேட்டாலும் அதைச் செய். ஒன்றைச் செய்ய உண்மையாகவே நீ திராணியற்றவனுக உணர்ந்தால் மட்டும் அதை விட்டுவிடு. அவ்விதம் செய்யுமுன் ஜெபித்து அப்படிச் செய்.

சபையில் அங்கத்தினனுயிருப்பதோடுகூட பணப் பொறுப்புகளிலும் நீ உன் உரிமையைப் பாராட்ட வேண்டும். சபையார் கொடுக்கும் பணச் சகாயத்தால் தான் சபையின் வேலைகள் நடைபெற வேண்டும். ஆகவே நீ உன் பணச் சகாயத்தை சபைக்குக் கர்த்தருக்காகச் சந்தோஷமாகவும் மனப்பூர்வமாகவும் கொடு. இதைப்பற்றி இன்னும் அதிகமாய்ப் பிந்தின அதிகாரத்தில் நாம் பார்ப்போம்.

சபையானது இவ்வுலகில் கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய வீடாகும். பரத்திலே சேருமட்டும் இப் பூமியிலே, சபையிலே நாம் ஆதரிக்கப்பட்டு ஆறுதலடைந்து பரலோகக் கூட்டத்திற்குத் தகுதியுள்ளவர்களாக வளர்க்கப்படவேண்டும். சபையிலேயே நமது அந்நியோன்னியம் விருத்தியடைய வேண்டும். அங்கேயே நாம் ஒருவருக்கொருவர் நமது பாரங்களைக் கொண்டு வந்து கலந்து பேசி. ஜெபிக்கவேண்டும். அங்கேயே தேவையானபொழுது நாம் நமது ஆவிக்குரிய உதவியை நாடி சில சமயங்களில் நமது சரீர சம்பந்தமான உதவிகளையும் ஒருவேளை அடையலாம். அங்கேயே கிறிஸ்தவர்கள் தேவ வசனத்தால் போதிக்கப்பட்டு விசுவாசத்தில் கட்டப்படவேண்டும். அங்கேயே ஒவ்வொரு ஞாயிறுதோறும் கர்த்தரைத் தேடி அவருடைய பரிசுத்தத்திலே அவரைத் தொழவேண்டும்.

ஒவ்வொரு விசுவாசிக்கும் உடன் விசுவாசியோடு ஐக்கியமிருக்க வேண்டும். இந்த வெளிப்படையான சிநேகம் விசுவாசிகளின் அங்கத்துவ அமைப்பு இதிலே காணப்படுகிறது. நீ உன்னை எல்லா சபை ஸ்தாபனங்களினின்றும் விலக்கிக்கொண்டு சகல விசுவாசிகளோடும் அந்நியோன்னியமாயிருப்பதற்காகவே 'நான் ஒரு சபையிலாகிலும் சேராமல் தனித்து நிற்கிறேன்' என்று எண்ணினால், நீ உன்னையே வஞ்சித்துக்கொண்டாய் என்று உன்னைப்பற்றி நான் பயப்படுகிறேன். இப்படிச் செய்வாயானால் ஸ்தலத்துச் சபையிலிருந்து நெருங்கிய ஐக்கியத்தினால் உண்டாகக்கூடிய உதவியை நீ இழந்து போவாய். சில வேளைகளில் நல்மனதுடைய ஆட்கள் சபையின் அங்கத்தினராய்ச் சேராது தனித்து நின்றார்கள்.

ஆனால் அவ்விதம் செய்ததினால் வழக்கமாய் ஆவிக்குரிய ஜீவியத்தில் நஷ்டம் அடைந்தார்கள்.

நீ உண்மையாகவே ஆண்டவராகிய இயேசுநாதரை உன் இரட்சகராக ஏற்றுக் கொண்டதுண்டானால் உன்னைப்போல் ஆண்டவரை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களோடு சேர்ந்து ஒரு சபையைக் கண்டுபிடித்து அதிலே அங்கத்தினனாய்ச் சேர்ந்துக் கொள்.

இப்பூமியிலே நீ ஒரு குறையில்லாத சபையைக் கண்டுபிடிக்க முடியாதென்பதை மனதில் வை. ஒரு சபையில் சேர எண்ணிக் குறையில்லாத சபையைத் தேடி அலைந்தால் நீ ஒருபோதும் அப்படிப்பட்ட சபையைக் காண முடியாது. ஒரு சபை தேவனுடைய வசனத்திற்கும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ உபதேசத்திற்கும் உண்மையுள்ளதாயிருக்குமானால், அதிலே சேர்ந்து கொள். அச்சபையின் நடக்கைகளிலும், பழக்கங்களிலும் குறை குற்றங்களிருந்தாலும், அச்சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக உன் கடமையைச் செய்தால் உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி காணப்படும்.

அதிகாரம் 13.

உக்கிராண ஊழியம்

நீ குணப்பட்டபொழுது பண விஷயத்திலுங்கூட குணப்பட்டாயா? நீ மாறுதல் அடைந்து இயேசு நாதரை அறிந்து நேசிக்கிறவனுய் ஜீவித்தால் உன்னுல் கூடியமட்டும் அவரைப் பிரஸ்தாபிக்கும்படி ஊழியம் செய்வதோடு மற்றவர்களும் இப்படிச் செய்யப் பண உதவி கொடுக்கப் பிரயாசப்படுவாய்.

ஈகை அன்பின் சாதாரண கிரியைகளில் ஒன்ருகும் என்று அறிகிறோம். கிறிஸ்மஸ் தினத்தில் நாம் நம் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் வெகுமதிகளைக் கொடுக்கிறோம். பிறந்த நாள் கொண்டாட்ட தினத்திலும் நன்கொடைகளைக் கொடுக்கிறோம். வெகுமானங்களைக் கொடுப்பதினுல் நாம் நமது அன்பைச் சாதாரணமாய் வெளிப்படுத்திக் காண்பிக்கிறோம். தேவன் தமது ஒரே பேருன குமாரனைச் சொல்லி முடியாத ஈவாகத் தந்ததினுலேயே நமது பேரிலே அவர் வைத்த அன்பை அறிகிறோம்.

தேவனிடத்தில் அன்புகூராதவர்கள் ஊழியத்துக்காய்ப் பணம் கொடுக்க விருப்பப்படமாட்டார்கள். ஆனுல் முழு மனதோடு ஆண்டவரில் அன்புகூருகிறவர்கள் தேவனுக்காகப் பணம் கொடுப்பது தங்கள் கடமை என்றும் சிலாக்கியம் என்றும் அறிவார்கள்.

வேதாகமம் காணிக்கை கொடுப்பதைப் பற்றி அதிகம் கூறுகிறது. பழைய ஏற்பாட்டிலே கர்த்த

ருடைய ஜனங்கள் எல்லா வருமானத்திலும் பத்தி லொன்றைக் கொடுக்க வேண்டுமென்பது கடவுளது கட்டளை. இந்தத் தசம பாகத்தை அவர்கள் எல்லோரும் செலுத்துவதோடுகூட அவர்கள் தங்கள் ஈகையையும் செலுத்தவேண்டியது.

தசம பாகம் புதிய ஏற்பாட்டின் கட்டளையோ என்று கிறிஸ்தவர்கள் அடிக்கடி கேட்பதுண்டு. தசம பாகம் புதிய ஏற்பாட்டின் கட்டளையல்ல. இக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நம்மில் கிரியை செய்யும் தேவ கிருபை பழைய ஏற்பாட்டிலுள்ள நியாய பிரமாணத்தை விட நம்மிலிருந்து குறைந்ததை எதிர்பார்க்காது என்று நம்புகிறேன். நியாயப் பிரமாணம் எல்லாவற்றிலும் தசம பாகம் கேட்டதினால், கிருபையோ அதற்குக் குறைவாய்க் கேட்பதில்லை. அநேக கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குப் பத்திலொரு பாகத்தை மாத்திரம் செலுத்துகிறார்கள். இதைக் குறித்து அவர்கள் வெட்கப்பட வேண்டியது. தேவன் அவர்களை அதிகமாய் ஆசீர்வதித்திருப்பதால் அவர்கள் அதிகமாய்க் கொடுக்க வேண்டியிருக்கிறது. தேவ கிருபை பூரணமாய் வெளியிடப் படாததற்கு முந்தின பழைய ஏற்பாட்டின் நியாய பிரமாணத்தின் கட்டளைக்கு மாத்திரம் கீழ்ப்படிந்து குறைந்த அளவு கொடுக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டின் பிரமாணம் யாதெனில் (1 கொரி. 16 : 2) "தன் தன் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்கக் கடவன்" என்று இருக்கிறது. "நான் வந் திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்

டிலே சேர்த்துவைக்கக் கடவன்." இவ்வசனத்திலே இரண்டு பிரமாணங்களுண்டு. "வாரத்தின் முதல் நாள் தோறும்" என்கிறது ஒழுங்காகக் கொடுக்கவேண்டும். மற்றொரு முறையும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது "தன் தன் வரவுக்குத் தக்கதாக" என்றிருக்கிறது. புதிய ஏற்பாட்டிலே ஒரு குறிப்பான குறைந்த அளவுமில்லை; குறிப்பான ஓர் அதிகமான அளவுமில்லை; ஆனாலோ ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவன் தன்னை நம்பி தன் கையில் ஒப்படைத்திருக்கிற பணத்தின் அளவுக்குத் தக்க படி கொடுக்கவேண்டும். 11 கொரி. 9: 7ல் சொல்லு கிறதாவது, "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாய மாயும் அல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்பதே. இதற்கு மேலுள்ள வ. 6இலே "பின்னும் நான் சொல்லுகிறது என்ன வெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" என்றும் வாசிக்கிறோம். லூக். 6: 38ல் ஆண்டவராகிய இயேசு சுவாமி சொன்னதாவது, "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர் களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்பதே.

தேவன் உன்னை ஆசீர்வதித்ததற்குத் தக்கபடி கொடு. நீ கொடுக்கும்போது தேவன் உனக்கு அதிக மாய்க் கொடுப்பதால் நீ அதிகமாய்க் கொடுக்கக்கூடும். இப்படியே நீ அதிகம் ஆசீர்வதிக்கப்பட அதிகமாய்க்

கொடுக்கக்கூடும். நண்பனே! இவ்விஷயத்தில் நீ தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சோதித்துப் பார்க்கக் கூடாதா?

சில சகோதரர்கள் தங்களோடு அறிமுகமான ஒரு கிறிஸ்தவ ஊழியனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர் ஒரு பிரசங்கியார். ஏதோ சில காரணத்தால் அவருக்கு எப்பொழுதும் மிதமிஞ்சிய பணக் கஷ்டமுண்டு. இப்படிப்பட்டவனுக்கு இவ்விதமான பணக் கஷ்டமிருக்குமென்பது எதிர்ப்பார்க்காததுதான். இவரைப் பற்றிய பேச்சு வந்தபொழுது ஒருவன் சொன்னதாவது, "இவன் தன் சொந்த பண விஷயத்தில் எப்பொழுதும் பிசினுறியாய்ச் ஜீவிப்பதால்தான் ஒரு வேளை பண விஷயத்தில் ஆசீர்வதிக்கப்படவில்லை" என்பதே. அவர் ஈயாத லோபி பிரசங்கியாயிருந்தார். அநேக லோப குணமுள்ள கிறிஸ்தவர்கள் இருக்கிறுர்கள். அதனுல் அவர்கள் ஆவிக்குரிய தரித்திரர்கள்தான். தேவனுக்கென்று தாராளமாய்க் கொடுக்கிற கிறிஸ்தவனுயிரு. அப்பொழுது தேவன் அதற்குத் தக்கதாய் உன்னைத் தாராளமாய் ஆசீர்வதிப்பார்.

ஏற்கனவே நாம் சொன்னபடி, தசம பாகத்தைக் கொடுப்பது புதிய ஏற்பாட்டின் பிரமாணமல்ல, என்றுலும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், தேவனுக்கென்று படைப்பதில் ஓர் ஒழுங்கு இருக்கவேண்டும். நீ தேவனுக்கென்று கொடுப்பதில் தசம பாகம் மாத்திரம் கொடுக்க முடியும் என்று கண்டால், அதை அதிக ஜாக்கிரதையாகக் கொடு. கொடுப்பதில் ஒரு முறையைக் கையாளு. உன் சம்பளத்தை வாங்கிய உடன் தேவ

னுடைய பாகத்தை எடுத்து அதைப் பிரத்தியேகப் படுத்தி வை. அதை நீ பத்திரப்படுத்துகிற இடத்திலே விட்டுவிடு. நீ அதைச் சாதாரண செலவு செய்யத் தொடாதே. அது தேவனுடையது. இம்முறையைக் கையாடினால் தேவ காரியத்திற்குச் கொடுக்க உன்னிடம் எப்பொழுதும் பணமுண்டு. ஒழுங்காய் கொடுப்பது நல்லது என்று பவுல் அப்போஸ்தலன் அறிந்து வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய காணிக்கையை அப்புறப்படுத்தி வைக்கும்படி சொல்லுகிறான். நீயும் வாரம் ஒருமுறை இம்முறையைக் கையாடினால், தேவனுக்கென்று கொடுப்பது உனக்குச் சுலபமாயிருக்கும். தேவனுக்கென்று நியாயமாய்க் கொடுப்பதில் உனக்குப் பழக்கமாகிவிடும். நீ தவறமாட்டாய்.

தசம பாகம் கொடுப்பதினால் தேவன் உன்னிடம் கேட்ட எல்லாவற்றையும் நீ கொடுத்துவிட்டாய் என்றெண்ணுதபடி எச்சரிக்கையாயிரு. சில கிறிஸ்தவர்கள் தங்கள் வருமானத்தில் பாதியைத் தேவனுக்கென்று கொடுக்கிறார்கள். சிலர் அதற்கு மேலாகக் கொடுக்கிறார்கள். நீ தேவனுக்கென்று எவ்வளவு கொடுத்தாய் என்று தேவன் பாராமல் நீ எவ்வளவு உனக்கென்று வைத்துக் கொண்டாய் என்பதைப் பார்க்கிறார். உன் குடும்பச் செலவிற்கு எவ்வளவு தேவை என்றும், தன்னயமாகவும், புத்தியீனமாகவும் எவ்வளவு செலவழிக்கிறாய் என்றும் தேவன் அறிவார். தன்னயம் முக்கியமான பாவமாகும். நீ இரட்சிக்கப்பட்டவனானால் தன்னயத்தின் ஆவியினின்றும் மீட்கப்பட வேண்டும்.

உன் ஜீவியத்தின் ஒரே நோக்கம் யாதெனில், எதைச் செய்தாலும், எதைச் சம்பாதித்தாலும், அதனால் கிறிஸ்துவின் உனக்குரியவைகளுக்கு ஓர் உக்கிராணக்காரனாகமட்டும் இருக்கிறாய். நீ உன்னை அபாத்திரமான உக்கிராணக்காரனாகக் காண்பித்தால், தேவன் உனக்குரியவைகளை உன்னைவிட்டு எடுத்து வேறொருவன் வசம் ஒப்படைப்பார்.

நீ உன் நாட்களை எப்படி இப்பூமியில் செலவழித்தாய் என்று மட்டுமல்ல, உன் பணத்தை எவ்வாறு செலவழித்தாய் என்றும் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். நீ உன் பணத்தைத் தன்னயமாகவோ, தற்காலத்திற்காகவோ, உலக உல்லாசத்திற்காகவோ செலவழித்தால் உன் இரட்சகருக்கு முன்பாக நிற்கும் அந்நாளிலே வெட்கமடைந்து போக வேண்டியதிருக்கும். ஆனால் உன் பணத்தால் தேவ நாமத்தை மகிமைப்படுத்தி அவர் ஊழியத்தை விருத்தியாக்குவாய் என்றிருக்கட்டும்.

உனக்கு உன் இரட்சிப்பைக் குறித்து சரியான நோக்கமிருக்குமானால் உன் கிறிஸ்தவ உக்கிராண வேலையைக் குறித்தும் சரியான நோக்கமிருக்கும். நீ மீட்கப்பட்டவனானால் உன் சரீரமும், ஆத்துமாவும் ஆண்டவருக்குச் சொந்தம். இவ்வித அர்த்தத்திலே உனக்குள்ளதெல்லாம் தேவனுக்கே சொந்தம். உன் சரீர பெலன், உன் மனம், உன் ஆள் தத்துவம், உன் சம்பத்து, உன் சம்பாத்தியம் அனைத்தும் ஆண்டவருக்கே சொந்தம். உன் கையிலிருக்கும் பணமும், உன் பாங்கிலுள்ளது யாவும் கர்த்தருக்கே சொந்தம். நீ உனக்குச் சொந்தமல்ல. நீ தேவ சேவைக்கென செலவழித்தால், வெளி

யிடங்களுக்குச் சென்று ஆத்தும ஆதாயம் செய்வோர் அடையும் சந்தோஷத்தை நீயும் அடைவாய்.

நீ ஒரு கிறிஸ்தவ குடும்பமல்லாத குடும்பத்திலிருந்தால் தேவனுக்கென்று கொடுப்பது உனக்குக் கடினமாயிருக்கலாம். அப்படியே குணப்படாமலும், மனமில்லாமலுமிருக்கிற ஒரு புருஷனுடைய மனைவிக்கு, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுப்பது கஷ்டந்தான். இவ்விதமான சந்தர்ப்பங்களிலிருக்கிறவர்கள் வீணான உலக காரியங்களுக்குச் செலவிடுவதைவிட கர்த்தருக்கென்று கொடுக்கலாமே. கிறிஸ்தவப் பெண்ணானவள் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ஒன்றுமே கொடுக்க முடியாதென்று காண்பாளாகில் அவள், பிறர் தன்னைக் கவர்ச்சிக்கத்தக்கதாக செலவு செய்கிற பணத்தைக் கிறிஸ்துவைப் பிறர் கவர்ச்சிக்கத்தக்கதாகச் செலவு செய்யட்டும். ஆண்டவரை நேசிக்கிற சின்ன பிள்ளைகளும் தங்களிடமுள்ள சிறிய காசை அவருக்குத் தரலாம். கிறிஸ்தவ பெற்றோராயிருப்பவர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களுடைய பணத்தில் ஒரு பாகத்தைக் கர்த்தருக்கென உற்சாகமாய்க் கொடுக்கக்கற்றுக்கொடுங்கள். குழந்தைப் பருவத்திலேயே இதை அவர்கள் கற்றுக்கொண்டால் இது அவர்கள் வாழ்க்கை முழுவதிலும் இசைந்து வருமே.

உன் வாழ்க்கையில் கர்த்தருக்கென உற்சாகமாய் கொடுப்பதினாலுண்டாகிய ஆசீர்வாதத்தைக் கண்டு கொண்டாயானால், ஈகை உனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தரும், நீ கொடுக்கும் அளவுக்குத் தக்கபடி பெற்றுக்கொள்வாய், தேவனுடைய உக்கிராண ஊழியத்தில் வெற்றியடைவாயாக.

அதிகாரம் 14.

படுகுழிக்கு விலகுதல்

இப்புத்தகத்தின் முடிவுரையாகக் கிறிஸ்துவோடு நீ நடக்கையில் நீ விலக்க வேண்டிய படுகுழிகளைப் பற்றிச் சொல்லுகிறேன். உன் வழியிலே சில இடறல்களை எதிர்க்கவேண்டியதாய் இருக்கும். ஒரு மனிதனுகிலும் குணப்பட்டதிலிருந்து ஆண்டவரைச் சந்திக்கப்போகும் கடைசி நாள் பரியந்தமும் பூரணமாய் நடந்ததில்லை. ஆகவே நீ இடறும் வேளையில் சாத்தான் உன்னை மனஞ் சோர்ந்து போகச் செய்ய இடங்கொடாதே. எழும்பி உன் பாவங்களை அறிக்கை செய்து, புதிய கிருபையைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் முன்னேக்கிச் செல். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடரு.

முதலாம் படுகுழி: உன் கண்களை மனிதர் பேரிலே அதிகமாய் வைக்காதே. தாவீது வெகு காலத்திற்கு முன்பு சொன்னதாவது, "மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" என்பதே (சங். 118: 8.). அநேக வாலிபக் கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை அதிகமாகத் தாங்கள் பூரணமான ஆட்கள் என்று கருதுகிற ஆட்கள் பேரில் வைக்கிறுர்கள். அவர்கள் தப்பிதங்கள் செய்யும்போது இது இவர்களுக்கு விளங்காததால், இவர்கள் சோர்ந்து போகிறுர்கள். வயோதிபரும் பெலசாலிகளுமான மற்ற கிறிஸ்தவர்களை நோக்கிப் பார்த்து அவர்களிடம் உதவி நாடுவது நல்லது

தான். ஆனால் எந்த மேலான கிறிஸ்தவனும்கூட மனுஷனாயிருப்பதினால் நம்மை மோசம் போக்கக்கூடும் என்பதை ஞாபகத்தில் வைப்போமாக. நீ யாரையாகிலும் உத்தம கிறிஸ்தவன் என்று எண்ணி உன் கண்களை அவன்பேரில் வைத்த சமயத்தில் அவன் சுவிசேஷ ஊழியனாயிருந்தும் தவறினால் நீ உன் கண்களை ஒரு வெறும் மனுஷன் மீது வைக்காமல் ஆண்டவராகிய இயேசுநாதர் மீது வைத்தால் இவ்விதமான அனுபவத்தில் நீ ஏமாற்றமடைந்தாலும் தவறமாட்டாய். பவுல் சொல்வதாவது, "பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம்" என்பதே (எபி. 12: 1). உன் கண்களை இயேசுவின்மேல் வைத்திருக்குமட்டும் நீ ஒருபோதும் ஏமாற்றமடையாய்.

இரண்டாம் படுகுழி: உலக காரியங்களின் மீது அதிகமாக உன் கண்களையும், இருதயத்தையும் வைக்காதே. "பண ஆசை எல்லா தீமைக்கும் வேர்" என்று வேதாகமம் கூறுவதை ஞாபகத்தில் வை (1 தீமோ. 6: 10). இதைப் பவுல் வாலிபனான தீமோத்தேயுக்கு எழுதினான். மேலும் அவன் எச்சரிப்பது யாதெனில், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும்,கண்ணியிலும்,மனுஷரைக்கேட்டிலும்,அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" (வச. 9). வேதாகமம் ஐசுவரியத்தையும் உலக மேன்மைகளையும் பற்றி தேவ மக்களை எச்சரிக்கிறது. இயேசுநாதர் ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது கடினம் என்று

அடிக்கடி பேசினர். விதைக்கிறவனுடைய உவமை யிலே தம் சீஷரிடம் சொன்னதாவது, "வசனத்தைக் கேட்டும் உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்க மும், மற்றவைபற்றி உண்டாகிற இச்சைகளும் உட் பிரவேசித்து வசனத்தை நெருங்கிப்போட, அதனல் பல னற்றுப் போகிறார்கள்" என்பதே (மாற். 4: 18). உல கத்தின் ஐசுவரியம் மெய்யாகவே வஞ்சனையுள்ளது. ஒரு வன் இவ்வுலகத்தின் நன்மைகளை எவ்வளவுக்கதிகமாய்ச் சேர்க்கிருனே அவ்வளவுக்கதிகமாக இன்னும் சேர்க்க அதிகமான நேரத்தைச் செலவழிக்க ஆசையாயிருக்கும். சில கிறிஸ்தவர்கள் உலகப் பிரகாரமான காரியங்களில் பங்கு பெறுவதினல் ஜெபத்தையும், வேத வாசிப்பை யும், சபை ஆராதனைகளையும், ஆத்தும ஆதாயத்தையும், மற்ற ஆவிக்குரிய எல்லா அலுவல்களையும் அசட்டை செய்கின்றனர். இந்த உலகப் பொருளை அதிகமாய்ச் சேர்க்க ஆசை இருக்கிறதினல் அவர்களுடைய ஜோ லியே அவர்களுக்குப் பெரிதாயிருக்கிறது. இயேசுநாதர், "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவை களைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். ஆகையால் பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" என்றார் (மத். 6: 19, 20).

எப்பொழுதாவது பண ஆசை உன்னைப் பிடித்து இழுக்கும்போது உன் ஆண்டவரண்டை போய் அவற் றின்மீது வெற்றிக்காக மன்றாடு. பணத்தைச் சம்பா திப்பதில் உன் நோக்கம் முக்கியமாய் அதைத் தேவனுக் கென்று செலவு செய்ய இருக்கட்டும். உன் குடும்பத்

துக்குச் சாதாரண வாழ்க்கைக்குத் தேவையானதைச் செலவு செய்.

மூன்றும் படுகுழி: உலகத்தாரோடே நெருங்கிய நட்புக் கொள்ளாதே. நாம் ஏற்கனவே முந்தின அதிகாரங்களில் சிநேகிதர்களைக் குறித்துப் பேசியுள்ளோம். இங்கே குறிப்பிடும் காரியம் யாதெனில், கிறிஸ்துவின் சிந்தையல்லாத உலக சிந்தையுள்ளவனோடே நட்புக் கொள்ளாதே என்பதே. உலக சிந்தையுள்ள ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் அவன் உன்னை இடுக்கமும் நெருக்கமுமான தேவனுடைய வழியில் நடக்காதபடி ஆவிக்குரிய ஜீவியத்திலே உன்னைப் பின்வாங்கிப்போகச் செய்ய ஒருவனுடைய சிநேகம் உன்னைக் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப் போகச் செய்யுமானால், அவன் சிநேகத்தின் செல்வாக்கிலிருந்து விலகிக்கொள்.

நான்காம் படுகுழி: வீண் பேச்சுக்கும், குற்றச் சாட்டுதலுக்கும் உன்னை ஆளாக்காதே. இந்தக் கசப்பான ஆவியினால் அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கெடுத்திருக்கிறார்கள். பிறரைக் குறை கூறி, குற்றம் கண்டுபிடித்து வீண்பேச்சு பேசுவது இலேசு, என்றாலும் அவ்விதம் செய்வது தன் சொந்த ஆவிக்குரிய ஜீவியத்தின் நலத்திற்கே தீமையாகும். ஒரு சுவிசேஷ ஊழியன் எனக்குச் சொன்னது யாதெனில், "குறைகூற சோதனை வரும்போதெல்லாம் கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்பேன்" என்றான்.

ஐந்தாம் படுகுழி: பெருமை, சுயமரியாதை, தன்னம்பிக்கை என்பவைகளைப் பற்றி எச்சரிக்கையாயிரு. இதை விளக்கப் பின்வரும் வேத வசனங்களை எழுது

கிறேன். "உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" (ரோ. 12: 3). "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக். 4: 10). "அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மன மேட்டிமை." "மேட்டிமையான பார்வையும், அகந்தையான மனமுள்ள துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே" (நீதி. 16: 18; 21: 4). "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவன்" (1 கொரி. 10: 12). "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" என்று சொல்லியிருக்கிறது. "ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" (யாக். 4: 6-7).

முடிவுரையாக, ஏவுதலாகவும், புத்திமதியாகவும் சொல்வது யாதெனில், (1 கொ. 15: 58). ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயுமிருப்பீர்களாக.

ELS

BOOKS THAT RADIATE LIGHT

விலை: ரூ. 1.50